- Dice games: Printouts of nearly 50 games have been taken from various websites, which have been laminated and are used regularly;
- Bingo-like games;
- Number puzzles;
- Hopscotch using numbers;
- Walking on shapes drawn on the floor;
- Memory match games, which we conduct using playing cards;
- Games given in the NCERT math textbooks;
- Snakes and ladders;
- Rocket and parachute game;
- Building blocks.

Through such hands-on activities, our school's students develop their analytical and reasoning skills, which are the most important ones for learning math. In this manner, they are able to apply math skills in their day-to-day activities.

For instance, the Class III students of our school helped me in counting the library books. They arranged the books (purchased this year) in rows and columns entirely on their own and multiplied the numbers to derive the total, without my knowledge, when I was working with the UKG students. I felt very happy and proud of them, knowing that they are eating the sweet that is math and digesting it thoroughly by applying themselves.



**Anitha**
PST
GPS Agaram

# கணிதத்தோடு தொடர்புபடுத்திய ஓவிய வகுப்பறை

என் பெயர் லிங்கேஸ்வரன். நான் பிச்சைவீரன்பேட் அரசு நடுநிலைப் பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். இது நகர்ப்புறம் சார்ந்த பள்ளியாகும் . இங்கு வரும் மாணவர்கள் மிகவும் பின்தங்கிய சமுதாயத்திலிருந்து வருகின்றனர். இங்கு இருக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பெருபாலானோர் கூலி தொழாளர்களாக இருகின்றனர். மாணவர்களுக்கு மகிழ்ச்சி தர கூடிய செயல்பாடுகளைச் செய்யும் போது அவர்கள் ஆர்வமாகச் செயல்படுகின்றனர்.

ஒரு ஓவிய ஆசிரியராக என்னுடைய மாணவர்களுக்கு ஓவியத்தைக் கற்றுத் தருவதற்கு முன்னர் ஓவியத்திற்கு அடிப்படையாக இருக்கும் கணித அடிப்படை கூறுகளான புள்ளி, வளைகோடுகளை வைத்து ஓவியத்தை மட்டும் கற்றுத் தருவதோடு அதைச் சார்ந்த அமைப்பியல் (Topology), வடிவியலுடன் (Geometry) தொடர்புடைய கோலத்தை மாணவர்களுக்குக் கற்றுத்தருவதால் அவர்களது கணிதம் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

## கோலமும் கணிதமும் கற்றல் வெளிப்பாடு:

வடிவம் புரிந்து செயல்படல் (Understanding patterns & performing)
அனுமானித்தல் (Estimation)
படைப்பாற்றல் (Creativity)
செய்முறையைப் பிரதிபலித்தல் (Reflection)
காரணம் காணல் (Logic)
அளவுகள் (Measurement)
கணிதத்தைச் சார்ந்த ஓவியத்தின் அடிப்படை கூறுகள்:
வட்டம் (Circles)
வளைகோடுகள் (Curved Lines)
புள்ளிகள் (Points)
வடிவங்கள் (Patterns)
நேர்கோடு (Straight line)
குறுக்ககுக்கோடு (Cross Line)

மாணவர்களிடம் கணித அடிப்படைக் கூறுகளை அறிமுகப் படுத்திய பிறகு உதாரணத்திற்கு 2,3,4,6 புள்ளிகளை, வளைகோடுகளை பயன்படுத்தி எத்தனை விதமான வடிவக்கூறுகளை ஏற்படுத்த முடியும் என்ற கேள்விக்கு மாணவர்கள் ஏற்படுத்திய வரைபடமே அதற்குச் சான்றாக அமைகிறது.



## ஓவிய வகுப்பறையில் கணிதம் சார்ந்த ஓவியத்தின் விளைவுகள்:

மகிழ்ச்சியான வகுப்பறையாகத் திகழ்தல் (Happiness in Classroom).

தான் இயற்றிய ஒன்றைச் சக நண்பர்களோடு பகிர்ந்து மகிழ்ச்சி காணல்.

ஒரு ஓவியத்தைப் புரிந்து கொண்டு அதுபோல பலவாறு இயற்ற முயற்சித்தல் (Understanding Patterns and emission)

ஒரு சிறிய இடத்தில் பெரிய படத்தை வரைய யூகித்தல் (Estimation)

இதன் மூலம் ஓவிய வகுப்பறையில் ஓவியத்தை மட்டும் நடத்தாமல் அதனோடு தொடர்புடைய கணிதத்தையும் நடத்துவது மாணவர்களுக்கு மகிழ்ச்சி தருவதோடு மட்டுமல்லாமல் அவர்களது சிந்தனைத் திறனையும்(logic, Reasoning, Measurement, Pattern) வளர்க்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதை என் வகுப்பறை நிகழ்வுகள் மூலம் நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது.



**லிங்கேசர்**, தொ.ப.ஆ,
அ.தொ.ப. பிச்சைவீரன்பேட்

# சித்திரம் மூலம் எண்களைக் கற்பித்தல்

## பள்ளியின் பின்புலம்:

எங்கள் பள்ளியில் 75 மாணவர்களும் தலைமையாசிரியர் உட்பட 7 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். பொருளாதாரச் சூழலில் பின்தங்கிய மாணவர்கள் படித்து வருகின்றனர். பெரும்பாலான மாணாக்கரின் பெற்றோர் அதிகாலையிலேயே வேலைக்குச் செல்பவராக இருக்கின்றனர்.

தாங்களாகவே தன் வேலைகளையும் செய்து முடித்துப் பள்ளிக்கு வரும் மாணவர்களாகவே இருக்கின்றனர்.

மாணாக்கர் படிப்பதில் சிறு ஆர்வமற்றவர்களாகவே காணப்பட்டனர்.

விளையாடுவதிலும், கைவேலை (craft work) கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றிலும் ஆர்வமுடன் கலந்து கொள்ளும் பிள்ளைகளாகவே காணப்பட்டனர்.

## நோக்கம்:

ஆசிரியரான எனக்கு, 5 - ம் வகுப்பு படித்து முடிக்கும் குழந்தைகளைத் தானாகவே எந்த ஒரு சூழலையும் சமாளிக்கும் திறன் படைத்த மாணவர்களாக உருவாக்க வேண்டும்.

எந்த ஓர் புத்தகத்தையும் மற்றும் தாம் செல்லும் இடங்களில் உள்ள தகவல்களையும் படிக்கும் திறனை உருவாக்குதல்.

அன்றாட வாழ்வில் பயன்படும் கணக்குகளை (Basic Operations) மாணவர்களுக்கு அறிய வைத்தல்.

## என் மாணவன் பிரித்திவ்ராஜ்:

புதிய கல்வியாண்டில் எனக்கு பொறுப்பாசிரியராகக் கிடைத்த வகுப்பு 5 அதில் 8 மாணவர்கள் இருந்தனர். அனைத்து மாணவர்களும் ஒவ்வொரு அடைவு நிலையில் இருந்தனர். அதில் நான் அதிக முக்கியத்துவம் கொடுத்த மாணவன் 'பிரித்திவ் ராஜ்' ஏனென்றால் எப்பொழுதும் பிற மாணவரோடு சேராமல், அமைதியாக இருந்து வந்தான். அவனின் கூச்ச சுபாவத்தை போக்க வேண்டும் என நினைத்தேன். அதற்கு சில வழிமுறைகளைக் கையாண்டேன்.

சிறு, சிறு வேலைகளில் அவனை ஈடுபடுத்த ஆரம்பித்தேன்.

தினமும் கரும்பலகையில் உள்ள தேதி, நாளை எழுதும் படி கூறினேன்.

அவன் எழுதும் போது தான், எழுத்தும், எண்ணும் (Number) அவனுக்குத் தெரியவில்லை என்பதை உணர்ந்தேன்.

பிறகு ஒவ்வொரு நாளும் (Calender)யைப் பார்த்துத் தேதியை எழுதச் சொன்னேன். மேலும், நாட்களையும் எழுத்தையும் கூட்டி எழுதச் சொன்னேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவது, புத்தகங்களை அடுக்கி வைப்பது போன்ற வேலைகளைச் செய்யும்படி சொன்னேன். இந்தச் செயல்பாடுகள் அவன் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள வழி வகுத்தது. அவனது நோட்டு புத்தகங்களில் எப்பொழுதும் ஏதாவது ஒன்றைக் கற்பனை திறத்தோடு வரைபவனாகவும், வண்ண பென்சில்களைக் கொண்டு மிக நீண்ட நேரம் வண்ணம் தீட்டுபவனாகவும் இருந்தான். இதனால் அவன் வண்ணம் தீட்டுவதில் ஆர்வம்உடையவனாக உள்ளான் என்பதை அறிந்து (Zonal Level Competitions)போட்டிகளுக்குத் தயார்படுத்த அவனுக்கு வண்ணம் சார்ந்தவற்றில் அதிக கவனம் செலுத்தினேன் தினமும் அரைமணி நேரம் சித்திரம் சார்ந்த ஓவியம் காண்பித்து அதை வரைய சொல்வேன். பிற மாணவர்களும் செய்வார்கள். பிரிதிவ் கொஞ்சம் கவனம் செலுத்துவேன்.



எனக்கும் என் மாணவனுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு அவனிடம் பேசிக் கொண்டும் அவன் திறமைகளை ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தேன். அவனுடைய செயல்பாடுகளைத்

தொடர்ந்து கவனித்து வந்தேன்.

அந்த மாணவன் எண்களைக் கூட மறந்துவிடும் சூழலில் உள்ளான் ஆகவே, அவர்கள் புரிந்து கொள்ள எண்களையும் படத்தையும் தொடர்புப்படுத்த முயற்சி செய்தேன்.

மேற்கண்ட செயல்பாட்டின் மூலம் 1 முதல் 10 வரை உள்ள எண்களை எளிமையாக எழுதப் படிக்க வகை செய்தது.

மேலும்,1 முதல் 10 வரை உள்ள எண்களை நினைவில் வைத்துக்கொள்ள அவனையே படங்களை வரைய ஊக்குவித்தேன்.

## கணிதத்தைக் கற்றுத்தர முயற்சித்தல்:

கணிதம் பற்றிய அறிவை எப்படிக் கற்றுத்தருவது என்பதை நினைத்தேன்.

நாள்காட்டியில் உள்ள எண்களை வெட்டி, ஓர் அட்டையில் ஒட்டி வருமாறு கூறினேன். இதன் மூலம் எண்ணின் image மற்றும் அதன் வரிசையை அறிந்து கொண்டான்.

பின் அட்டையில் ஒட்டப்பட்ட எண்களைத் தினமும் அடுக்கும்படி கூறினேன். எண்களைப் பார்க்க, பார்க்க அதன் உருவமானது மனதில் பதிந்தது.

அவன் ஓவியம் வரைவதில் ஆர்வமுடையவன் என்பதால் 10 பறவைகள், 7 பழக்கூடைகளை வரைந்து வா, அதனை சேர்த்து மொத்தம் எத்தனை எனச் சொல் என்று கூறி கூட்டல், கழித்தல் பற்றிக் கற்பித்தேன்.

எம் மாணவன், படங்களோடு தொடர்புப்படுத்திய பாடங்களுக்கு ஆர்வம் காட்டுபவன் என்பதை உணர்ந்தேன். அதற்குத் தக்கவாறு படங்களோடு தொடர்புப்படுத்திய கணக்குகளை அவனுக்கு அறிமுகம் படுத்தினேன். இதன்மூலம் செயல்பாடு (Activity) சம்பந்தமான வினாக்கள் மூலம் கணிதம் பற்றிய அறிவை என்னால் சுலபமாகக் கற்றுத்தர முடிந்தது.

எண்களை இனம் கண்ட பிறகு அதன் மூலம் கூட்டல், கழித்தல் செயல்பாடுகளைக் கற்றுத்தர ஆரம்பித்தேன். ஓர் அட்டையில் (place value) இடமதிப்பை எழுதி பின், கலர் கற்களை அதன் இட மதிப்பிற்கு ஏற்றாற்போல் அடுக்க ஆரம்பித்தேன்.



அதன் மூலம் எளிமையாக இடமதிப்பை மாணவர்களால் அறிய முடிந்தது.

பின் கூட்டல், கழித்தல் கற்றுக் கொண்டான். பொருட்களை எவ்வாறு சேர்ப்பது, பிரிப்பது பற்றி அறிந்து கொண்டான்.

தொடக்கத்தில் பிரித்திவிராஷன் ஆர்வம் காட்டாதவனாக இருந்தான். அதற்குக் காரணமாக இருந்தது எண் என்று தான் நான் கருதினேன். மேலும், எண்களை ஓவியமாகக் கற்றுத்தந்த தருணத்தில் இருந்து அவனது கற்றலில் மாற்றம் ஏற்பட்டது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



**செ ஜாய் லின்டா**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, ஆரியப்பாளையம்,

# குழந்தைகளின் பாடல்களும் புதிர்களும்

## முன்னுரையும் பின்னணியும்

குழந்தைகளின் உலகம் விந்தையானது அவர்கள் எப்போதுமே மகிழ்ச்சியுடன் இருக்கவே விரும்புவார்கள். சென்ற வருடம் முதலாம் வகுப்பில் என் பயணத்தைத் தொடங்கிய போது குழந்தைகளின் மகிழ்ச்சி குறையாமல் கற்றல் சாத்தியமா என்ற கேள்வியே என் மனதில் இருந்தது. கதைகளும் பாடல்களும் என் பயணத்தை எளிதாக்கின. நான் வகுப்பில் பயன்படுத்திய பாடல்கள் மற்றும் கதைகளுள் நான் ஆசிரியர் பயிற்சியில் கற்றவை சில, சாரணர் பயிற்சியில் கற்றுக்கொண்டவை சில மற்றும் சில நடமாடும் நூலகப் புத்தகங்களில் இருந்து பயன்படுத்தியவை. பாடல்களும் கதைகளும் என் மாணவர்களே வகுப்பில் உருவாக்கியவை. ஆம் என் மாணவர்களுக்கு எழுத்துக்களை அறிமுகம் செய்ய, வாசித்தலை அறிமுகம் செய்ய எனக்கு உதவியாக இருந்தவை கதைகளும், அவர்களே உருவாக்கிய பாடல்களும் தான். அவற்றையே அடிப்படையாகக் கொண்டு இந்த வருடம் இரண்டாம் வகுப்பில் படங்களை விவரித்து எழுதுதல், வினா எழுப்புதல் போன்ற திறன்களில் கவனம் செலுத்த விரும்பினேன். ஆனாலும் பாடல்கள் எழுதுவது, தொடர்ந்து கொண்டே தான் இருந்தது.

## படங்களை உருவாக்கி விவரித்து எழுதுதல்

படங்களை விவரித்து எழுதுதலை முதலாம் வகுப்பில் வாய்மொழியாகச் செய்து கொண்டிருந்தோம், இரண்டாம் வகுப்பில் அதை எழுதும் நிலைக்கு மாற்றினோம். கண்ணில்படும் படங்கள், பொருட்கள் என பலவற்றையும் பற்றி விவரித்துச் சொல்வது ஒன்றாம் வகுப்பில் தினமும் நடந்த நிகழ்வு. எனது கைக்கடிகாரம், செல்பேசி என அனைத்துமே அதில் அடங்கும். இரண்டாம் வகுப்பில் ஒவ்வொரு படத்தையும் பொருளையும் பற்றி என் மாணவர்கள் சொல்வதையெல்லாம் கரும்பலகையில் எழுதி, அவற்றை வாசிப்பதற்குப் போதுமான பயிற்சிகள் அளித்தேன், அவர்களே உருவாக்கிய வாக்கியங்கள் என்பதால் எளிதாகப் பயிற்சிகளைப் பின்பற்றி வாசித்தனர். வாசித்தவற்றைத் தங்கள் குறிப்பேடுகளில் எழுதினர். பிறகு தங்களுக்குப் பிடித்த படங்களை வரைந்து அவற்றைப் பற்றி எழுதத் தொடங்கினர். முதல் வருடம் இரண்டிரண்டு வரிகளாக மட்டும் எழுதிப் பழகிய மாணவர்கள், இந்த வருடம் எட்டு வரிகள் வரையில் தாங்களாகவே எழுதும் அளவிற்குக் கற்றலில் மேம்பட்டிருந்தனர்.

**மாணவர்களே உருவாக்கிய சில வாக்கியங்கள்:**

மரம் பெருசா இருக்கும்.
கப்பல், கடல் தண்ணியில ஆழத்துல போவும்.
அணில் பழம் கடிச்சி சாப்பிடும்.
மரத்து கீழ வெளையாடுவோம்.

**குழந்தைகளே உருவாக்கிய பாடல் :**

காக்கா காக்கா! பறந்து வா;
கருப்புக் காக்கா வேகமா வா;
காக்கா உனக்கு சாப்பாடு வேணுமா?
காக்கா உனக்கு மீனு புடிக்குமா?
நான் கிட்ட வந்தா ஓடிபோற;
என் கூட நட்பா இருக்க மாட்ற,
என் கூட விளையாட இங்க வா;
மரத்தை விட்டு இறங்கி வா.

இது போன்று அவர்கள் விவரித்து எழுதியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எந்தக் குழந்தையிடமும் ஏதாவது எழுதச் சொன்னால் கடகட வென படம் வரைவது (அ) வாக்கியங்கள் எழுதுவது அவர்களுக்குப் பிடித்த எளிதான ஒரு செயலாக மாறிப்போனது. மேலும் இது அவர்களுக்குப் பிடித்த ஒய்வு நேர விளையாட்டாகவும் மாறிப்போனது.

## உருவங்களை உருவாக்கி விவரித்து எழுதுதல் :

படங்களை விவரிப்பதில் இருந்து ஒரு மாற்றத்திற்காக 'பட்டாம்பூச்சி , மரம்' என காகிதங்களில் உருவங்கள் செய்து அவற்றைப் பற்றி எழுதினார்கள்.

பட்டாம் பூச்சி கிட்ட போனா பயந்துடும்
பட்டாம்பூச்சி பிடிக்கப் போனா ஓடிப்போவும்

மரத்து மேல கூடு இருக்கும்
பெரிய மரத்துல சின்னதா இலை இருக்கு

## புதிர்களை உருவாக்கி எழுதுதல் :

யார், யார், யார் என்ற பாடம் புதிர்களை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பாடத்தைக் கையாளும் போது புதிர்களைத் தாங்களாகவே உருவாக்கக் குழந்தைகளுக்கு உதவி செய்தேன். ஒவ்வொருவரும் ஒரு பொருளைப் பற்றிய குறிப்புகளைக் கூறி, அக்குறிப்புகளைக் கரும்பலகையில் எழுதி அது என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். காய்கறி என்றவுடன் பல காய்கறிகளைக் கூறினர். பச்சை நிறம் என்றதும் பச்சை நிற காய்கறிகளைக் கூறினர். கொழகொழப்பாக இருக்கும் காய் என்றதும் வெண்டைக்காய் என்று கூறிவிட்டனர்.

குழந்தைகளைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிடமும் ஒரு படத்தை அளித்து புதிர்களை உருவாக்கச் சொன்னேன். யோசிக்கவும், யோசித்ததைப்பற்றி எழுதவும் அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது. ஒரு குழுவில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் ஒரு குறிப்பாவது சொல்ல வேண்டும் என்ற விதிமுறையை வகுத்ததால் அனைத்து மாணவர்களும் சிந்தித்துக் குறிப்புகளை உருவாக்கினர். ஆனால், வீட்டுப்பாடமாக ஏதாவது ஒரு பழம் (அ) காய்கறியைப் பற்றிப் புதிர் எழுதி வரச் சொன்னபோது, பெரும்பாலான மாணவர்கள் புதிர்களைப் போல எழுதாமல், விடையைக் (பெயரைக்) குறிப்பிட்டு விவரித்து எழுதி வந்தனர்.

மீண்டும் இரண்டிரண்டு மாணவர்களாக வகுப்பில் குறிப்புகளை உருவாக்கினர். பிறகு ‘ரோஜாப்பூவே மெல்ல வந்து கிள்ளிவிட்டுப் பேர் சொல்’ விளையாட்டில் மாணவனைப் பற்றிய குறிப்புகளைக் கூறி விளையாடினோம். ‘’அந்தப் பையன் ஒல்லியா இருப்பான், கைல பச்ச கலரு கயிறு கட்டியிருப்பான்’’ என விதவிதமாகக் குறிப்புகளைக் கூறினர். வெளித்தோற்றத்தைப் பற்றிய குறிப்புகளை மட்டும் கூறமால் அவனுடைய தனித்தன்மை, அவன் வகுப்பில் என்னென்ன செய்வான்? எப்படி நடந்துகொள்வான் என்பன போன்ற குறிப்புகளைக் கூற முயற்சி செய்யச் சொன்னேன். அதன்பின் ‘அவள் தினமும் தயிர் சோறு எடுத்துக்கிட்டு வருவாள், அவள் நல்லா நடனம் ஆடுவாள், உன்ன கிள்ளிய பொண்ணு, அவள் வீட்ல மாடு இருக்கு ‘ என்பன போன்ற குறிப்புகளைக் கூறினர்.

## வினாத்திறன் மேம்பாடு :

குழந்தைகள் சிந்திக்க உதவி செய்தவை, அவர்களிடம் கதை சொல்லும் போது கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர்கள் அளித்த பதில்களும் தான் எனலாம். வகுப்பில் கேட்கப்பட்ட கேள்விகள் பெரும்பாலும் உயர்மட்டக் கேள்விகள் எனும் வகையில் அமைந்தவைதான். இந்தப் பயிற்சி. ’காட்டுக்குள்ளே கொண்டாட்டம்’ பாடத்தை நடத்தும்போது இயல்பாகவே குழந்தைகள் வினா எழுப்பினர். ‘இந்த வினாச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும், இவ்வாறு கேள்வி கேட்க வேண்டும்’ போன்ற எந்த உதவிக் குறிப்புகளும் இல்லாமலேயே குழந்தைகள் உருவாக்கிய வினாக்கள் அருமையாக இருந்தன. அது







பள்ளித்தேர்வில் படங்களைப் பார்த்து மாணவர்கள் எழுதிய வினாக்கள்




மாணவர்கள் புதிர் வினாக்கள் எழுதப் பயிற்சி செய்த படம்

மட்டுமன்றி காணும் படங்கள், தாங்களே வரைந்த படங்கள் என அனைத்தையும் பற்றி வினா எழுப்பினர். வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல் எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் அவ்வுரையாடல் எவ்வாறு கற்றலில் குழந்தைகளுக்குத் துணை நிற்கிறது என்பதையும் நேரடியாக அறிந்து உணர்ந்து கொண்டேன்.

## கற்றல் தாக்கங்கள் :

- மொழி கற்றல் செயல்பாடு என்பது மாணவர்களுக்குச் செயற்கையானதாக அன்றி இயற்கையானதாக மாறிப்போனது.
- மொழித்திறன்கள் மட்டுமல்லாது படைப்பாற்றலும் மாணவர்களிடையே வளர்ந்தது.
- விளையாட்டு வழிக்கற்றலின் மூலமாக குழு மனப்பான்மை வளர்ந்தது
- மாணவர்களிடையே சிந்திக்கும் திறன் அதிகரித்து வினாக்கள் எழுப்பும் திறனும் வளர்ந்தது.
- எந்த ஒன்றைப் பற்றியும் விவரித்து எழுதவும் குறிப்புகள் எழுதவும், பாடல்கள் எழுதவும் கற்றுக்கொண்டனர்.
- படங்கள் வரைவது மற்றும் காகித உருவங்கள் செய்வதன் வழியாக மாணவர்களின் அழகியல் உணர்வு மேம்பட்டது.



**கவிதா**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, மணவெளி.

# மொழி கற்றலைக் கடந்து



## வகுப்பறையில் ஓர் ஆண்டு அனுபவம்:

நாடகம், புதிர்கள், பாடல்களை இயற்றுதல், வகுப்பறையைச் சுற்றி வரைதல், தெரிந்த வார்த்தைகளிலிருந்து தெரியாத வார்த்தைகளைக் கண்டறிதல், வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டறிதல், படம் பார்த்து கதை உருவாக்குதல், கேட்ட கதையைக் கற்பனை கலந்து கூறுதல் மற்றும் படங்களைக் கொண்டு பாடல்களைக் கற்பித்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் கற்றலை எளிமையாகவும், சுவாரசியமாகவும் ஆக்க முடிந்தது.

மேற்கூறிய செயல்பாடுகளின் மூலம் கற்பித்தல் நிகழும்போது மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடிகிறது. அவர்களின் புரிதலும் ஆழமாகிறது. மேலும் கேள்வி கேட்பது, கற்பதை தம் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது, சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பது, ஆர்வத்தைத் தூண்டுதல், ஆசிரியரின் பாராட்டுதலால் செயல்பாடுகள் மற்றும் கற்றலில் ஆர்வம் அதிகரித்தல், சுற்றுச்சூழலிலிருந்து கற்றல் மேலும் ஆசிரியருக்கு மாணவர்களின் புரிதல் பற்றிய தெளிவு ஆகியவை சாத்தியமாகிறது. அவற்றுள் நாடகம், புதிர்கள் மற்றும் தெரிந்த வார்த்தைகளிலிருந்து தெரியாத வார்த்தைகளைக் கற்றல், வரைதல் மூலம் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் ஆர்வத்தைத் தூண்டுதல் ஆகியவற்றின் செயல்பாடுகளை இங்கு விவரித்துள்ளேன்.

## நாடகம் மூலம் கற்றலைச் சுவாரசியமாக்குதல்:

குழந்தைகளிடையே சிந்திக்கும் ஆற்றலைப் பெருக்கவும், அவர்களின் தனித்தன்மையை வெளிக்கொணரவும், பயம் மற்றும் கூச்சத்தை விலக்கவும், தன்னம்பிக்கை வளரவும் நாடகம் பேருதவியாக இருக்கிறது.

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் (DIET) பயிற்சிப்பட்டறைக்குச் சென்று வந்த மறுநாள், நாடகம் மூலம் கற்பித்தல் அங்கு நினைவூட்டப்பட்டதால், அதை என் வகுப்பறையில் மாணவர்களிடையே முயற்சிப்பதற்காக அவர்களிடம் கூறினேன்.

## நேர்மை தந்த பரிசு - நாடகம் - கதைச்சுருக்கம்:

இளவரசன் ஒருவன் நேர்மையான பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள விரும்பி அமைச்சர்களின் ஆலோசனையுடன் இளம் பெண்களுக்குப் போட்டி ஒன்றை அறிவித்தான். அதன்படி ஒவ்வொருவரிடமும் ஒரு விதை கொடுக்கப்படும். அதை ஊன்றி வளர்க்க வேண்டும். ஆறு மாதங்களில் யாருடைய செடி நன்றாக வளர்ந்துள்ளதோ அவரே இந்நாட்டின் இளவரசியாவார் என்று அறிவிக்கப்பட்டது. இறுதியாக வெறும் தொட்டியுடன் வந்த பணிப்பெண்ணின் மகளே அவளின் நேர்மைக்காக இளவரசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். ஏனெனில் திறனற்ற விதைகளே வழங்கப்பட்டது.

மாணவர்கள் அனைவரும் சேர்ந்து மேற்குறிப்பிட்ட நாடக வடிவில் உள்ள பாடத்தைப் படித்துப் பார்த்து யார் எந்த கதாபாத்திரத்தை ஏற்று நடிப்பது என்று தாங்களாகவே கலந்துரையாடி முடிவு செய்தனர்.




முதல் கட்டமாக நாடகத்தை ஏற்ற இறக்கத்துடன் வாசித்துப் பழகினர்; அவ்வாறு வாசிக்கும்போது எனது உதவியுடன் வசன உச்சரிப்பை மெருகேற்றிக்கொண்டனர்; பின்னர் தங்கள் வீட்டிலிருந்து நாடகத்திற்குத் தேவையான உடைகள் (புடவை), மணிமாலை, வண்ணக்காகிதங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்தனர். நாடகத்திற்குத் தேவையானவற்றைத் தயாரித்தனர்; அதற்கும் எனது உதவி அவர்களுக்குத் தேவைப்பட்டது. நாடக முயற்சி இதுவே முதல் முறை என்பதால் நான் அவர்களது முயற்சியில் தலையிடாமல் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட உறுதுணையாக இருந்தேன்.

முதல் முறையாக மாணவர்கள் வெட்கப்படுவதைக் காண முடிந்தது. "நான் உன்னை மணம் புரிவேன் என்று இளவரசன் பாத்திரம் ஏற்ற மாணவன் பேசிய போது மற்ற மாணவர் அனைவரும் நகைப்பதைப் பார்த்து "உன்னை இந்நாட்டின் இளவரசியாகத் தேர்ந்தெடுக்கிறேன்" என்று வசனத்தை உடனடியாக மூன்றாம் வகுப்பு படிக்கும் மாணவன் மாற்றிக் கூறியது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

## கற்றலின் வெளிப்பாடு:

- ஆர்வமுடன் கற்றலில் ஈடுபட்டனர்.
- பாடத்தைச் சுலபமாகப் புரிந்து கொண்டனர். உதாரணமாக திறனற்ற விதை என்ற வார்த்தையை மிகச் சரியாகப் புரிந்து கொண்டு 'பூச்சி அரிச்ச விதை' என்று எளிமைப்படுத்திப் பேசி நடித்தனர்.

கூச்சம், பயம் இல்லாமல் ஒருவர்க்கொருவர் உதவி புரிந்து, சுலபமாகக் கிடைத்த பொருட்களைக் கொண்டு நாடகமாக்கினர். இதன் தொடர்ச்சியாக மாணவர்கள் சிறுவர் மலரிலுள்ள ஒரு கதையைத் தேர்ந்தெடுத்து நாடகமாக நடித்தனர்.

## புதிர்கள் மூலம் கற்றலில் சுவாரஸ்யம் கூட்டுதல்:

அடுத்த முயற்சியாகப் புதிர்களை அறிமுகப்படுத்தும் வகையில் புதிர்கள் என்றால் என்ன? என்று கேட்டவுடன் மாதேஷ் என்ற மாணவன் "புதிர்னா புதிர் போடறது'' என்று கூறி, தானொரு புதிர் சொல்வதாகச் சொன்னான்.

'ஒரு யானை மலை மேல ஏறிப் போய் அங்க இருக்கற கடைல ஒன்னு வாங்குச்சாம். அது என்ன ?'

ஒருவருக்கும் விடை தெரியாததால் 'மூச்சு வாங்குச்சாம்' என்று விடையைக் கூறினான்.

## புதிர் - விளக்கம்:

நாம் காணும் பொருட்களையும், செயல்களையும் பிறர் சிந்தித்து அறியும் வண்ணம் மறைபொருளாக உருவாக்கப்படும் இலக்கிய வடிவமே புதிர்கள் என்பதை எளிய முறையில் மாணவர்களுக்கு விளக்கிச் சொன்னேன்.

## புதிர்கள் விடை காணுதல்:

மாணவர்களுக்குப் புதிர்களும் அதற்கு சம்பந்தப்பட்ட படங்களும் கொண்ட பணித்தாள் கொடுக்கப்பட்டது. அவர்கள் சிறிதளவு உதவியுடன் அவற்றை வாசித்து விடை கண்டுபிடித்து எழுதினர். இதையடுத்து படங்கள் இல்லாமல் புதிர்கள் கொடுக்கப்பட்டன.

சிறு குறிப்புகளின் உதவியுடன் மாணவர்கள் உற்சாகமாக அவற்றையும் கண்டுபிடித்தனர். அஞ்சல் பெட்டி, நீர்க்குமிழி, தபால் தலை போன்ற வார்த்தைகளை ஆங்கிலத்தில் மட்டுமே அறிந்திருந்தனர். அவற்றிற்கான தமிழ் வார்த்தைகளை இப்பொழுது கற்றுக்கொண்டனர்.

பின்னர் வெற்றிலை, தேன்கூடு, வெண்டைக்காய், சிலந்திவலை போன்ற எளிமையான படங்களைக் கொடுத்து அவற்றிற்கான குறிப்புகளை எழுதச்சொன்னேன். மிகச் சிறப்பாக முயற்சி செய்து (ஒரு மாணவி தவிர) குறிப்புகளை எழுதினர். அந்த





மாணவிக்கும் உதவி செய்தபின் எழுத முயற்சி செய்தாள்.

இவ்வாறு மாணவர்கள் தாங்களாகவே புதிர்களுக்குக் குறிப்புகள் எழுதியது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. நாடகம் மட்டுமல்லாமல் புதிர்களையும் ஆர்வமுடன் குழுவாக விவாதித்தனர். படம் கொடுக்கப்பட்டால் புதிர்களைக் கண்டறிந்தனர். தாங்களாகவே புதிர்களை உருவாக்கினர்.

## வாசித்தல் அணுகுமுறை:

ஒரு பாடத்தை நடத்துவதற்கு முன்பே வாசித்து புரியாத வார்த்தைகளைத் தெரிந்துகொள்ளும் முயற்சியாக ஒவ்வொரு மாணவரும் அப்பாடத்தில் தமக்குப் புரிந்த வார்த்தைகளை எழுதினர். பின்னர் மாணவர்கள் எழுதிய அனைத்து வார்த்தைகளையும் கரும்பலகையில் எழுதினேன். அவர்களுக்குத் தெரியாத வார்த்தைகளை விளக்கிச் சொன்னேன். இம்முயற்சியின் பலனாகப் பாடத்தை நடத்தும்போது மாணவர்கள் அனைவர்க்கும் அனைத்து வார்த்தைகளும் பரிச்சயமானதாகவும் எளிதில் புரியும்படியாகவும் அமைந்தது.

## வரைதல் - எழுதுவதற்கான அடித்தளம்:

மாணவர்களிடையே எழுதுவதில் ஆர்வத்தைத் தூண்டும் முயற்சியாக, அவர்களுக்குத் தெரிந்த மற்றும் அவர்களைச் சுற்றியுள்ளப் படங்களை வரையச்சொல்லி பின்னர் அவற்றின் பெயர்களை எழுதச் சொன்னேன். இம்முயற்சி அவர்களிடையே எழுதும் ஆர்வத்தை வளர்த்தது. இதைத் தொடர்ந்து ஒரு தலைப்பைக் கொடுத்து உதாரணமாக இயற்கை, மழை போன்ற தலைப்பைக் கொடுத்து அதை வரைந்து அவற்றைப் பற்றி எழுதுமாறு பணித்தேன். இவ்வகைச் செயல்பாடு அவர்களின் எழுத்துத் திறனை மேலும் மேம்படுத்தியது.




**கற்றல் வெளிப்பாடு:** இவ்வகை முன்னேற்றம் அனைத்திற்கும் காரணம் வகுப்பறையில் உள்ள சுதந்திரமே. மேற்கூறிய செயல்பாடுகள் மொழிப்பாடத்தைத் திறம்படக் கற்பதோடு மட்டுமல்லாமல் தயக்கம், கூச்சம் ஆகியவற்றைக் களைந்து தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு ஒரு முழுமையான வளர்ச்சிப் பாதையில் மாணவர்களை வழி நடத்திச் செல்லும் அடித்தளமாகவும் அமைகிறது.



**வ.சுமதி**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, அரியாங்குப்பம்பேட்.

# முதல் வகுப்பிலேயே கதை படிக்கும் மாணவர்கள்

## முன்னுரை

தாய்மொழி ஒருவனது அறிவிற்கான வாசலாகமட்டும் இல்லாமல் பல்வேறு துறைசார்த் தகவல்களை அளிக்கும் மூலமாகவும் இருந்து வருகிறது. அத்தகைய தாய்மொழியைப் பள்ளிக்கல்வியின் ஆரம்பத்திலேயே சிறப்பாகக் கற்பிப்பதன் மூலம் ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு சிறந்த அடித்தளத்தை அமைத்துக்கொடுக்க முடியும். முதல் வகுப்பு மாணவர்கள் எழுத்துக்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை இனங்கண்டறிந்து, சரியாக உச்சரிக்கச் செய்து, அவர்களோடு ஆடிப்பாடி வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி, நாடக நடிகர்களாக்கி எவ்வாறு முதல் வகுப்பிலேயே மாணவர்களைக் கதைகளையும் பாடல்களையும் தாங்களே படித்துப் புரிந்துகொள்ளும் அளவிற்குத் தயார் செய்த கற்றல் - கற்பித்தல் அனுபவங்கள் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

## செயல்பாடுகள்

பள்ளி முன்பருவக்கல்வி (LKG/UKG) முடித்து முதல் வகுப்பிற்கு வரும் மாணவர்களை ஆசிரியர் நன்கு அறிந்திருக்க வேண்டும். அவனது குடும்பச்சூழல், மனநிலை, உடல்நிலை, போன்ற பின்னணிகளைத் தெரிந்திருக்க வேண்டும். ஆசிரியரும் மாணவனும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப ஆசிரியர் மாணவர்களை அரவணைத்துச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் பாடப்பொருள்களைப் பாடல்களுடனும் கதைகளுடனும் இணைத்து ஆடிப்பாடி நடித்துக்காட்ட வேண்டும். முதல் வகுப்பு என்பது எல்லாவற்றிற்கும் முதன்மையான வகுப்பு என்பதையும் மாணவர்களின் வாழ்விற்கான அடித்தளத்தை அமைப்பதற்கான களம் என்பதையும் ஒவ்வொரு ஆசிரியரும் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

## 1.எழுத்துக்களை இனங்கண்டறிதல்

எழுத்துக்களுக்கு இடையே உள்ள குறில் நெடில், சுழி வேறுபாடுகளை அறிந்து அவற்றைச் சரியாகப் பயன்படுத்த ஆசிரியர் மாணவர்களைத் தயார் செய்யவேண்டும். தமிழ்மொழியில் உள்ள குறியீடுகளை அறிமுகம் செய்தல் மூலம் மாணவர்களிடையே எழுத்துக்களைக் கண்டறியும் திறனை வளர்த்து அதன்வழி வாசிப்புத் திறன்களை வளர்க்க முடியும். உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் அறிமுகம் செய்த பிறகு, அவையிரண்டும் சேர்ந்து எவ்வாறு உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகின்றன என்பதை எடுத்துக்கூறி எழுத்துக்களுக்கு இடையேயுள்ள குறில், நெடில் வேறுபாடுகளை அறியும் வண்ணம் எழுத்துக்களை அறிமுகம் செய்ய வேண்டும். ‘அ’ வரிசைப்பிறகு ‘ஆ’ வரிசையில் துணைக்கால் வரும் எனவும், ‘இ’ வரிசையில் மேல்வளைவு (க, கி), வரும் எனவும் (க்கீ), சுழிமேல்வளைவு ஈ வரிசையில் வரும் எனவும். கீழ்ப்பிறை இறங்குகீற்று (1) ( ப, பு, வ, வு) மடக்கேறு கீற்று மடக்கேறு, கீற்றுக்கால் மடக்கேறு (த, து, தூ) ( உ,ஊ) வரிசையில் வரும், கொம்பு (எ) (கெ) (கி, கீ) கொம்புசூழி, எ,ஏ, வரிசையில் வரும், இரட்டைக்கொம்பு வரிசையில் முன் வரும் எனவும், ஒ,ஓ, வரிசையில் முன் கொம்பும், பின்கால்வரும் (கொ, கோ) ஔ வரிசையில் முன்கொம்பும், பின்கொம்புக்கால் வரும் பிறந்துவரும் என உயிர்மெய் எழுத்துக்களை நன்கு அறிமுகம் செய்தல் வேண்டும்.

ட, ண, த, ந, ற, ன, வேறுபாடுகளை நன்கு வலியுறுத்தி அறிமுகம் செய்தல் வேண்டும். ‘டன்னகர’, ‘ண’ ‘தன்னகர’, ‘ந’ ‘றன்னகர’, ‘ன’என “ண,ந,ன” வேறுபாடுகளை நன்கு அறிமுகம் செய்ய வேண்டும். சொல்லின் முதலில் ‘ந’ வரும் எனவும் “ண, ன” சொல்லின் இடையில் வரும் எனவும் (உ.ம்) நட (சரி) னட (தவறு) அறிமுகம் செய்தல் வேண்டும். ஏனெனில் எழுதும் பொழுது பிழைகள் இல்லாமல் எழுதுவார்கள். முதல் வகுப்பு மாணவர்கள் ‘கெ’, ‘கொ’, ‘எ’, ‘ஏ’ வரிசை ‘ஒ’, ‘ஓ’ வகையில் அதிகம் வாசிப்பதில் பிழைகள் ஏற்படும் எனவே எழுத்தின் முதலில் கொம்பு வந்தால் ‘எ’ வரிசையில் வரும் எழுத்து, ‘கெ’ என ஒலிக்க வேண்டும் என நன்கு அறிமுகம் செய்தால் மாணவர்கள் தமிழில் பிழைகள் ஏற்படாது படிப்பார்கள் மற்றும் எழுதுவார்கள்.

மேற்குறிப்பிட்டவாறு தமிழ் எழுத்துக் குறியீடுகளுக்கு உரிய பெயர்களையும் அவற்றை எளிதாக இனங்கண்டறிந்து உச்சரிப்பதற்கான வழிமுறைகளையும் ஒவ்வொரு தமிழ் ஆசிரியரும் அறிந்திருப்பது மிகவும் அவசியம். தொடக்கக்கல்வியின் ஆரம்பத்திலேயே ஆசிரியர் கூடுதல் சிரத்தை மேற்கொண்டு மாணவர்களுக்கு எழுத்துக்களை இனங்கண்டறியும் திறன்களை அளித்து அவற்றை செம்மைப்படுத்துவதற்கான வாசிப்புப் பயிற்சிகளையும் அளித்துவிட்டால் வாசிப்பைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் யாருடைய உதவியும் தேவைப்படாத அளவிற்குத் தற்சார்பு நிலையை அடைந்துவிடுவர்.

எழுத்துக்கள் மற்றும் வாசிப்பை அறிமுகப்படுத்துவதில் இசையுடன் கூடிய பாடல்களும் நடனமும் பெரிதும் உதவி புரியும். நான் என் வகுப்பில் எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் பொழுது, கற்பித்தல் செயல்பாட்டை எளிதாக்கும் வண்ணம் நானே எளிமையாக மெட்டமைத்துப் பாடப்பொருளுக்கு ஏற்றவாறு சிறிய பாடல்களை எழுதி வகுப்பில் தகுந்த குரல் ஏற்றத்தாழ்வுகளோடு பாடிக்காட்டுவேன். மாணவர்களும் என்னுடன் சேர்ந்து பாடுவர். சிலசமயங்களில் பாடுவதோடு மட்டுமல்லாமல் மாணவர்களை உற்சாகப்படுத்த ஆடியும் காட்டுவேன், மாணவர்களும் என்னுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக ஆடிப்பாடுவர். புத்தகத்தில் உள்ள பாடல்கள் மட்டும் அல்லாது சொந்தப் பாடல்களையும் வகுப்பில் பாடுவது மாணவர்களுக்குக் கூடுதலான மகிழ்ச்சியை அளிக்கிறது.

இவ்வாறு பாடல்கள் மூலம் எவ்வாறு உயிரும் மெய்யும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகின்றன என்பதை மாணவர்கள் உணர்ந்துவிட்டால் அவர்களின் வாசிப்புத் திறனை எளிதில் மேம்படுத்த முடியும்.

## 2. வாசிப்பு முனை : Reading Corner

மாணவர்கள் எழுத்துக்களை இனங்கண்டறியச் செய்த பிறகு ‘அனைவருக்கும் கல்வி இயக்ககம்’ (SSA) பள்ளிக்கு வழங்கியுள்ள கதை மற்றும் பாடல் புத்தகங்களை வாசிப்பு முனைச்செயல்பாடாக மாணவர்களுக்கு அளித்து அவர்களின் வாசிப்புத் திறனை மேம்பாடு அடையச் செய்தேன். மாணவர்களுடைய சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதிலளித்து அவர்களின் வாசிப்புத் திறனை மெருகூட்டுவதற்கான அனைத்து உதவிகளையும் புரிந்தேன்.

## 3. நாடகம்: Drama

‘வாசிப்பு முனை’ செயல்பாட்டின் வழியாக மாணவர்கள் வாசித்தறிந்த, அவர்களுக்குப் பிடித்தமான கதைகளை நாடக வடிவில் மாற்றி, மாணவர்களையே பாத்திரங்களாக மாற்றி வகுப்பில் நடிக்கச்செய்தேன். இச்செயல்பாடு வாசிப்பின் மீதான ஆர்வத்தை மாணவர்களிடையே வளர்த்தது. “நான் ராஜாவாக நடிக்கிறேன்”, “நான் யானையாக நடிக்கிறேன் “ என மாணவர்கள் தாமாகவே முன்வந்து நாடகச் செயல்பாட்டில் ஈடுபட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகள் எல்லாம் மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்தோடு மட்டுமல்லாமல் மாணவர்களுக்கும் எனக்கும்

| மாணவர்கள் எழுத்துக்களை எளிதில் இனங்கண்டறிவதற்காக நான் எழுதிய பாடல்கள் | |
|---|---|
| “அம்மா பாரு, அப்பா பாரு<br>ஆடு பாரு ஆமை பாரு<br>இஞ்சி பாரு, இட்டலி பாரு<br>ஈயைப்பாரு, ஈட்டிபாரு<br>இட்டலி மேல ஈயைப்பாரு<br>ஈயைத்தூர ஓட்டிப்பாரு<br>பாரு பாரு நல்லா பாரு<br>அம்மா பாரு, அப்பா பாரு | “பூவுக்குள்ளே தேனிருக்கு, மணமிருக்கு<br>புரிஞ்சிக்கோ, தெரிஞ்சிக்கோ,<br>நெல்லுக்குள்ளே அரிசியிருக்கு, தவிடு இருக்கு<br>புரிஞ்சிக்கோ, தெரிஞ்சிக்கோ<br>பாலுக்குள்ளே தயிர் இருக்கு, நெய் இருக்கு<br>புரிஞ்சிக்கோ தெரிஞ்சிக்கோ<br><br>கா - காவுக்குள்ளே ‘க்’ இருக்கு , ‘ஆ’ இருக்கு<br>புரிஞ்சிக்கோ தெரிஞ்சிக்கோ<br>கா (க்+ஆ) , க்+ஆ = கா |

இடையேயான புரிந்துணர்வையும் நெருக்கத்தையும் வளர்த்தன. நான் எப்பொழுதாவது விடுமுறை எடுத்தால் “ஏன் நீங்கள் நேற்று பள்ளிக்கு வரவில்லை ? என்ன காரணம்?” என்று மாணவர்கள் என்னிடம் முகம் பார்த்துக் கேட்கும் அளவிற்கு அவர்கள் என்னுடன் நெருங்கி உரையாடுவதற்கும் அடிப்படையாக அமைந்தது.

## கற்றல் தாக்கங்கள்:

மாணவர்கள் எழுத்துக்களை இனங்கண்டறிந்து கொண்டனர்.

எழுத்துக்களுக்கு இடையேயுள்ள குறில் நெடில், சுழி வேறுபாடுகளை அறிந்து கொண்டனர்.

மாணவர்களின் வாசிப்புத்திறன் மேம்பட்டுத் தாங்களாகவே கதைகளையும் பாடல்களையும் படிக்கும் அளவிற்கு மேம்பட்டனர்.

வாசிப்பில் தற்சார்பு நிலையை அடைந்ததால் அவர்களுடைய தன்னம்பிக்கை வளர்ந்தது.

மாணவர்கள் தாங்கள் வாசித்த கதைகளில் உள்ள பாத்திரங்களை ஏற்று நாடகங்களில் நடிக்கும் அளவிற்குத் தயாராகினர்.

ஆசிரியர் - மாணவர் இடையேயான நெருக்கமும் புரிந்துணர்வும் மேம்பட்டன.

மாணவர்கள் பாடல்களைத் தாள நயத்தோடு பாடும் திறனைப் பெற்றதோடு ஆடும் திறனையும் வளர்த்துக் கொண்டனர்.



**V. M.பழனி**
தலைமையாசிரியர்
அ.தொ.ப, ஆராய்ச்சிக்குப்பம்

# செய்யுள் இசை பாடலாம் !

**செய்யுளை வில்லுப்பாட்டு இசையுடன் கூடிய பாடலாக மாற்றி எளிமையாக மாணவர்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் கற்பித்தல்**

## முன்னுரை:

வகுப்பறையில் மாணவர்களுக்கு மகிழ்ச்சியான கற்றல் சூழலை உருவாக்குவதே ஓர் ஆசிரியரின் முக்கிய பணியாகக் கருதப்படுகிறது. வகுப்பறைக்குள் மகிழ்ச்சியானக் கற்றல் சூழலை உருவாக்கிவிட்டாலே போதும் கற்றல்-கற்பித்தல் செயல்பாடானது மிகவும் சிறப்பாக நடைபெறும் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. என்னுடைய மூன்றாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் எழுத்துக்களை அறிந்தவர்களாகவும் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் ஓரளவு வாசிக்கும் திறனைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களுக்குத் தமிழ் உரைநடைப் பாடங்களைப் படிக்கும் திறன் இருந்தும் செய்யுள் பகுதியினை வாசிப்பதும் அதன் பொருளைப் புரிந்துகொள்வதும் சற்றுக் கடினமாகவே இருந்தது. செய்யுளை எவ்வாறு எளிய முறையில் கற்பிப்பது என்று ஆழ்ந்து சிந்தித்து, பின் செய்யுளை இசையுடன் சேர்ந்து கற்பித்தால் மாணவர்கள் எளிமையாக விளங்கிக் கொள்வார்கள் என்று முடிவு செய்து, செய்யுள் பகுதியினை நாட்டுப்புறப் பாடல்களைப் போன்று கற்பிக்க முடிவு செய்தேன்.

செய்யுளில் உள்ள சொற்களை மாணவர்கள் முன்பே அறிந்திருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. பொதுவாக அச்சொற்கள் எல்லாம் நடைமுறையில் புழக்கமில்லாதவை. ஆகையால் செய்யுளில் உள்ள கடினமான பெரிய வார்த்தைகளைப் பொருள்கூறிக் கற்பித்து பின் அவ்வார்த்தைகளைத் தொடர்ந்து பல முறை கூற வைத்தேன். அவ்வார்த்தைகளை மாணவர்கள் எளிமையாகச் சரளமாகக் கூறும் வரை அவற்றைத் திரும்பத்திரும்பச் சொல்ல வைத்தேன். செய்யுளில் உள்ள சொற்களை எல்லாம் மாணவர்கள் சரளமாக உச்சரித்த பிறகு செய்யுள் பாடலினை அறிமுகப்படுத்திப் படிக்கவைத்தேன்.

## கற்பித்தல் - கற்றல் படிநிலைகள்:

### செயல்பாடு 1: கடினமான சொற்களைக் கரும்பலகையில் எழுதுதல்

முதலில் செய்யுளில் உள்ள கடின, பெரிய



சொற்களைக் கரும்பலகையில் எழுதி, பின் ஆசிரியர் அச்சொற்களைப் படிக்காமல் அச்சொற்களில் உள்ள எழுத்துக்களை மட்டும் தனித்தனியாகக் கூறி மெதுவாகப் படிக்கும் மாணவனிடம் அச்சொற்களைப் படிக்கச் சொல்லிக்கேட்டேன். அந்த மாணவன் அச்சொல்லைச் சரியாகக் கூறினால் மறுபடியும் எழுத்துக்களைக் கூறச் செய்து பிற சொற்களையும் படிக்கவைத்தேன். ஒருவேளை அந்த மாணவன் சரியாகப் படிக்கவில்லை எனில் பிற மாணவர்களை அச்சொற்களைப் படிக்கச் செய்த பிறகு அதனை எடுத்துக்காட்டி அந்த மாணவனைத் திரும்பவும் படிக்கச் செய்தேன். எழுத்துக்களை மட்டுமே அறிந்த, எளிய சொற்களைக் கூடப் படிக்க முடியாத ஒரு மாணவன் என் வகுப்பில் இருந்தான், இவ்வகையிலான வாசிப்புக் கற்பித்தல் முறை அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தது. மேலும் இச்செயல்பாடு வாசிப்பை எளிதாக்கி கடினமான சொற்களையும் எளிதாகப் படிப்பதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

## செயல்பாடு 2: பாடப்பொருளுக்கேற்ற கதைசொல்லல்

கடினமான சொற்களை அறிமுகப்படுத்திய பிறகு செய்யுள் பாடலினைக் கரும்பலகையில் எழுதி அதை நான் முதலில் படித்துக்காட்டாமல் மாணவர்களைப் படிக்கவைத்தேன். ஏறக்குறைய எல்லா மாணவர்களும் சரியாகப் படித்தனர். எழுத்துக்களை மட்டுமே அறிந்த அம்மாணவனும் செய்யுளில் உள்ள அனைத்துச் சொற்களையும் கூற முயற்சி செய்தான். மாணவர்கள் அனைவரும் படித்தபின் செய்யுளின் பொருள்விளக்கத்தை மாணவர்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அனைத்துச் சொற்களுக்குமான பொருள்விளக்கத்தை எளிமையாக எடுத்துரைத்தேன். மேலும் செய்யுளின் பொருளை மாணவர்கள் உள்வாங்கிக்கொள்ளும் விதமாக ஒரு செய்யுளின் பொருளை விளக்கும் ஒரு கதையைக் கூறினேன். பின் மாணவர்களை அக்கதையைக் கூறும்படி செய்து செய்யுளின் பொருளை அவர்களின் மனதில் ஆழமாகப் பதியச் செய்தேன்.

## செயல்பாடு 3: வில்லுப்பாட்டு

இசையுடன் கூடிய பாடலோடு வில்லுப்பாட்டைப் பயன்படுத்தி செய்யுளைக் கற்பித்தேன்.



இசையோடு இணைந்து செய்யுளைப் பாடிக் கற்பித்து மாணவர்களையும் பாடச்செய்ததால் எந்தத் தடையும் இல்லாமல் எளிமையாகப் பாடினர். திரைப்படப்பாடல் அல்லாத பாடப்பொருள் சார்ந்த ஒன்றை மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பாடுவதைப் பார்க்கும் பொழுது என் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் இருந்தது.

## செயல்பாடு 4: எழுத்துத் திறன் வளர்த்தல்

மாணவர்கள் எழுதும் திறனை மேம்படுத்த வரைபட அட்டையில் செய்யுளை எழுதினேன். நீண்ட ஒலியுடைய எழுத்துக்களையும், குறுகிய ஒலியுடைய எழுத்துக்களையும் மாணவர்கள் எளிதில் வேறுபடுத்தி



அறிவதற்காக அவ்வெழுத்துக்களுக்குத் தனித்தனி வண்ணத்தைத் தீட்டினேன்.

ண,ன,ல,ள,ற,ர, ஆகிய எழுத்துக்களைப் பயன்பாட்டிற்கு ஏற்ப சரியாக இனங்காணவைக்க அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்திப் பொருத்தட்டைகளைத் தயார் செய்து அவற்றை மாணவர்களைப் பொருத்தவைத்துப் பயிற்சிகள்

அளித்தேன். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பயிற்சி அளித்தபோது “அது இல்லடா இது” என்று உற்சாகமாக அவர்களுக்குள் கலந்துரையாடிக்கொண்டே சொற்களுக்கு ஏற்ற பொருத்தட்டைகளைப் பொருத்திக் கற்றுக்கொண்டனர்.

**எ.கா.**

“சாதி இரண்டொழிய வேறில்லை ”

பின் மாணவர்களைப் பல முறை எழுத வைத்தேன்




சாதி இர ..... டொழிய வே ............சா ........

## கற்றல் பிரதிபலிப்புகள்:

- மாணவர்கள் எந்நாளும் மறக்காத வண்ணம் பாடப்பொருள் மனதில் தங்கியது.
- கல்வியாண்டின் இறுதிவரை எப்போது கேட்டாலும் மாணவர்கள் உடனே அப்பாடலைப்பாடும் திறனைப் பெற்றிருந்தனர்.
- கடினமான செய்யுள் பகுதியையே பொருளுணர்ந்து கற்றுத்தேர்ந்த மாணவர்கள் உரைநடைப் பகுதியை யாருடைய உதவியும் இல்லாமலேயே பொருளுணர்ந்து கற்றனர்.
- சராசரி மாணவர்கள் கூட செய்யுள் வாசிப்பில் கற்றுத்தேர்ந்தனர். உரைநடை வாசிப்பிலும் அத்திறன் மேம்பாடு வெளிப்பட்டது.
- வாசிப்புத் திறன் மட்டுமல்லாது இசையமைத்துப் பாடுவதிலும் மாணவர்கள் தங்கள் திறனை வளர்த்துக்கொண்டனர்.
- வில்லுப்பாட்டுக் கற்பித்தல் முறை சில உரைநடைப்பாடங்களைக் கற்பிக்கவும் பயன்பட்டது.



**நாகராஜ்**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, வடுவகுப்பம்

# ல - ள - ழ வேறுபாடு அறிவதற்கான சுவரொட்டி

வகுப்பு : 2 - ஆம் வகுப்பு
பாடம் : தமிழ்
பாடத்தலைப்பு : ல - ள - ழ வேறுபாடு அறிதல்

## கற்றலின் நோக்கங்கள் :

- தாய்மொழியில் தங்கு தடையின்றிப் பேசுதல் மற்றும் எழுதுதல் திறன்களை வளர்த்தல்.
- ல ள ழ வேறுபாடு அறிந்து, அவற்றைச் சரியான இடத்தில் எழுதுதல் மற்றும் ஒலிப்பு முறையைக் கையாளும் திறனை வளர்த்தல்.
- சொற்களஞ்சியம் பெருகுதல்

## கற்றலுக்கான வளங்கள் :

1. வெல்லம்
2. குடை
3. ஆறு, மலை, வரைபடம்
4. நாய் வரைபடம்

## கற்றல் - கற்பித்தல் படிநிலைகள் : நா பிறழ்ச்சி செயல்பாடு:

ஆசிரியர், மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மிட்டாயைக் கொடுத்தல் மிட்டாயை மென்று கொண்டே கீழ்க்காணும் பாடலைப் பாடச்சொல்லி ஆயத்தப்படுத்துதல்.

"ஓடுற நரியில ஒரு நரி குள்ளநரி

குள்ளநரி தலையில ஒரு முடி நரமுடி"

இம்முயற்சியானது "றர," எழுத்தை வார்த்தைகளுடன் தொடர்புப்படுத்தி பேசுவதற்கு உதவியாக இருந்தது

## ல - ழ வேறுபடுதல்:

ஆசிரியர் குடை, மலை ஆகியவற்றைக் காண்பித்து சிறுசிறு தகவல்களை மாணவர்களையே கூறச்செய்தல், அவற்றின் சரியான ஒலிப்பு முறையை ஆசிரியர் ஒலித்துக் காண்பித்தல்.

## ல -ள வேறுபடுதல்:

## எ.கா.1:

ஆசிரியர் பல்வேறு நாய் படத்தைக் காண்பித்து, உற்று நோக்கச்செய்தல், மேலும் மரம், வாள் படத்தைக் காண்பித்து அதைப்பற்றிக் கூறுதல்.

**வால் :** நாய்க்கு வால் மேலே உள்ளதால் அதற்கு மேல்நோக்கு "ல" எழுத வேண்டும்

**வாள் :** மரத்தைக் கீழே அறுக்க வாள் உதவுவதால் அதற்குக் கீழ்நோக்கு "ள" எழுத வேண்டும்.

## எ.கா.2:

ஆசிரியர் ல ள வேறுபாடுகளைக் கற்பிக்க, சிறுகுறிப்புகளைக் கீழ்க்காணும் வகையில் கூறுதல், மேலும், வெல்லத்தைச் சிறிதளவில் மாணவர்களுக்குக் கொடுத்து சாப்பிடச் சொல்லி அதைப்பற்றி கூறுதல்.

**வெல்லம் :** நமக்கு வாய் மேலே உள்ளது அதனால் மேல்நோக்கு "ல்" எழுத வேண்டும்.

**வெள்ளம் :** ஆற்றில் நீர் கீழ்நோக்கி ஓடுவதால் கீழ்நோக்கி "ள்" எழுத வேண்டும்.

மேலும், இதே போன்று பல்வேறு எடுத்துக்காட்டுகளைக் கூறுதல்.

## கற்றல் வெளிப்பாடு :

மாணவர்கள் அவ்வகைக் கற்றல் மூலம் திண்பண்டங்களை ருசித்துக்கொண்டே ல,ள மற்றும் ழ வேறுபாடுகளை இந்தச் செயல்பாடு மூலம் அறிந்து கொண்டதோடு எழுதவும் கற்றுக் கொண்டனர். வரைபடத்தின் மூலம் அவற்றின் பெயர்களை அறிந்து கொண்டனர்.

மேலும், இவ்வகைக் கற்றலின் மூலம் சரியான ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டனர்.



**இராஜேந்திரன்**
தொ.ப.ஆ,
அ.ந.ப, மணலிபேட்

# மாணவர்களிடையே எழுத்தும் வாசிப்பும்

## எழுத்துகளைக் கண்டறிதலில் சவால்:

நான் இரண்டாம் வகுப்பு ஆசிரியை. என் மாணவர்களுள் பலர் எழுத்துகளை அடையாளம் காணவே சிரமப்பட்டனர். நான் பல்வேறு வழிகளில் எழுத்துகளை அடையாளம் காண பயிற்சி அளித்தேன். ஆனால், நான் நினைத்த அளவில் முன்னேற்றம் இல்லை. இந்த நிலையில் இரண்டாம் வகுப்புப் பாடப் பொருளை மாணவர்களிடம் கொண்டு போய் சேர்ப்பது எனக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது. மாணவர்கள் நிறைய முயற்சி செய்தும், பாடப்புத்தகத்தைச் சுயமாகப் படிப்பது என்பது எட்டாக்கனியாகவே தோன்றியது.

## செயல்வழிக் கல்வி:

- பாடப் புத்தகத்தைப் படிப்பது அதுவும் ஆங்கிலப் பாடத்தைப் படிப்பது சவாலாக இருந்த நிலையில் மிக எளிய பாடங்களைத் தேர்வு செய்தேன். (எ. கா) The Magic Porridge Pot பாடத்தை அறிமுகப்படுத்தும் போதே Magic என்பதற்கு Magic show செய்தும் porridge என்பதற்கு வகுப்பறையிலேயே கஞ்சி தயார் செய்தும் pot என்பதற்கு பல்வேறு சமையல் உபகரணங்கள் மூலம் அறிமுகம் செய்தேன். இதே போல் பாடப்பகுதியில் உள்ள பவ்வேறு வார்த்தைகளுக்குப் பவ்வேறு செயல்பாடுகள் செய்தோம்.
- Cook - வகுப்பறையில் கஞ்சி தயார் செய்தோம்.
- stop,hop - சிறு விளையாட்டுகள் மூலம் run, stop, hop போன்ற வார்த்தைகளை அறிமுகப்படுத்துதல். (எ. கா. hop என்ற வார்த்தையை அறிமுகப்படுத்த, முயல் போன்று நடித்துக் காட்டுதல்)
- grandmother, mother - Family Tree ஒன்றை உருவாக்கி அதன் மூலம் உறவுகள் சம்பந்தப்பட்ட வார்த்தைகளை அறிமுகப்படுதுத்துதல்.

மேலும் அந்தப் பாடத்தில் இந்த வார்த்தைகள்



பல முறை வந்துள்ளதால் மாணவர்கள் பாடத்தைப் படிக்க ஆர்வம் காட்டினர். 'நான் ஒரு பகுதி முழுவதும் படித்து விட்டேன்', 'ஒரு பக்கம் முழுவதும் படித்து விட்டேன்' எனப் போட்டி போட்டுப் படிக்க முன்வந்தனர். மேலும், தங்கள் பெற்றோர்களிடமும் படித்துக் காட்டி பெருமைப்பட்டனர். இது அவர்களின் ஆர்வத்தைத் தூண்ட, அடுத்த பாடங்களையும் முழுமையாகப் படிக்க முன் வந்தனர். முயற்சி செய்து வெற்றியும் காண்கின்றனர். இதன் மூலம் அவர்களுக்கு உற்சாகமும் மேலும் நிறைய புத்தகங்கள் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அதிகரித்துள்ளது.

## கற்றல் வெளிப்பாடு:

எழுத்துகளைக் கண்டறியவே சிரமப்பட்ட மாணவர்களுக்குத் தற்போது புத்தகங்களைப் படிக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது. இம்மாற்றம் பல்வேறு செயல்திட்டங்களை வடிவமைத்ததன் மூலம் சுலபமானது. ஒரே செயல்பாட்டின் மூலம் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்துவது சிறிது கடினம் என்று தோன்றியதால், ஒரே கருத்தை உணர்த்த பல்வேறு செயல்பாடுகள் வடிவமைத்ததன் மூலம் கற்றல் கற்பித்தல் இனிதே நடைபெற்றது. மேலும், என் வகுப்பில் ஒரு மாணவன் மட்டும் யாருடனும் பேசவோ, விளையாடவோ, சேர்ந்து சாப்பிடவோ, தனக்குத் தெரிந்தவற்றைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளவோ முன்வந்ததே இல்லை. பல முயற்சிகள் செய்தும் சோர்வாகவே காணப்பட்டான். ஆனால், படிப்பில் முதல் மாணவன். தற்போது வடிவமைத்த செயல்பாடுகள் மூலம் அவனும் ஈர்க்கப்பட்டு, அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்று, எல்லா மாணவர்களுடனும் பேசவும் விளையாடவும் முன்வருகிறான்.



**மோ.வனிதா**

தொ.ப.ஆ,

அ.தொ.ப, வடுவகுப்பம்



# கற்றலை சுவாரசியமாக்கிய வகுப்பறைச் செயல்பாடுகள்- ஒரு பகிர்வு

என் பெயர் லதா நான் அரசு தொடக்கப்பள்ளி, பிள்ளையார்குப்பம் கிராமத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். விவசாயம் அதிகம் உள்ள கிராமம் பிள்ளையார்குப்பம், இங்கு பலதரப்பட்ட பின்தங்கிய மாணவர்கள் எங்கள் பள்ளியில் பயிலுகின்றனர். நான் மூன்றாம் வகுப்பு குழந்தைகளுக்கு வகுப்பு ஆசிரியராக உள்ளேன்.

பொம்மலாட்டம், நடிப்பு, பாடல் ஆகியவற்றின் வாயிலாக கற்றல் - கற்பித்தல் செயலில் ஈடுபடுவது, மேலும் குழந்தைகளிடம் தமிழ் உணர்வுகளையும், கலாச்சாரத்தையும் பின்பற்றச் செய்தல் ஆகியவற்றில் மிக முனைப்புடன் செயல்படுகிறேன்.

## எதிர்காலச் சமூகத்திற்கு அடித்தளம் அமைத்தல்

வருங்கால மாணவ சமூகத்திற்கு நான் கற்றுக்கொடுப்பது - எதிர்காலத்தில் நாம் நிறைய சவால்களைச் சந்திப்போம் அதனைக் கண்டு துவண்டு விடாமல் முயற்சி ஒன்றையே நாம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தான்.

## நான் வகுப்பறையில் எதிர்கொண்ட சவால்கள்

1. வெவ்வேறு சூழ்நிலையில் வரும் குழந்தைகளை ஒரு முகப்படுத்துவது.

2.போதிய பண வசதியின்மை.

3.தாழ்வுமனப்பான்மை

4.கற்றலில் குறைபாடு

## சவால்களை எதிர்கொண்ட விதம்

1.வெவ்வேறு சூழ்நிலைகளில் இருந்து வரும் குழந்தைகளைக் கவரும் வகையில் எனது வகுப்பறையை வண்ண மயமாக்கினேன். ஆர்வமுடன் எனது வகுப்பறையில் நுழையும் அளவிற்கு மாற்ற முற்பட்டேன். கற்றல் இனிமையாக அமைய வேண்டுமெனில் வகுப்பறை அழகாக அமைய வேண்டும் என்பது எனது கருத்து.

2.பாடம் தொடர்பான செயல்திட்டங்களை மாணவர்கள் செய்து பார்த்துக் கற்றல் சிறந்ததாக அமையும், அதற்குப் பணம் ஒரு தடையாக



இருக்கக் கூடாது என்பதால், ஒவ்வொரு செயல்திட்டத்திற்கும் தேவையான பொருட்களை நானே வாங்கிக் கொடுத்து அவர்களைக் கற்றல் தொடர்பான செயல் திட்டத்தில் பங்கு பெறச் செய்து மகிழச் செய்தேன்.

3.தாழ்வு மனப்பான்மை கொண்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களிடம் வகுப்பறை மேலாண்மைப் பொறுப்பை ஒப்படைத்தல் மூலம் அவர்களிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையை குறைத்தல். இதனால் தலைமைப்பண்பு மற்றும் தன்னம்பிக்கை வளர்ந்து கற்றலிலும் ஆர்வம் செலுத்த ஆரம்பித்தனர்.

4.கற்றல் குறைபாடு உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சிறப்பு மாலை நேர வகுப்பு மூலம் தீர்வு காணுதல்.

## நோக்கத்தை அடையத் திட்டமிட்ட விதம் - பாடல்கள்

மாணவர்களுக்குப் பாடல் என்றாலே மிகவும் பிடித்த ஒன்று என்பது நாம் அறிந்ததே! அதே சிந்தனையோடு என் வகுப்பறையில் நுழைந்து நான் மாணவர்களிடம் ஒரு கேள்வி எழுப்பினேன்.

மாணவர்களே! விளையாட்டு, பாடல், நடிப்பு, கலந்துரையாடல் இதில் உங்களுக்கு எதில் பங்கேற்க மிகவும் பிடிக்கும் என்றேன். உடனே மாணவர்கள் சற்றும் யோசிக்காமல் பாடல் என்று கூறினார்கள்.

ஒன்றாம் வகுப்பு ஆசிரியராக நுழைந்தேன் தற்போது அதே குழந்தைகளுக்கு நான் மூன்றாம் வகுப்பு ஆசிரியர். தமிழ்ப் புத்தகத்தில் உள்ள ஒன்று, இரண்டு, மூன்றாம் வகுப்பு வரை இடம்பெற்றுள்ள பாடல்களை எமது மாணவர்கள் ஓசை நயத்துடன் பாடுவார்கள்.

பாடப்புத்தகத்தில் உள்ள பாடலை மாணவர்களுக்கு எளிதில் கொண்டு சேர்த்து விடுவதில் நான் முனைப்புடன் இருப்பேன். ஆகவே நானே ஒவ்வொரு பாடலுக்கும் சொந்தமாக இசையமைத்து பாவனையுடன் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது அனைத்து குழந்தைகளும் மகிழ்ச்சியுடன் கற்றலில் ஈடுபட்டனர்.

## பள்ளிக்குழந்தைகளின் குடும்பச் சூழல்

பின்தங்கிய சூழ்நிலையில் இருந்து வரும் எங்கள் பள்ளிக்குழந்தைகளுக்குப் பெற்றோரின் கவனிப்பு மிகவும் குறைவு மற்றும் படிப்பறிவு இல்லாதவர்கள். ஆகவே பெற்றோரிடமிருந்து கற்றலுக்கான உதவி கிடைக்கப்பெறாதவர்கள் மாணவர்கள்.

## எமது பள்ளிக் குழந்தைகளின் கற்றலுக்காக நான் எடுத்த முயற்சி

நான் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இடம் பிள்ளையார்குப்பம் கிராமம். நானும் அரசுப் பள்ளியில் படித்தவள் தான். அந்தச் சூழ்நிலையில் வந்த எனக்குப் பெற்றோர்களின் மனதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

எங்கள் ஊர் பள்ளியில், தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு மட்டும் 2016 - ல் இதுவரை எனது வீட்டில் 5 - மணி முதல் 8 - மணி வரை மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறேன். ஒவ்வொரு



மாணவனிடமும் தனிக்கவனம் செலுத்துவதால் கற்றல் முன்னேற்றமடைகிறது. கற்பித்தல் மட்டும் அல்லாமல் சமுதாயத்தில் நாம் எப்படியெல்லாம் வாழ வேண்டும், கற்றுக்கொள்ள வேண்டும் முயற்சி, தன்னம்பிக்கை, தாழ்வுமனப்பான்மை அகற்றல், பெரியோரை மதித்தல் எனப்பல தரப்பட்ட சமூக விழிப்புணர்வு வீடியோவும் காண்பித்து வருகிறேன். என் மாணவன் எதிர்காலத்தில் இச்சமுதாயத்தில் நல்ல குடிமகனாக வர வேண்டும் என்பதே எனது ஆசை. அவனது வெற்றிக்கு நான் ஒரு புள்ளியாக உள்ளேன் என்பது என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது.

ஆசிரியர் பணி அறப்பணி, என்றும் எனது சேவை தொடரும்...



**லதா**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, பிள்ளையார்குப்பம்.

# மெல்லப் பயிலும் மாணவர் - ஓர் அனுபவம்

கற்றல் திறன் குறையுள்ள, மெல்லப்பயிலும் மாணவர்களுக்குச் சிறப்புப்பயிற்சி அளிக்கும் வகையில், என் வகுப்பில் ஒரு மாணவனுக்குக் கற்பித்ததில் ஏற்பட்ட அனுபவத்தை இங்குப் பகிர்கிறேன்.

## வாசிப்பதில் ஏற்பட்ட சவால்

நான் 5 - ம் வகுப்புக்கு இந்த ஆண்டு பாடம் கற்பித்தேன். கற்றல் திறன் குறைந்த மாணவர்களை அதிகம் கொண்ட வகுப்பு அது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய செய்தி என்னவென்றால் அவர்கள் மெய் எழுத்துகளைப் படிக்க மிகவும் சிரமப்பட்டனர். ஒரு கட்டத்தில் நானே சோர்ந்து போனேன். அந்த மாணவன் முயற்சி செய்கிறான் அவனால் நினைவில் வைத்துக் கொள்ளமுடியவில்லை என்பது புரிந்தது.

## சவாலை எதிர்கொண்ட முயற்சி

ஒருநாள் நான் அந்த மாணவனிடம் நீ தமிழ்ப்பாடத்தில் உள்ள பொருள் கூறுக பயிற்சியில் இருந்து ஒரு வார்த்தையைத் தேர்ந்தெடுத்து அதன் பொருளைச் சொல்லிக்கொண்டே பார்த்து 10 முறை எழுது என்று கூறினேன், அவனும் நித்தம் - நாள்தோறும் என்ற வார்த்தைகளை எழுதிவிட்டு மிஸ் நான் பார்க்காமல் எழுதுகிறேன் என்று கூறினான். நான் என் அருகிலேயே நிற்க வைத்து எழுதச்சொல்ல, அவனும் பிழையின்றி எழுதினான். இப்போது இந்த வார்த்தையை எழுத்துக் கூட்டிச் சொல் என்று கூறினேன். அவனும் நா, ள், தோ, று, ம் என்று படித்தான். வடிவத்தை உள்வாங்கி அவன் ஊகமாக உச்சரிக்கிறான் என்பது எனக்குப் புரிந்தது. அதே வழியைப் பின்பற்றி அவனைப் படிக்க வைத்த போது, துவக்கத்தில் 10 முறை எழுதி, பின் மனப்பாடம் செய்தவன் 5 முறை, 2 முறை எனச் சுருக்கி கடைசியில் பாடத்தில் உள்ள அனைத்துப் பயிற்சிகளையும் எழுதி முடிக்கும் போது தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் இனம் காணும் அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறான். 3 வருடங்களாக இதைச் செய்ய பல்வேறு வழிகளைப் பின்பற்றிய போது கிடைக்காத பலன், அவன் பாடத்தையே படிக்க வைத்த போது கிடைத்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

## கற்றல் வெளிப்பாடு

எழுத்து தெரிந்தால் தான் படிக்க வைக்க முடியும் என்ற என் எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டேன். ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு திறமை இருக்கும் என்பதை மேலும் அழுத்தமாக இந்தச் சம்பவம் நம்ப வைத்தது. அவனை மேலும் ஊக்கப்படுத்தி பாடத்திற்குத் தொடர்பில்லாத பல்வேறு வார்த்தைகளைக் கொடுத்துப் படிக்க வைத்துப் பயிற்சியளித்து, அவனை ஊக்கப்படுத்த சிறு பரிசுகள் அளித்தபோது அவன் மேலும் ஆர்வமாக என்னுடன் சேர்ந்து படித்தான். தினமும் இரண்டு வரிசை உயிர்மெய் எழுத்து வரிசை கொண்ட சொற்களை தொகுத்து அவனைப் படிக்க வைத்தேன்.

உதாரணமாக,

### முதல் நாள்:

க், க, கா வரிசை எழுத்துக்களைக் கொண்ட சொற்கள்

கட்டம், காகம், மாதம், வானம்

### இரண்டாம் நாள் :

க், க, கா, கி வரிசை எழுத்துகளைக் கொண்ட சொற்கள்

கிண்ணம், காகிதம், கிராமம், சிரம்

### மூன்றாம் நாள் :

க், க, கா, கி, கீ வரிசையில் கிரி, தீவிரம், நீர், மீன், இப்படியே ஒவ்வொரு வரிசையாகச் சேர்த்துப் பயிற்சி அளித்து பிறகு வாக்கியங்களைப் படிக்க வைத்தேன். அந்த மாணவனைப் பார்த்து அவனைப் போல் இருந்த மற்றொரு மாணவனும் ஆர்வமாகிப் படிக்க ஆரம்பித்தான். ஒரு எழுத்தைக் கூட இனம் காண முடியாமல் சிரமப்பட்டதை 3 வருடங்களாகப் பார்த்த எனக்கு அவனைப் படிக்க வைத்தது மிகுந்த மனநிறைவை அளித்தது. இனிவரும் ஆண்டுகளில் இது போன்ற மாணவர்களையும் படிக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு வந்தது.



**ரோஸலீனா**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, வேல்ராம்பேட்.

# வாசித்தல் திறனை வளர்க்கும் வாசித்தல் திருவிழா




## எனது பள்ளியும், வகுப்பறையும்:

எனது பள்ளியில் 43 மாணவர்களும், 4 ஆசிரியர்களும் இணைந்து செயல்படுகிறோம். கடந்த மூன்று வருடங்களாக இதே பள்ளியில் LKG, UKG, ஒன்றாம் வகுப்புகளுக்குத் தமிழ் கற்பித்து வருகிறேன். எனது வகுப்பறையை Print rich சூழலாக வைத்திருப்பேன். எனக்கு தமிழ் பாடம் கற்பித்தலில் ஈடுபாடும் மகிழ்ச்சியும் ஏற்படுவதால், எப்பொழுதும் இவ்வகுப்புகளுக்கு நானே தமிழ் கற்பிக்கிறேன் என சக ஆசிரியர்களிடம் கூறுவேன். மழலையர் வகுப்பு குழந்தைகளுக்குத் தாய்மொழியானத் தமிழைக் கற்பிக்கும் போது, அக்குழந்தைகளுக்குத் தாயைப் போன்ற உணர்வு ஒவ்வொரு நாளும் கிடைக்கும்.

## நோக்கம் :

இப்பள்ளியில் பணியில் சேர்ந்த கல்வியாண்டின் இறுதியிலே, எங்களுக்குக் கல்வித்துறை இயக்குனரிடம் இருந்து 'பள்ளியில் 16 குழந்தைகள் மட்டுமே பயில்வதால் அருகில் உள்ள பள்ளியோடு இணைப்பது' என்ற அதிர்ச்சியானத் தகவல் வந்து சேர்ந்தது. இந்த செய்தியே, பள்ளியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல ஊக்கப்படுத்தியது. 'பள்ளியை நாங்கள் இருக்கும் போது மூடவிட மாட்டோம்' என்று நாங்கள் உறுதி மேற்கொண்டு, மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க, ஊர் மக்களிடம் பேசியும், கல்வி செயல்பாடுகளில் சில மாற்றங்களையும் கொண்டு வந்தோம்.

## அனுபவப் பகிர்வு :

முதல் கல்வியாண்டில் 16 மாணவர்கள், இரண்டாம் ஆண்டில் 35 மாணவர்கள் என உயர்ந்து இவ்வாண்டு 43 மாணவர்களாக உயர்ந்துள்ளனர். ஆனாலும் இவ்வெண்ணிக்கை போதுமானதாகத் தோன்றவில்லை. மென்மேலும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க என்ன செய்வது என்று யோசித்த தருணத்தில், எங்கள் மூன்றாம் வட்டத்திற்குப் புதியதாகப் பள்ளித்துணை ஆய்வாளர் திரு. பக்கிரிசாமி ஐயா அவர்கள் பதவியேற்றார். எங்கள் பள்ளியை அவர் ஆய்வு செய்தபோது, மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கப் பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். அதில் ஒன்றுதான் "வாசித்தல் திருவிழா". இவ்விழா மாணவர்களின் வாசித்தல் திறனைப் பெற்றோர்களிடையேயும், ஊர் மக்களிடையேயும் கொண்டு சேர்க்க மிகப் பெரிய உத்தியாக இருந்தது. 16.03.2019 அன்று வாசித்தல் திருவிழா கொண்டாடினோம். அவ்விழாவில் ஒவ்வொரு குழந்தையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தங்களது வாசித்தல் திறனை அழகாக வெளிப்படுத்தினர்.

## வாசித்தல் திருவிழாவில் எனது வகுப்பறை:

எனது குழந்தைகள் வாசித்தல் திறனில்



சாதனையாளர்கள் தான். வகுப்பறையில் குழந்தைகளுடன் இயல்பாகப் பழகுவதால் அவர்களுக்கும் எனக்கும் ஒரு இயற்கையான உறவு உள்ளது. இதனால் நிறையப் பேசுவதும், கதைகள் சொல்வதும், படத்தொகுப்புக் காட்டி உரையாடுவதுமாக வகுப்பறை உற்சாகமாக இருக்கும். மேலும் மொழி கற்பித்தலில் முதலில் படங்களின் மூலமாக வார்த்தைகளை அறிமுகப்படுத்தி பின்பு எழுத்துக்களை அறிமுகப்படுத்துவேன். இவ்வாறு குழந்தைகளின் படிக்கும் திறன் முன்னேற்றம் அடைந்தது. இதனால் அவர்களை இந்நிகழ்ச்சிக்கு தயார்படுத்துவது எளிதாக இருந்தது. இவ்விழாவிற்காகச் சிறப்பு வகுப்புகளின் மூலம் ஒவ்வொரு மாணவரையும் படிக்க வைக்க அவர்களின் நிலைக்கு ஏற்ப பள்ளியில் இருந்த நூலகப் புத்தகங்கள், SSA புத்தகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பயிற்சி அளித்தோம்.

- LKG குழந்தைகள், தமிழில் 100 சொற்கள், பாட்டு பாடுதல், கதைக் கூறுதல், மேலும் ஆங்கிலத்தில் 50 words, rhymes, Alphabet - Reverse Reading என அசத்தினர்.
- UKG குழந்தைகள், தமிழில் 500 சொற்கள், சொற்றொடர்கள், பாடல்கள், கதைகள் கூறி மேலும் 250 ஆங்கில வார்த்தைகள் படித்து அசத்தினர்.
- முதல் வகுப்பு குழந்தைகள், தமிழில் 1000 சொற்கள், பாடல், கதைப் புத்தகங்கள் படித்தல், தலைக்கீழாகப் படித்தல். மேலும் ஆங்கிலத்தில் 500 Words, Story Books, Poem reading, Reverse Reading என அசத்தினர்.

இவ்வாறு குழந்தைகள் பெற்றோர்களையும், பார்வையாளர்களையும் கவர்ந்தனர்.

“உயர்கல்வியின் ஆரம்பம் தொடக்கப்பள்ளி, தொடக்கப் பள்ளியின் ஆரம்பம் முன் மழலையர் வகுப்பு”. இந்த வகையில் ‘முன் மழலையர் வகுப்பு மாணவச் செல்வங்கள் அழகாகவும், தெளிவாகவும் படிக்கின்றனர்’ என அனைவரும் பாராட்டிய தருணத்தின் மகிழ்ச்சியை அனைவரோடும் பகிர்ந்து கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் இவ்விழாவின் மூலம் பெற்றோர்களிடையே பள்ளியைப் பற்றிய ஒரு நல்ல கண்ணோட்டம் உருவானது. இதற்கு காரணமான பள்ளித்துணை ஆய்வாளர் திரு . பக்கிரிசாமி ஐயா அவர்களுக்கு, பள்ளியின் அனைத்து ஆசிரியர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டும், பள்ளியில் அடுத்த கல்வியாண்டில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்ற நம்பிக்கையோடும் எனது அனுபவத்தினை முடிக்கிறேன்.



**மா. வள்ளி**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, புதுகுப்பம் (அ)

# கும்மியடி ! பெண்ணே கும்மியடி!

வகுப்பு: 5 பாடம்: தமிழ்
இயல் : 3 செய்யுள் பருவம் :2ம் பருவம்

நாட்டுப்புறப் பாடலின் ஒரு வகையான கும்மிப்பாடலைக் கற்பித்தலின் மூலம் நம் தாய்மொழியின் அருமையையும், பாரம்பரிய கலாச்சாரத்தையும் மீட்டெடுப்பதற்கான ஒரு முயற்சி.

## முன்னுரை:

நாட்டுப்புறப் பாடல்கள் என்பவை புனையா ஓவியத்தைப் போல நம் முன்னோர்கள் ஏதேனும் ஒரு காலக்கட்டத்தில் வாய்மொழியாகப் பாடிய பாடல்கள் ஆகும். நாட்டுப்புறப் பாடல்கள் நம் சமுதாயத்தின் பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் பழக்கவழக்கங்களை எடுத்துக் கூறுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு, சடங்கு, ஒப்பாரி, திருமணம், நடவுப் பாட்டு எனப் பல வகைகள் உண்டு. அவற்றுள் கும்மிப் பாடலானது பாடுவது மற்றும் ஆடுவது ஆகிய இரு செயல்பாடுகளையும் உள்ளடக்கியது.

## கற்றலின் நோக்கங்கள்:

கும்மிப்பாடல் வழியாக மாணவர்கள் மொழித் திறனை வளர்த்தல்,

வகுப்பறை மற்றும் பாடநூலை மட்டுமே சாராது கற்றல் கற்பித்தல் செயல்பாட்டை, வகுப்பறையைத் தாண்டி கொண்டு செல்லுதல்.

மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்தல்,

இதுபோன்ற பிற பாடல் வகைகளையும் அறிந்து கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டுதல்.

## கும்மி விளக்கம்:

ஒவ்வொரு விழாவிற்கும் ஏற்ப அதற்கு உரிய பாடல்களைப் பெண்கள் அனைவரும் இணைந்த, வட்டமாக நின்று, ஒன்றுகூடி கைதட்டி பாடும் நிகழ்வு கும்மியடித்தல் ஆகும் . தற்பொழுது ஆண்களும் பரவலாகக் கும்மிப்பாடல் நிகழ்வுகளில் கலந்து கொள்வது கும்மியடித்தல் நிகழ்விற்குச் சிறப்பு சேர்க்கிறது.

## கருவிகள் இல்லாத இசை:

பெண்கள் வட்டமாக இணைந்து கும்மிப்பாடல் பாடுவது கிராமத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றுகின்றது. மேலும் இப்பாடல்களைப் பாடும் போது எந்தவொரு இசைக் கருவிகளின் துணையும் இல்லாமல் பெண்கள் அணிந்திருக்கும் வளையலின் ஓசையும் கைகொட்டும் ஓசையும் பாட்டுக்குத் தாளமாக அமைவது கும்மிப்பாடலின் சிறப்பு.

## மொழி கற்பித்தலில் கும்மிப் பாடலின் பங்கு:

மாணவர்களுக்கு மொழியைக் கற்பிக்க பல கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் கும்மிப்பாடலும் ஒன்று. மாணவர்கள் வயதிற்கேற்ப மிகவும் எளிய வார்த்தைகளைக் கொண்டு இராகத்தோடு கைதட்டி கும்மியடித்துப் பாடும் பொழுது மொழியை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் கற்றுக் கொள்கிறார்கள். மேலும், பாடத்திட்டத்தின் கருப் பொருளையும் அதனால் எதிர்பார்க்கப்படும் திறமைகளையும் மாணவர்களிடம் எளிதில் கொண்டு செல்ல முடிகின்றது. அதுமட்டுமல்லாமல் தங்கள் சுற்று வட்டாரத்திலுள்ள விசயங்களையும் பாடத்தோடு பொருத்திப் பார்க்க முடிகின்றது. கும்மியின் இசை மாணவர்களை அதிகம் கவரும் படியாக உள்ளது. பாடத்தில் உள்ள அன்றாட வாழ்வின் நடைமுறைகளும் செய்திகளும் மாணவர்களை மேலும் சுண்டி இழுக்கின்றன.

## கவிஞரின் உள்ளக் கிளர்ச்சி:

நம் பாடநூலில் உள்ள கும்மிப்பாடலை மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதியுள்ளார். திருவிழாக் காலங்களில் பாடுவதுதான் கும்மிப்பாடல் என்றாலும் இதில் கவிஞர் புரட்சிகரமான கருத்தை வெளிப்படுத்துகிறார். இந்தக் கும்மிப்பாடல் பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறுவதாகவும் அதற்கென உள்ள இடர்ப்பாடுகளை உடைத்தெறியும் விதமாகவும் கவிஞரின் உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாகவும் உள்ளது.



## உயிரோட்டமான கற்றல் கற்பித்தல்:

வெறுமனே பாடநூலைச் சார்ந்து மட்டும் கற்றல்-கற்பித்தல் செயல்பாடு இல்லாமல் வகுப்பறையைத் தாண்டிய களத்திற்குச் சென்று ஆசிரியர் உடல் அசைவுகளுடனும் குரல் ஏற்றத் தாழ்வுடனும் பாடி கைக்கொட்டி மாணவர்களுடன் சேர்ந்து ஆடுதல் வேண்டும். இந்தச் செயல்முறைகளால் சராசாரி மாணவர்களும் பாடலினை மகிழ்வுடன் சிறப்பாகக் கற்கின்றனர்.

## பாடலின் கருப்பொருள் பற்றிய விளக்கம்:

- பாரதியாரின் புரட்சிகரமான பாடல்களில் இந்தக் கும்மிப்பாட்டும் ஒன்று. பாடலில் அவர்
- தமிழ்நாடு குலுங்கும் அளவு கும்மியடிக்கக் கூறுகிறார்.
- நம்மைப் பிடித்த பிசாசுகள் (ஆங்கிலேயர்கள்) போயின.
- பெண்கள் ஏட்டைத் தொடக்கூடாது என்றவர் இறந்து விட்டார்.
- பெண்ணைப் பூட்டி வைக்க வேண்டும் என்றவர் இப்போது இல்லை.
- கல்வியில், பல துறைகளில் சட்டங்கள் இயற்றுவதிலும் பெண்கள் இன்று உலகம் முழுவதிலும் சிறந்து விளங்குகின்றனர்.
- ஆணுக்கு இணையானவள் பெண்.

என்றெல்லாம் ஒவ்வொன்றாகக் கூறிக் கும்மியடிக்கக் கூறுகிறார். இவ்வாறாகக் கவிஞரின் கருப்பொருள்கள் புரட்சிகரமாக அமைந்தது பாடலுக்குச் சிறப்பினை அளிக்கிறது.

## மாணவர்கள் கற்றவற்றைச் சமூக நிகழ்வுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தல்:

வகுப்பில் ஆசிரியர் கும்மிப்பாட்டினை ஆடிப்பாடிய பொழுது மாணவர்களும் ஆசிரியருடன் சேர்ந்து ஆடிப்பாடி கைகொட்டி மகிழ்ந்தனர். இவ்வாறாகத் தங்கள் கிராமங்களின் திருவிழாக்கள், பொங்கல் பண்டிகை போன்ற நிகழ்வுகளில் பெண்கள் வட்டமாக நின்று, பாடல்களைப் பாடி, கைக்கொட்டி, கும்மியடித்தலைப் பார்க்கும் போது மாணவர்கள் தங்கள் பள்ளியில் செய்த கும்மி செயல்முறைகளை நினைவு கூர்கின்றனர். மேலும் மாணவர்களும் அவர்களாகவே சென்று அந்தக் கும்மிப் பாடலில் கலந்து கொள்கின்றனர்.உரிய உடல் அசைவுகள், குரல் ஏற்றத் தாழ்வுகள் மற்றும் சரியான உச்சரிப்புகளுடன் ஆசிரியர் கூறியதைப் போன்று செய்து கும்மிப்பாடல்களைப் பாடுகின்றனர்.

## ஆசிரியரின் மனநிறைவு:

ஆசிரியராகிய எனக்கு ஏதோ ஒரு சிறு வகையில் நாட்டுப்புறப் பாடலின் ஒரு வகையினை மாணவர்களுக்குக் கற்பித்தல் மூலம் அது அழியாமல் இருக்க மறைமுகமாக உதவுவதில் ஒரு மனநிறைவு. கும்மிப்பாடலை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தி அதன்வழி பண்பாட்டு அடையாளங்களின் முக்கியத்துவங்களை அவர்கள் அறியச்செய்தது மனதிற்கு மேலும் நிறைவைத் தந்தது.

## முடிவுரை:

மாணவாகள் நாட்டுப்புறப்பாடலை மகிழ்வுடன் கற்கின்றனர். இதே போன்று மற்ற நாட்டுப்புறப் பாடல்களையும் நேர மேலாண்மையின் அடிப்படையில் ஆசிரியர் கற்றுத் தருதல் சிறப்பாகும். மாணவர்கள் அவர்கள் வீட்டில் உள்ள பெரியவர்களின் உதவியோடு பல நாட்டுப்புறப் பாடல்களை இயல்பாகவே கேட்க வாய்ப்புள்ளது. ஆசிரியர், பெற்றோர் மற்றும் சமுதாயம் இணைந்து செயல்பட்டால் நம் பண்பாடு சார்ந்த பழங்கலைகளை அழியாமல் காப்பாற்றி, பண்படுத்தி நம் வாழ்வோடு சேர்த்து அவற்றைக் கொண்டாட முடியும்.

---

**ராஜசேகர்**
சத்ய பார்த்தி மழலையர் மற்றும்
தொடக்கப் பள்ளி, பாப்பாக்குடி

# மொழி கற்பித்தலில் எனது அனுபவங்கள்

நான் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பாடங்களைச் செயல்பாடுகள் மூலம் மாணவர்களுக்குக் கற்பிப்பேன். அதில் முதலாம் வகுப்பின் ஆங்கிலப் பாடத்தில் பயன்படுத்தப்பட்ட யுக்தி பற்றியும் மெல்ல கற்கும் மாணவர்களை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பற்றியும் இங்கு எழுதியுள்ளேன்.

## முதல் வகுப்பில் - வாக்கியம் அமைத்தல்

நான் முதல் மற்றும் நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப்பாடம் எடுத்துக்கொண்டு இருக்கிறேன். நான்காம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாக எளிமையாக வாக்கியங்களை உருவாக்கினர். அவர்களுக்குப் பின்பற்றியதைப் போல ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும் 'படம் பார்த்து வாக்கியங்கள் உருவாக்குதல்' என்ற யுக்தியைப் பயன்படுத்திய அனுபவத்தை இங்குப் பகிர்கிறேன்.

பொருட்கள் நிறைந்த படங்களைப் பதிவிறக்கம் செய்து அப்படங்களில் என்னென்ன பொருட்கள் உள்ளன என்று பட்டியலிட மாணவர்களைக் குழுவாகப் பிரித்தேன்.

டீழல படத்தை காண்பித்து இது என்ன என்று கேள்விக்கு மாணவர்கள் சரியாக டீழல என்று கூறினார். அதே போல் வேறு சில படத்தையும் (Flower, Girl, Tree, Ball, Sky, Cloud) காண்பித்து அவர்களிடமிருந்து பெயரை வரவைத்தேன்

முதல் வகுப்பு மாணவர்கள் மிக அழகாகச் சொற்களைக் கண்டறிந்து எழுதினர். அதற்கு முதற்கட்டமாக மாணவர்களுக்குப் பிடித்த விலங்குகளைப் பற்றி எழுதலாம் என்று முடிவு செய்தேன். கரும்பலகையில் ஒரு யானை வரைந்தேன். அந்த யானை படத்தைப் பார்த்து இது என்ன? என்று கேட்டேன். மாணவர்கள் 'An Elephant' என்று கூறினர். மாணவர்கள் ஒரே சொல்லில் பதிலளித்தனர். மாணவர்களிடம் நிறையக் கேள்விகளைக் கேட்டேன்.

This is an elephant or It is an elephant என்று எழுதலாம் என்று கூறினேன். இவ்விலங்கின் நிறம், அதனிடம் எத்தனை கால்கள், கண்கள், காதுகள், வால் உள்ளன என்பதை உற்று நோக்கச் செய்தேன். அவ்விலங்கு எங்கு வாழும்? என்ன உணவு சாப்பிடும்? அதனிடமுள்ள சிறப்பென்ன? போன்ற வினாக்களைக் கேட்டேன்.

What is the colour of an elephant?
What does it eat?
How many legs does it have?

மாணவர்கள் அவர்களுக்குப் பிடித்த விலங்குகளின் படங்களை வரைந்து அதனைப் பற்றி பத்து வரிகள் எழுதத் தொடங்கினர்.

இவ்வாறு மாணவர்கள் பத்து விலங்குகளைப் பற்றி எழுதியுள்ளனர்.

பின்னர், அப்படத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றன? என்று கேட்டேன். மேலும், அப்படம் தொடர்பாக நிறைய வினாக்கள் கேட்டேன். வினாக்கள் கேட்கக் கேட்க மாணவர்கள் புதிதாக வாக்கியங்களை உருவாக்கிக்கொண்டே இருந்தனர்.

The boy is playing/ He is playing.
The ball is yellow.
The sky is blue.

என் மாணவர்கள் இப்பொழுது மிக எளிமையான வாக்கியங்களை உருவாக்குகின்றனர், எழுதுகின்றனர். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அளித்தது.

## மெல்ல கற்கும் மாணவர்கள்

நம் கல்வித்துறை ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மெல்ல கற்கும் குழந்தைகளுக்கு வகுப்புகள் நடத்த வேண்டும் எனக் கூறியது. இதற்காக நான் 5-ஆம் வகுப்பில் தமிழ்ப் பாடத்தைத் தேர்வு செய்து கொண்டேன். மெல்ல கற்கும் மாணவர்களுக்காகச் செய்த சில முயற்சிகள்

- ஒன்றாம் வகுப்புப் புத்தகத்தைத் தேர்வு செய்து படத்துடன் கூடிய சொற்களைப் படிக்க வைத்து எழுதச் செய்தேன். மாணவர்கள் எழுத சிரமப் பட்டனர். எழுத்துக்கள் எவ்வாறு வருகிறது





என்பதையே மாணவர்கள் கற்றுக் கொள்ளவில்லை என்பதை அறிந்து உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகும் முறையை மாணவர்களுக்குப் படமாகக் கொடுத்தேன். மேலும், அட்டைகளைக் கொண்டு எழுத்துகளைத் தாங்களாகவே உருவாக்கினர்.

இவ்வாறு மாணவர்கள் 216 உயிர்மெய் எழுத்துக்களையும் கற்றுக் கொண்டனர்..

- பின்பு ஈரெழுத்து சொற்கள், மூவெழுத்து சொற்கள் உள்ள பயிற்சித்தாள் கொடுத்து வாசிக்கச் செய்து மாணவர்களைச் சோதித்தேன்.
- 'வண்ணத்தமிழ்' நூல் ஒன்றினை வாங்கினோம். அப்புத்தகத்தில் ஒவ்வொரு வரிசைக்கும் நிறையச் சொற்கள் இருந்தது. அவ்வரிசைச் சொற்களை எழுத்துக்கூட்டிப் படிக்கச் செய்தேன்.
- முதல் வகுப்பு தமிழ்ப் புத்தகத்தைப் பயன்படுத்தி தமிழ் மாதங்கள், வண்ணங்கள் ஆகியவற்றை வாசிக்கச் செய்தேன். முதல் வகுப்பு புத்தகம் மிகவும் வண்ணமயமாக இருந்ததால் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் கற்றனர்.
- குழந்தைகளுக்கான கதைப்புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தேன். அவர்கள் படிப்பதில் இருந்து அவர்களின் வாசிக்கும் திறன் மேம்பட்டுள்ளது என்று அறிந்து கொண்டேன்.

ஒரு மாணவனைக் கரும்பலகையில் 'பெட்டி' என்று எழுதச் சொன்னேன். அவன் சிறிது நேரம் யோசித்து 'ப் வரிசையில் 'எ' உடன் சேர்த்து 'பெ' வரும்' என தனக்குள் கூறிக்கொண்டு பின்பு எழுதினான். இதேபோல் சொற்களை நான் கூறியவுடனே அவன் எழுதாமல் அவ்வெழுத்து எவ்வாறு தோன்றுகிறது என்று முணுமுணுத்துப் பின்னர் எழுதினான்.

சொல்வதை எழுதுதல், விடுபட்ட எழுத்துக்களை யோசித்து நிரப்புதல், படம் பார்த்துப் பொருட்களின் பெயர்களை எழுதுதல் போன்ற பயிற்சிகளை அளித்தேன். ஒரு எழுத்து கூட அறியாமல் இருந்த மாணவர்கள் சொற்களைப் பார்த்து எழுத்துக் கூட்டிப் படிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இச்செயல்பாடுகளின் மூலமாக நான் அறிந்து கொண்டது "ஆசிரியர்கள் முயற்சி செய்தால் அனைத்து மாணவர்களையும் வாசிக்க வைக்க முடியும்".



**இ. நளினா தேவி**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, நோணாங்குப்பம்.

# வாசித்தல் திருவிழா

## முன்னுரை:

ஒவ்வொரு ஆண்டும் எங்கள் பள்ளியில் வெகு சிறப்பாக ஆண்டுவிழா கொண்டாடுவது வழக்கம். இந்த ஆண்டு அதை கற்றல் திருவிழாவாகக் கொண்டாட எண்ணினோம். ஆனால், தேர்தல் விதிமுறைகள் காரணமாக அனுமதி கிடைக்கவில்லை. எனவே, மாணவர்களின் வாசித்தல் திறனை அனைவரும் அறியும் வகையில் வாசித்தல் திருவிழாவாகக் கொண்டாடினோம். இதற்காக மாணவர்களுக்கு ஜனவரி முதலே பயிற்சி அளிக்கப்பட்டது. Collaborative reading முறையில் தமிழ் மற்றும் ஆங்கிலக் கதைப்புத்தகங்கள், நாளிதழ்கள், வார மற்றும் மாத இதழ்கள் வாசிக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முறையில் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் குழுக்கற்றலில் புத்தகங்களைத் தினமும் வாசிப்பர். இதில் விடுகதைகள் மற்றும் பாடல்களையும் வாசித்தனர். ஆங்கிலத்தில் phonics முறையில் 500 முதல் 800 சொற்கள் வரை கற்றுக்கொடுத்தோம் (2 மற்றும் 3 ஆம் வகுப்பு). கதை மற்றும் பாடல்களை forward and reverse reading, fast reading, reading without comprehension and with comprehension எனப்பல வகைகளில் படிக்கக் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழில் வேகமாக வாசிக்க 500 சொற்கள் கொண்டு உருவாக்கப்பட்ட போஸ்டர்களைப் பயன்படுத்தினோம். மாணவர்களுக்குக் குழுவாகவும் தனியாகவும் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டன.

மாணவர்களுக்கு இயல்பாக வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்க சில முறைகளைப் பின்பற்றினோம்.

## வகுப்பறையில் Reading corner:

வாசிக்கும் பழக்கம் வருவதற்கு முன்னால், புத்தகங்களை உபயோகிக்கும் பழக்கம் வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது தான் reading corner. பாடப்புத்தகங்களைப் பயன்படுத்த நிறைய விதிமுறைகள் உண்டு, எதை எங்கே எழுதவேண்டும், எதை எழுதக்கூடாது என்று மாணவர்களுக்குக் கூறி அதை எப்போதும் எப்படி வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் என்ற எண்ணம் வருவதில்லை. ஆனால், Reading corner' இல் உள்ள புத்தகங்கள் அப்படிப்பட்டது, மாணவர்களுக்கு முழு சுதந்திரம்



உள்ளது.

புத்தகங்கள் வைத்த சில வாரங்களில் மாணவர்கள் அதை ஒரு விளையாட்டுப் பொருள் போல் தான் பார்த்தனர். படங்கள் பார்க்க, வரையப் பயன்படுத்தினர். சில புத்தகங்கள் பழுதடைந்து, கிழிந்து காணப்பட்டது மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்தியதை உறுதி செய்தது.

## Collaborative reading practice: (காலம்:1-1½ மாதம்)

ஒன்று முதல் ஐந்து மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, அவர்களுக்கு வார்த்தைகளைப் பார்த்துப் படிக்க வைக்க முயற்சி எடுத்தோம். இந்தப் பயிற்சி தினமும் அளிக்கப்பட்டது.

குழுக்களில் நன்றாகப் படிக்கும் மாணவர்களும், ஓரளவு படிக்கும் மாணவர்களும், படிக்கச் சிரமப்படும் மாணவர்களும் இருந்தார்கள். ஒருவர் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு இந்த முறை பின்பற்றப்பட்டது. ஒவ்வொரு குழுவிலும், குழுத்தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள், அவர்கள் மற்றவர்கள் படிப்பதற்கு உதவியும் உற்சாகமும் கொடுத்தார்கள்.

புத்தகங்கள் மூன்று நிலையாகப்பிரிக்கப்பட்டது:

**நிலை 1:** ஆங்கில எழுத்துக்கள் புத்தகங்கள் , படங்கள்-வார்த்தைகள் அடங்கிய புத்தகங்கள்/ அட்டைகள்,

**நிலை 2:** படங்கள்-வாக்கியங்கள் அடங்கிய புத்தகங்கள்.




**நிலை 3:** கதை புத்தகங்கள், பத்திரிகைகள், சிற்றேடுகள்.

குழுக்கள் ஒவ்வொரு நிலையையும் முடிக்க வேண்டும். ஒரு நிலையை முடிக்கும்போது அடுத்த நிலை புத்தகங்கள் கொடுக்கப்படும். இவ்வாறாக எல்லா மாணவர்களும் 60 க்கும் மேற்பட்ட புத்தகங்களையும், 500க்கும் மேற்பட்ட வார்த்தைகளையும் வாசிக்க கற்றுக் கொண்டனர்.

## Phonics மூலமாக ஆங்கிலம் வாசித்தல் பயிற்சி:

மாணவர்களின் வாசித்தலில் Phonics உபயோகித்து, அவர்களுக்கு வார்த்தைகளை உச்சரிக்க வைத்தேன். வார்த்தைகளின் ஒலியை மாணவர்கள் புரிந்து கொண்டால், அவர்களால் வார்த்தைகளை எளிதில் வாசிக்க முடியும் என்பது திண்ணம். அவர்களுக்கு வார்த்தைகளின் ஒலியைப் பாடல்கள் வாயிலாகக் கற்றுக்கொடுத்தேன். ஒளியை மாணவர்கள் புரிந்து கொள்ளும் போது அவர்களுக்கு வாசிக்கும் ஆர்வம் வருகிறது. அர்த்தம் புரியவில்லை என்றாலும் வாசிக்க முயற்சி எடுக்கிறார்கள்.

தமிழ்ப் பாடங்களிலும் இதே போன்ற முயற்சி எடுத்தோம். ஓரளவுக்கு மாணவர்கள் வாசிக்க ஆரம்பித்தார்கள்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குப் புத்தகத்தைக் கொடுத்தால் படித்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். வேகமாகப் படிக்கச்சொல்லி, தலைகீழாகப் படிக்கச்சொல்லி, சரளமாகப் படிக்கச்சொல்லி குறைகளைக் குறைத்திருக்கிறார்கள். இது தீவிர பயிற்சியின் வெளிப்பாடாக உள்ளது. மாணவர்களுக்குப் புரிதல் இல்லை என்பதால் குழந்தைகளின் வெளிப்பாடாக இல்லாதது, அவர்களுடைய அறிவாற்றலுக்கும் படைப்பாற்றலுக்கும் தீனி போடுவதில்லை.

மாணவர்கள் புரிதலை வளர்ப்பது ஒரு நீண்ட காலச்செயல் திட்டம். அதற்கு ஏற்ற வகுப்பறை செயல்பாடுகள்.

## 1) Picture Description: **(படத்தை விவரித்து எழுதுதல்):**

சில படங்களை மாணவர்கள் படம் பார்த்து வர்ணிக்க முயற்சித்தார்கள். நன்கு யோசித்து உள்நோக்கி தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு வர்ணித்தனர். உரிச்சொற்கள் (adjectives) நடத்திய பிறகு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு படம் கொடுக்கப்பட்டது.

எ.கா. வெவ்வேறு மரங்கள், பறவைகள், குட்டிப்பையன், குட்டிப்பெண் படங்கள் கொடுக்கப்பட்டது. அவர்கள் நன்றாகவே எழுதினார்கள்.

## 2) Narrating Story: **(படங்கள் வைத்துக் கதை உருவாக்கிக் கூறல்)**

குழந்தைகள் பேசுவதைக் கேட்பதே அழகாக இருக்கும், அவர்கள் கதை கூறினால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். குழந்தைகளை 'கதை உருவாக்கிக் கூறும்' செயல்பாட்டை வகுப்பறையில் செய்து பார்த்தோம். சில படங்கள் கொடுத்தால் போதும், அந்தப் படங்களை வைத்து அவர்களாகவே ஒரு கதையை உருவாக்கி கூறுவார்கள்.

## 3) Comprehension activities: **(பாடங்களைப் புரிந்து கொள்ளச் செய்த செயல்பாடுகள்)**

### ஆங்கிலம்-

"magic garden" பாடத்தைப் பூக்களை வடிவமைத்து, வகுப்பறையைப் பூந்தோட்டம்-போல் உருவாக்கி, வாக்கியங்களை நடித்துக் காட்டினேன். சிலமுறை மீண்டும் செய்த போது, அவர்களாகவே பெயர்ச்சொற்களை (action words) நடித்துக் காட்டினர்.

இந்த முறையை மற்ற பாடங்களுக்கும் செய்தோம். "The yellow butterfly" பாடத்தில், பூந்தோட்டத்தில் பட்டாம் பூச்சிகளும் சேர்ந்தது. முன்னே கற்ற வார்த்தைகளும் இப்போது சேர்த்து உபயோகித்தனர்.

### சூழ்நிலையியல்-

பாடத்தில் வாகனங்களைப் பற்றி தமிழ் மற்றும் ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்தி வாய்மொழியாகவும், எழுதியும் காட்டினார்கள். "here comes the letter" பாடத்தில் கடிதம்



எழுதியதும், எழுத்தையும் வாக்கியங்களையும் புரிதலுடன் அணுக ஏதுவாக இருந்தது.

## கணிதப் பாடத்தில்-

சொல் கணக்கு (word problems) புரிதல் ஏற்பட்டதும், எழுத்துகளில் புரிதல் இருந்ததால் தான் என்று எண்ணுகிறேன். ஒரு வாக்கியம் வாசித்து அதைப் பொருட்களோடு ஒப்பிட்டு அந்தக் கணக்கைப் புரிந்து கொண்டார்கள். ஒரு வகுப்பில் ஒரு கணக்கை மட்டும் பயிற்சி செய்யும் அளவிற்கு நேரம் எடுத்தாலும், மாணவர்களின் புரிதல் முன்னேறியது.

## 4)Choreography activity: (பாடல்களைப் புரிந்து கொள்ளச் செய்த செயல்பாடு)

ஒரு பாட்டில் உள்ள வார்த்தைகளைப் படிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதை நடனமாகவும்




நடிப்பாகவும் செய்வதுதான் இந்தச் செயல்பாடு.

ஒரு வரியைப் பாடும்போது, அவர்கள் அதன் பொருளின் சைகையோடு செய்வார்கள். அப்படிப் பழகியது அர்த்தம் நிறைந்ததாக இருந்தது. ஒரு பெரிய பாடலை(Poem) அதில் உள்ள கதாபாத்திரங்களாக நடித்தும் வார்த்தைகளின் புரிதலை அடைய முயற்சித்தேன்.

இவ்வாறாக, செய்ததன் விளைவு, அவர்களாகவே வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இதைத் தேர்வுகளில் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

எப்படிப் புரிந்தால் சுயமாக எழுத முடியுமோ, அப்படிப் புரிந்தால்தான் வாசிக்கவும் முடியும். எனவே, புரிதலையும் வாசித்தலையும் தனித்தனியாகப் பார்க்க முடியாது. இந்த முயற்சியிலும், 30 சதவீத மாணவர்களின் புரிதலுக்காக அவர்களை உணவு நேரத்திலும் பயிற்சி அளித்திருந்தோம்.

## முடிவுரை:

விழா நாளன்று மாணவர்கள், பெற்றோர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் புத்தகங்களை வாசித்தனர். அரசுப் பள்ளியில் சேர்க்கும் ஒவ்வொரு பெற்றோரின் எதிர்பார்ப்பும் இதுதான். தன் குழந்தை தமிழ் மற்றும் ஆங்கிலத்தைச் சரளமாகப் படிக்க வேண்டும் என்பதுதான். அந்த வகையில் பெற்றோர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்தோம் என்றே நம்புகிறோம். இப்பொழுது பாடப்புத்தகங்களைவிட கதைப்புத்தகங்களையும் எங்கள் மாணவர்கள் விரும்பி வாசிக்கின்றனர்.

“மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்.” - ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன். இன்று உலக சிறுவர் புத்தக தினம்.

தினமும் குழந்தைகளைப் புத்தகங்கள் வாசிக்கச் செய்வோம்.



**சங்கரதேவி**
தொ.ப.ஆ,
அ.தொ.ப, அபிஷேகப்பாக்கம்

# பள்ளிக்கும் மாணவர்களுக்கும் எனது பங்களிப்பு

## எங்கள் பள்ளி

பிளவுபட்ட குடும்பச்சூழ்நிலை, வயதுக்கு மீறிய சிந்தனை ஓட்டம், வறுமை, பெற்றோர்களின் கவனிப்பின்மை, முதல் தலைமுறையாகப் படிக்கவருதல் எனப் பல்வேறுபட்ட பின்னணியில் இருந்து தான் குழந்தைகள் அரசுப்பள்ளிக்குப் படிக்க வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் கல்வி குறித்தும், பயிற்று முறை குறித்தும், அதில் தேவைப்படும் மாற்றங்கள் குறித்தும் சிந்தித்தேன். இதன் அடிப்படையில் சில முயற்சிகளைப் பலர் உறுதுணையுடன் மேற்கொண்டேன். அதனை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## எமது வகுப்பறைச் செயல்பாடுகள்

படிப்பில் மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டு

- பாடத்தை நாடக வடிவிலும்
- பாடல்களை கும்மியாட்டம், வில்லுப்பாட்டு மூலமாகவும்
- சத்தான உணவுகளை வலியுறுத்த காய்கறிக்கலவை தயாரித்து உண்ணச் செய்தும்
- எளிதாக மலிவாகக் கிடைக்கும் பழங்களின் பயன்களை உணர்த்தியும் கற்றலை மேற்கொண்டேன்.

## எமது பள்ளிச் செயல்பாடுகள்

வகுப்பறை மட்டுமல்லாது அதைத்தாண்டியும் கற்றல் நிகழ வேண்டும் என்பதினால்,

- புத்தக விழாவிற்குப் பள்ளி மாணவர்களை அழைத்துச் செல்லுதல்
- பயனுள்ள பல புத்தகங்களை அறிமுகப்படுத்தல்
- முகநூலில் மாணவர்களின் செயல்பாடுகளைப் பதிவிடுதல்.
- இசையோடு கூடிய உடற்பயிற்சி செய்தல்
- சமத்துவப் பொங்கல் வைத்தல்
- வேற்று மாநிலத்துப் பள்ளி செல்லாக் குழந்தைகளை எங்கள் பள்ளியில் சேர்த்தல்
- குழந்தைகள் தினவிழாவில் மாணவர்களையே வாழ்த்து அட்டை, புகைப்படம் மற்றும் கவிதை எழுதத்தூண்டுதல்
- நெகிழியின் தீமைகளை வலியுறுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், அவர்களுக்கு இலவசமாக துணிப்பைகளை வழங்கியும் ஊக்கப்படுத்துதல்.
- பள்ளிச்சுவர்களில் கண்கவர் வண்ணங்களில் வண்ணங்கள் தீட்டியும் ஓவியங்கள் வரைந்தும் மாணவர்களை உற்சாகப்படுத்துதல்.
- டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவும் காலக்கட்டங்களில் அதைப்பற்றிய விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்துதல்.
- குடற்புழுவை நீக்க மாத்திரைகளைக் குழந்தைகளுக்கு இலவசமாக அளித்து, அவர்களது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் முயற்சிகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளல்.

## மாணவர்கள் நலனில் அக்கறை

மாணவர்கள் நலனில் அக்கறை கொள்ளுதல் என்பது பள்ளியோடு முடிந்து விடுவது அல்ல. தொடர்ந்து அவர்களது வாழ்க்கைக்கும் உறுதுணையாக இருந்தால் மட்டுமே குழந்தைகளின் கல்வி வளர்ச்சி தடங்கல் இல்லாமல் நிலைத்து நிற்கும். எங்கள் பள்ளியில் படித்த ஒன்றாம் வகுப்பு மாணவனும் காப்பாற்ற முயற்சித்த தாயும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர். அவனது இரு தங்கைகளும் தாத்தா பாட்டியுடன் வாடகை வீட்டில் மிகுந்த துன்பத்தில் வாழ்ந்து வந்தனர். இதனைக் கேள்விப்பட்டு நேரில் சென்று அறிந்து அவர்களுக்குச் 'சிகரம் தொடு' அமைப்பின் மூலம் பல உதவிகள் புரிந்து அவனது தாத்தாவிற்கு நிரந்தர வேலைக்கான ஏற்பாட்டினையும் செய்தேன்.

**'ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு ஆசிரியர்**
**ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு பெற்றோர்'**

என்பதற்கு இணங்க செயல்படின் குழந்தைகளின் கல்வி மேம்படும் என்பதை உறுதியாக நம்புகிறேன். எனவே, குழந்தைகளுடன் இணைவோம், சமுதாயத்தை மேம்படுத்துவோம். நன்றி

---

**விசாலாட்சி முத்துவேலு**

# பெரும்பாலான அரசுப்பள்ளி மாணவர்கள் கற்றலில் பின்தங்கிய நிலை - ஒரு பார்வை

அய்யங்குட்டிப்பாளையத்தில் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றுச்செயல்பட்டு வருகிறேன். நகர்ப்பகுதியின் எல்லையில் உள்ளது எங்கள் பள்ளி. கம்பெனி தொழிலாளர்கள் அதிகம் உள்ள பகுதி. அதனால், தொழிலாளர்களின் பிள்ளைகள் அதிகம் படிக்கின்றனர். 150 மாணவர்கள் படிக்கும் எங்கள் பள்ளியில் ஓரளவு சிறந்த கட்டமைப்பு வசதிகளும் அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களும் இருக்கிறோம். பள்ளிக்கான சில உதவிகளைச் சில நல்ல உள்ளங்கள் கேட்டும், கேட்காமலும் செய்து வருகின்றனர்.

## அரசுப்பள்ளி மாணவர்களின் கல்வி: (சமூகம் மற்றும் கோட்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்)

'பாடப்பொருளைப் புரிதலின்றி மனப்பாடம் செய்வதால் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்படுவதில் சிக்கல் ஏற்படுகிறது'. சுயமாகச் சிந்தித்து வெளிப்படுத்தும் திறனில் சுணக்கம் ஏற்படுகிறது என்பதைப் பற்றி கல்வித்துறை மற்றும் ஆசிரியர்கள் அனைவரும்' அறிவோம். 'வேறென்ன செய்வது? எப்படிச்செய்வது? என்று தினம் தினம் யோசிக்கும் ஆசிரியர்களில் நானும் ஒருவன். எப்படியாவது இன்று நடத்தும் பாடத்தை அறிதல், புரிதலுடன் நடத்தியாக வேண்டும் என்று நுழைவேன். ஆனால் அப்படிச் செல்லும் பொழுது இரண்டு வாக்கியங்களைக்கூட கடக்க முடியாத நிலையில் தள்ளப்படுகிறோம் அல்லது எல்லாக்குழந்தைகளுக்கும் கற்பிக்க முடியாத நிர்ப்பந்தத்தில் தள்ளப்படுகிறோம். உ.ம்: மொழிப்பாடத்தில் புரிதலுக்குள் நகரும் பொழுது, மொழித்திறனை விட்டு விலகுவதும், மொழித்திறனில் கவனம் செலுத்தும் பொழுது கற்றலடைவில் கோட்டை விடுவதையும் கவனிக்கிறேன். இவையனைத்தையும் மனதில் கொள்ளும் பொழுது ஒரு பாடத்திற்குச் செலவிட வேண்டிய நேரம் இரண்டு மடங்காக மாறுகிறது. அப்படியாகும் பொழுது கூட 'பரிட்சைக்குத் தயார் செய்தோமா'? என்ற கேள்விக்கு உட்படுகிறோம் அல்லது கேள்விக்குள்ளாக்கப் படுகிறோம்.

பாடத்திட்டம், பாடம் ஆகியவற்றை மனதில் கொண்டு சுதந்திரமான செயல்பாடுகளில் ஈடுபடும் பொழுது புரிதலில் வெற்றி காண முடிகிறது. ஆனால், 'பரிட்சை எழுதி சிறந்த மதிப்பெண் பெற வைக்க முடிகிறதா'? என்ற கேள்வி எழுகிறது.

இக்கேள்வியோடு என் அடுத்த சவாலான 'மொழி'க்கு நகர்கிறேன். தாய்மொழி நிராகரிக்கப்பட்டால் பல்வேறு நிலையிலும் புரிதல் மற்றும் சிந்தனையில் சிக்கல் ஏற்படுகிறது. தாய்மொழி தவிர்த்து வேற்று மொழிக்கல்வி என்பது மாணவர்களின் உள்ளார்ந்த சிந்தனைகள், மாணவரின் மனதினூடே செல்லும் அழகியல் ஆகியவற்றை முழுமையாக வெளிக்கொணராது'. இவைப்பற்றிப் புரியாத, அறியாத கல்வித்துறை நம்முடையது அல்ல. இருந்த போதும் வியாபாரமாக்கப்பட்ட கல்வியை முன்மாதிரியாகக்கொண்டு அரசு இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆரம்பப்பள்ளி, ஆங்கிலவழிக்கல்வி அதிலும் CBSE கல்வி புதுச்சேரியில் பெருமையாகப் பேசப்பட்டது. இதனால் மாணவச்சேர்க்கையை அதிகரித்ததாகக் கணக்குக்காட்டினோம். பெற்றோர்கள் மகிழ்ந்தனர். வெற்றி கண்டோமா? இதை எப்படி மதிப்பிடுவது? எனக்குத் தினந்தோறும் கிடைத்த அனுபவத்தில் இருந்து வெளிப்படையாகக் கூறுவதென்றால் ஆங்கிலம் கற்பிக்க ஒரு ஆசிரியராகிய நான் திணறினேன். புத்தகங்களில் உள்ள வடநாட்டு மொழிச் சொற்கள் மற்றும் உதாரணங்களுடன் போராடினோம்.
ஆசிரியர்கள் தமக்கு மிகவும் பரிட்சயமான கருத்துக்களைக் கூட ஆங்கிலத்தில் எடுத்தியம்பும்போது அது முழுவதுமாக மாணவர்களைச் சென்றடைவதில் மொழி ஒரு தடையாக இருந்தது. கடமையாற்றும் உணர்வோடு மனப்பாடக்கல்விக்கு நம்மையறியாமலேயே நகர்ந்தோம். இந்நிலை பற்றிப் பேசுவது என்பது ஐந்தாண்டுகளாகியும் நடக்கவில்லை. இன்று நாம்

இதில் பழகியும் விட்டோம். உ.ம்: ஒன்றை மட்டும் கூறுகிறேன். நவோதயா பரிச்சைக்கு மாணவர்களைத் தயார் செய்த பொழுது ஆங்கிலத்தில் பயிற்சியளித்த காலத்தில் என் எல்லா முயற்சிகளும் தோற்று, திறமையான பல மாணவர்கள் கூட தேர்வில் வெற்றி பெறவில்லை. மூன்று ஆண்டிற்கு முன்வரை ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் கூட தமிழிலும் இத்தேர்வை எழுதலாம் என எனக்குத் தெரியவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழில் பயிற்சியளிக்கிறேன். மாணவர்கள் தேர்ச்சியடைந்து வருவதோடு மாணவர்களின் பங்களிப்பும் ஆர்வமும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இட ஒதுக்கீட்டில் செல்ல வேண்டிய ஒரு மாணவி, பொதுப்பட்டியலில் தேர்ச்சி பெற்று நுழைகிறாள். இது போன்ற உதாரணங்களை என்னால் மட்டுமல்ல உங்களாலும் அடுக்கிக்கொண்டு போக முடியும்.

இங்கு இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிடுகிறேன். ஒடிசாவைச் சேர்ந்த மலைவாழ் மாணவி 5 ஆண்டுகளாக எங்கள் பள்ளியில் படித்து வருகிறாள். தமிழில் முதல் மதிப்பெண் எடுப்பதும் அவள் தான். சமூகத்தில் புழங்கும் மொழியில் கல்வி இருக்கும் பொழுது, வீட்டு மொழி இரண்டாம் பட்சமாகிறது. ஆனால், நாம் வீட்டுமொழி, சமூகமொழியைக் கடந்து அயல்மொழிக்குப் பயணித்ததோடு, அதைப்பற்றி உரையாடாமல் இருப்பதை நினைவு கூற விரும்புகிறேன்.

## சமூகக்காரணங்கள்:

அரசுப்பள்ளிக்கு ஒரு குழந்தை வருவது என்பது அதிலும், ஆரம்பப் பள்ளிக்கு வருகிறார்கள் என்பதே அவர்களது சமூகப் பொருளாதாரச்சூழலை தெளிவாக விளக்கும்.

அப்படி வரும் குழந்தைகள் கல்வியில் கவனம் செலுத்த முடியாமைக்கு ஆயிரம் காரணங்கள் உள்ளன. சத்துணவுக்குறைபாடு மட்டுமல்ல, சாப்பாடே இல்லாத நிலைகூட சிலருக்கு ஏற்படும். சாப்பாடு வீட்டில் இருந்தாலும் பெற்றோர்கள் அதிகாலையில் வேலைக்குச் செல்வதால் சாப்பிடாமல் பள்ளிக்கு வருதல் போன்ற எத்தனையோ வகையான மாணவர்கள் உண்டு. சாப்பாடு மட்டுமல்ல, பள்ளிக்குக் கிளம்புவதிலும் இதே சிக்கல். நாங்கள் முதல்நாள் கொடுக்கும் வேலையை அடுத்த நாள் செய்யாமல் வருவதிலும் இது போன்ற பல காரணங்கள் உண்டு. குடிக்கும் தந்தையின் பிள்ளைகளாக அவர்கள் தினம் தினம் வீட்டில் சந்திக்கும் சிக்கல்கள் பல. தாய் மட்டும் வளர்க்கும் குழந்தைகள், தாய் தந்தையில்லாமல் ஆயாவிடம் வளரும் குழந்தைகள் என நீளும் பட்டியல் தான் நமது அரசுப்பள்ளி. இம்மாணவர்கள் தான் நாம் எதிர்பார்க்கும் கற்றலடைவை எட்ட வேண்டும். இன்னொருபுறம் கற்றலில் பின்தங்கிய குழந்தைகளாக அரசுப்பள்ளிக்கு வருகின்றனர். அப்படி வரும் மாணவர்களையும் அதே நிலையில் வைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

‘இச்சூழலைப் புறக்கணித்து ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க முடியுமா? இச்சூழலிலிருந்து வருவதால் அவர்கள் கற்றலில் பின்தங்கியவர்களா? மாணவர்களின் சூழல், மாணவர்களின் திறன் இவற்றிற்கு ஏற்ற கல்வி என்பது குறித்து எதையாவது செய்ய முடியுமா?’ என்று நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

அரசுப்பள்ளிக் குழந்தைகளுக்கென்று சிறப்புக் கல்வித்திட்டங்களை வகுத்தல் அவசியம். ஆசிரியர்கள் கல்வியை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ளுதலும் அதை நம் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உரியதாக்க முற்படுவோம்.

**து. தரணிதரன்** தொ.ப.ஆ
அ.தொ.ப,
அய்யங்குட்டிப்பாளையம்

# கல்வி- நீள்கனவா ?

## பள்ளி - அறிமுகம்:

முல்லா வீதியில் இருக்கும் சி.வி.அஷ்ரப் அரசு தொடக்கப்பள்ளியில் நான் தொடக்கப்பள்ளி ஆசிரியராகவும், பள்ளிப் பொறுப்பு ஆசிரியராகவும் பணியாற்றுகிறேன்.

## நீள்கனவு:

நீள்கனவு உரையாடலில் தொடர்ந்து பங்கெடுக்கும் நபர்களில் நானும் ஒருத்தி. நாங்கள் வாசிக்கும் புத்தகங்களான பெரியார், பாரதி போன்றவர்களின் எழுத்துக்களில் அரசுப்பள்ளி மாணவர்களின் வாழ்க்கை உயர்வதற்கான தீர்வுகள் இருப்பது போலவே இருக்கும். இத்தீர்வுகளைப் பள்ளிக்குக் கொண்டு செல்வேன். பள்ளியில் உள்ள சிக்கல்களைப் பற்றி உரையாட நீள்கனவிற்கு வருவேன். அவ்வகையில் நான் மேற்கொண்ட ஒரு குறிப்பிட்ட சமூகக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான என் முயற்சியை இங்கு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

## கற்பித்தலைச் சவாலாக்கிய மூன்று மாணவிகள் சேர்க்கை:

இப்பள்ளியில் நான் 4ம் வகுப்பு ஆசிரியராக எனது பணியைச் செவ்வனே செய்து கொண்டிருக்கும் வேளையில் கடந்த ஆண்டு (2018-19) ஜீன் மாதம் என் வகுப்பில் மலைக்குறவர் இனத்தைச் சேர்ந்த மூன்று மாணவிகள் RTE முறைப்படி சேர்ந்தார்கள். 1ம் வகுப்பிலும் அதே இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவி சேர்ந்தார். இதுவரை பள்ளிக்கூடம் சென்றிராத இவர்களுக்கு எமது பள்ளிக்கூடம் புதுமையாக இருந்தது. ஆனால் அவர்கள் ஆர்வமுடன் பள்ளிக்கு வருகை புரிந்தனர். எழுத்துக்களை வாசிக்கவோ, எழுதவோ தெரியவில்லை. அவர்கள் பள்ளியில் சேர்ந்த ஒரு மாதத்திற்குள் வட்டத் துணை ஆய்வாளர் அவர்கள் திடீர் வருகை புரிந்து மாணவர்கள் ஆய்வு நடத்திய போது நான் கூறினேன். 'அஸ்வினி, பூங்குழலி, சத்யா ஆகிய மூவரும் இதுவரை பள்ளிக்கே சென்றதில்லை. (OOSC) RTE விதிமுறைகளின் படி வகுப்பில் சேர்த்துக்கொண்டேன்' என்று கூறினேன். அதற்கு எங்கள் வட்டத்துணை ஆய்வாளர் மல்லிகா கோபால் அவர்கள் அடுத்த முறை ஆய்வுக்கு வரும் பொழுது 'இம்மூன்று மாணவிகளுக்கு எழுத்துக்கள் அனைத்தும் கற்றுக்கொடுத்து விடுங்கள் அது போதும்' என்று கூறிச் சென்றார்.

## கற்பித்தல் முறை:

முதலில் நான் அவர்களுக்கு எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் முயற்சியாக எழுத்துப் பயிற்சிக்கு (stroke) (/) சாய்வுக் கோடுகளை அறிமுகப்படுத்திக் கற்றுக்கொடுத்தேன். மாணவிகள் மூவரும் ஆச்சரியப்படும் வகையில், முதல் மூன்று மாதத்தில் அனைத்து எழுத்துக்களையும் சொல்லவும் எழுதவும் ஆரம்பித்து விட்டார்கள். இம்முயற்சியில் வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரும் அவர்களுக்குக் கற்பதில் பெரிதும் உதவியாக இருந்தனர்.





## கற்றல் வெளிப்பாடு:

முதல் பருவத் தேர்வுக்குப் பிறகு இரண்டாம் பருவம் தொடங்கிய போது அந்த மூன்று மாணவிகளும் இரண்டு மற்றும் மூன்று எழுத்துச் சொற்கள் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டனர். இதற்குப் பட அட்டைகள் மற்றும் வார்த்தை அட்டைகளைப் பயன்படுத்தினேன். மேலும் படங்களை வரைதல் மூலம் எழுதுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தி அதன் வாயிலாக வாசிக்கவும், எழுதவும் சுலபமாகப் பயின்றனர். இரண்டாம் பருவத்திலேயே அவர்களுக்கு நமது கல்வித்துறை வழங்கிய தமிழ் மற்றும் ஆங்கில கையெழுத்துப் பயிற்சி புத்தகங்களைக் கொடுத்து எழுதப் பழக்கி விட்டேன். மிகச் சிறப்பாக எழுதவும் தொடங்கி விட்டார்கள். இரண்டாம் பருவ இறுதியில் திடீர் ஆய்வுக்கு வந்த வட்டத்துணை ஆய்வாளர் திரு. குமார் அவர்களிடம் முந்தைய ஆய்வாளர் கொடுத்துச் சென்ற ஆய்வு அறிக்கையை ஒப்பிட்டுப் பார்த்து, தற்போது அவர்கள் மூவரையும் ஆய்வு நடத்துமாறு வேண்டிக் கொண்டதற்கு இணங்க ஆய்வாளர் அந்த மூன்று மாணவிகளையும் ஆய்வு நடத்திய போது அவர் மிக்க ஆனந்தமடைந்தார். அந்த மூன்று குழந்தைகளும் இரண்டு மற்றும் மூன்று எழுத்துச் சொற்களை மிகவும் தெளிவாக வாசித்தார்கள். அதைக்கண்டு நானுமே ஆனந்தத்தில் மூழ்கினேன்

## மாணவிகளின் வாழ்க்கைத்தடம் புரண்ட சம்பவம்:

அதன்பிறகு இரண்டாம் பருவத்தேர்வு முடிந்து பள்ளி மாணவிகள் பள்ளிக்கு வந்தனர். மலைக்குறவர்கள் இனத்தைச் சேர்ந்த, மாணவிகள் தங்குவதற்கு நிரந்தரமான இடம் இல்லாததால் அவர்களின் பெற்றோர்கள் ஒரு தனியார் தங்கும் விடுதியில் அவர்களைத் தங்கவைத்திருந்தார்கள். ஜனவரி 21ம் நாள் ஞாயிற்றுக்கிழமை விடுதியில் இருந்து புதுச்சேரி கடற்கரைக்கு விடுதி மாணவர்கள் அனைவரும் சென்ற போது எம் 4ம் வகுப்பு மாணவி சத்யா எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டார். ஆகையால் அந்த குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் விடுதியை முற்றுகையிட்டு மாணவியின் 'இறப்பிற்குக் காரணமான உங்களை சும்மா விடமாட்டேன்' என்று கூறி அந்த சமூகத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களின் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டு அழைத்துச் சென்று விட்டார்கள். ஒரு குழந்தையின் இறப்பு மற்ற அனைத்து குழந்தைகளின் வாழ்க்கையையும் புரட்டிப் போட்டு விட்டது.

தற்சமயம் எங்கள் பள்ளியில் படித்த அந்த இனத்தைச் சேர்ந்த அனைத்து குழந்தைகளும் கடற்கரையில் பிச்சை எடுக்கிறார்கள் என்ற செவிவழிச் செய்தி அறிந்து அதிர்ந்துபோனேன். அவர்களின் எதிர்கால வாழ்க்கை இனி என்ன ஆகுமோ? நான் செய்வதறியாது இது குறித்த தீவிர சிந்தனையுடனும், எதிர்பார்ப்புடனும் உங்கள் முன் இப்பிரச்சினையை வைக்க ஒரு ஆசிரியராகக் கடமைப்பட்டுள்ளேன். இது போன்ற சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வுதான் என்ன?



**சு.மோகனாம்பாள்**
தொ.ப.ஆ
அ.தொ.ப, முல்லா வீதி.

# நீள்கனவு- ஆசிரியர் கற்றல்

## ஆசிரியப்பணி என்பது....

வெள்ளத்தால் போகாது, வெந்தழலால் வேகாது; வேந்தராலும் கொள்ளத்தான் இயலாது; கொடுத்தாலும் நிறைவின்றி குறையாது- என்ற பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட "கல்விதான் உலகையே மாற்றக்கூடிய ஒரே ஆயுதம்" என்றார் நெல்சன். உண்மை! சமுதாய மாற்றம் சாத்தியம் ஆவது வகுப்பறைகளால் மட்டுமே. வகுப்பறை வார்த்தெடுத்த வான் புகழ் மேதைகள் இந்த வையகத்தில் ஏராளம்! ஆனால் அந்த எண்ணிக்கை இன்னும் தாராளம் ஆக்கப்பட வேண்டும், சீர்மிகு சமுதாயம் படைக்கச் சிறு கல்லாவது நான் எடுத்து வைக்க வேண்டும் என்ற திண்ணிய எண்ணம் கொண்ட ஆசிரியர்களாகவே பண்ணிய திட்டம்தான் இந்த நீள்கனவு. தன்னை மண்ணுக்களித்து மண்ணை மலரச் செய்த மகாகவி பாரதியின் சொல்லாடல் எங்கள் திட்டத்திற்குப் பெயர் சூட்டியது.

ஒரு ஆசிரியர் பள்ளியைக் கடந்து சமூக சீர்திருத்தத்திற்கும் ஆனவராக அறியப்படுகிறார். வகுப்பறையைக் கடந்து செல்லும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சமூகப்பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டுமென்றால் அது ஆசிரியர் ஒருவரால் மட்டுமே முடியும். இத்தகைய சீரிய கடமையைச் செவ்வனே செய்திட எங்களை நாங்களே பட்டை தீட்டிக் கொள்ள நினைத்ததன் நீட்சியே எங்களின் 'நீள் கனவு' திட்டம். சமூக மாற்றத்தைக் கொண்டுவந்த மாபெரும் ஆசிரியர்களின் எழுத்துக்கள் மற்றும் சமூகப்பணிகளைத் திரும்பிப் பார்க்க வேண்டியிருந்தது. அவர்களது சிந்தனைகளும் செயல்பாடுகளும் தான் இன்று நம் கல்வியின் குறிக்கோளாக மாறியுள்ளன. 2018, ஆகஸ்ட் 11 - ம் தேதியன்று அரங்கேறத் துவங்கிய எங்கள் நீள்கனவு திட்டத்தின் ஆறுமாத கால செயல்திட்டத்தினை உங்கள் முன்வைக்க விழைகிறேன்.

நீள் கனவின் முதல் அமர்வு நீள்கனவு பற்றிய அறிமுகமும் ஔவையார்ப் பாடல்களும். பின்பு நீள்கனவைக் கல்வியுடம் தொடர்ப்புப்படுத்த நடந்த நிகழ்வுகளின் தலைப்புகள்- நீள்கனவும் கலைத்திட்டமும், பாடநூலும் சமூகப் பார்வையும், நீள்கனவும் பாடத்திட்டமும், வகுப்பறையில் நீள்கனவு, சிறந்த கற்கும் சூழ்நிலை, நல்ல ஆசிரியர், தேர்வு முறை அரசியல், தேர்தலும் ஜனநாயகமும். பாரதியாரின் குயில்பாட்டு, பாரதியாரின் கல்வி சிந்தனைகள் படித்து பாரதியாரின் இல்லத்திற்குச் சென்று அவரின் நினைவு தினம் அனுசரித்தோம். அதன் பின் பெரியாரின் கல்வி சிந்தனைகள், இன்றைய சமூகத்தில் பெரியாரியம், கீதா மற்றும் உமா அவர்களின் உதவியுடன் பெரியாரைப் பற்றி விரிவாக உரையாடினோம், பெரியார் பிறந்த நாளையொட்டி பெரியார் படிப்பகம் சென்று கொண்டாடினோம். மேலும், குழந்தைகளின் மீதான வன்முறை, LGBT பற்றியும் உரையாடினோம். சமூகப்பிரச்சனைகள் மற்றும் சமூக மாற்றத்திற்கான திரைப்படங்கள் (சாவித்திரிபாய் பூலே, Railway Children, Take off, Wonder, மேரிகோம், காஞ்சிவரம், தங்கப்பாவின் ஆவணப்படம், மேற்கு தொடர்ச்சி மலை) சிலவற்றை பார்த்தும், உரையாடினோம். மேலும், பவா செல்லதுரையுடன் 'கதை மூலம் நிகழும் மாற்றங்கள்', வசந்ததேவி அவர்களுடன் இன்றைய பள்ளிக்கல்வி சூழல் பற்றியும் கல்வி அமைப்பின் செயல்பாடுகளிலும் சமூக மாற்றத்திலும் ஆசிரியரின் பங்கு பற்றியும் உரையாடினோம். இந்த அனைத்து நிகழ்வுகளின் தொடர்ச்சியாக வகுப்பறைக்குத் தேவையான வளங்களைத் தேர்ந்தெடுத்து வகுப்பறையில் பாடங்கள் கற்பித்தலோடு இணைத்து சமூக உணர்வையும் மாணவர்களுக்கு ஊட்டி வருகிறோம். ஆசிரியர்களிடையே நிகழ்ந்த இந்த மாற்றங்கள் பற்றி இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

## நீள் கனவு ஆசிரியர்களுக்குள் ஏற்படுத்திய மாற்றங்கள்

**ஔவையார்:** நீள் கனவின் முதல் அமர்வு ஐக்கியம் சங்கர் அண்ணனோடு ஔவையார் பாடல்கள் என அமர்க்களப்பட்டது. "எட்டேகால்லட்சணமே எமனேறும் பரியே மட்டில் பெரியம்மை வாகனமே முட்ட மேற்கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே ஆரையடா சொன்னாயடா" என்ற ஔவையாரின் வரிகளும் அந்த வரிகள் பிறந்த கதையும் தான் அமர்வின்

கலகலப்பிற்குக் காரணமாயிற்று. ஔவையாரின் நகைச்சுவை உணர்வு மட்டுமல்ல அவரின் தீரமும் எங்களை ஆச்சரியப்பட வைத்தது. மேலும், தேடல் அதிகமாகி சமதர்மம், வீரம் எனப் பல்வேறு குணாதிசயங்களை விவரிக்கின்ற ஔவையாரின் கல்விச் சிந்தனையைக் கண்டு எடுத்தோம்.

“ஒன்றாகக் காண்பதுவே காட்சி புலன் ஐந்தின் வென்றான் கண் வீரமே வீரம் என்றாலும் சாகாமல் கற்பதுவே கல்வி பிறர் தன்னை ஏவாமல் உண்பதுவே ஊன்”

பொதுவாகவே நண்பர்களுடன் கலந்துரையாடியதைப் பள்ளியின் சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்வது எனது வாடிக்கை. அதுபோல நீள் கனவிற்குப் பிறகு பகிர்ந்த கருத்துக்களின் விளைவு எங்கள் பள்ளியினுடைய ஆசிரியர்கள் அறையின் கரும்பலகை ஒரு நாளும் கருப்பாக இருந்ததில்லை. ஔவையார் பாடலில் ஆரம்பித்து ஜேக்ஸ்பியரின் sonnet வரை நிதம் ஒன்றைத் தாங்கிக் கொண்டு நின்றது எங்கள் கரும்பலகை என்பதே நீள்கனவின் சிறப்பம்சம்.

**பாரதியார்:** தொடர்ந்து பாரதியோடு சில நாட்கள் நடை பழகினோம்

“தேடிச் சோறு நிதந் தின்று - பல

சின்னஞ்சிறுகதைகள்பேசி ............... நான்

வீழ்வேன் என்று நினைத்தாயோ?” என்ற வரிகள் இல்லாமல் பாரதியை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. பாரதியின் பாடல்கள் மட்டுமல்ல பாரதியின் கதைகள், கட்டுரைகள் என்று பலவற்றைப் படித்து மகிழ்ந்தோம்.

பாரதியின் குயில்பாட்டிற்கு மட்டுமே ஒரு அமர்வு தேவைப்பட்டது. வளர் இளம் பருவத்தினரின் காதல், அதன் விளைவுகள் இவற்றை மாணவர்களிடையே விளக்க, குயில் பாட்டின் உதவியை நாடி எங்கள் கருத்துரையும் கலந்துரையாடலும் நிகழ்ந்தன. ஐயா மாடசாமி அவர்கள் தலைமை வகித்து அவர்களின் எழுத்துலக சாம்ராஜியத்தில் அவருக்கேற்பட்ட சுவையான அனுபவங்களையும் அறிவொளி இயக்கத்தின் பொருட்டு ஊர் ஊராகச் சென்று மக்களைச் சந்திக்கும் போது ஏற்பட்ட விந்தை அனுபவங்களையும் கற்றுக் கொண்ட பாடங்களையும் பகிர்ந்து கொண்டார். ஒவ்வொரு ஊரிலும் உள்ள சொலவடைகள் பற்றி அவர் மேற்கொண்ட ஆராய்ச்சி எங்களை வியப்பில் ஆழ்த்தியது. அன்று, பாரதியின் பாடல்களில் தேனில் மூழ்கிய வண்டென கிறங்கித்தான் போனோம். பாரதியாரின் ஒரு வரியை வைத்து இரு பட்டிமன்றமே நடத்திவிடலாம். ஒரு ஆகச்சிறந்த தலைவன், நேர்மை மாறா பத்திரிக்கையாளன், கேலிச் சித்திரம் படைத்த நகைச்சுவை நாயகன், புதுக் கவிதை நாயகன், சந்தக்கவி பாடிய சிந்துக் கவி, சமூகநீதிக் காவலன், சுதந்திரத் தாகத்தை அள்ளி அள்ளி பருகச் செய்த மாமனிதன், புதுப்புது வார்த்தைகள் பரிணமிக்கும் வங்கக் கடல் என்று பாரதியைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

தொடர்ச்சியாக பாரதி நினைவு நாளன்று புதுவையிலுள்ள பாரதியின் நினைவு இல்லத்திற்குச் சென்ற பொழுது திரு. அறிவன் என்பவர் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். பாரதி மற்றும் புதுவை பற்றிய தகவல்களை அவர் திரட்டிய அரிய தகவல்கள் பரதியின்பால் எங்களுக்கிருந்த காதலைத் தீவிரமடையச் செய்தது. அங்கே இசைக்கப்பட்ட பாரதியின் பாடல்களுள் பிஜி தீவுக்கு இடம்பெயர்ந்த நம் தமிழ் மக்கள் படும்பாட்டை எண்ணி பாரதி பாடிய ‘கரும்பு தோட்டத்திலே’ பாடல் மனதை நெகிழ வைத்துவிட்டது. மேலும் அறிவன் அவர்களுடனான உரையாடலில் பிஜி சென்ற இந்தியர்கள் பற்றிய தரவுகள் இந்தியாவில் கிடைப்பது அரிது என்று தெரிந்து கொண்டோம். ஆனால், ‘இதனை தன் பாடல்களின் மூலம் ஆவணப்படுத்திய பெருமைகளைக் கொண்ட பாரதியைப் பார்த்துவிடமாட்டோமா’ என்ற ஏக்கம் இந்த நிமிடம் வரை நெஞ்சை அழுத்துகிறது. அவன் கரம்பிடித்து புதுவை நகர் முழுவதும் வலம் வர வேண்டும் என்ற பேராசை பௌர்ணமி காலத்து பேரலையைப் போல ஓயாமல் அடித்துக் கொண்டே இருக்கிறது.

**பெரியார்:** தொடர்ந்து அவருடைய சமகாலத்தவரான ஈரோட்டுச் சிங்கம் பெரியாரின் சமதர்ம சிந்தனைகளையும், சமதர்ம சமுதாயம் படைக்க அவர் ஆற்றிய தொண்டினையும், அதனால் அவர் அடைந்த இன்னல்களையும் அவமானங்களையும் பட்டியலிட்டார் திருமதி வ. கீதா. மேலும், பெரியாரின் கட்டுரைகள் பலவற்றை வாசித்து, தெளிவு கிடைக்க வாய்ப்பு கொடுத்தது இந்த நீள்கனவு திட்டம். பொதுவுடைமையைப்



பாடியவன் பாரதி என்றால் பொதுவுடைமைக்காகப் போராடியவர் பெரியார் என்றே சொல்ல வேண்டும்.

பெரியாரின் கட்டுரைகள் அன்றைய சமூகத்தை அப்படியே நம்மிடம் எதிரொலிப்பதாக உள்ளது. எந்த காலகட்டத்தில் அவருடைய கட்டுரைகள் எழுதப்பட்டன? எதனால் அவற்றை எழுதினார் என்ற பின்புலம் நமக்குப் புரிந்துவிட்டால் பெரியாரின் நியாயங்கள் நம்மையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பெரியாரின் “பொது உடைமையா? பொது உரிமையா?” என்ற கட்டுரை அன்றைய சமூகத்தின் அவலத்தை பட்டவர்தனமாக நமக்கு எடுத்து இயம்புகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் அதே அவல நிலை இன்றைக்கும் தொடர்வதே. ஆனால் போராட, பெரியார் தான் இல்லை. சாதிக் கொடுமைகளும், ஆணவக் கொலைகளும், தீண்டாமையும், உரிமை இழப்பும் தொடர்ந்து வெவ்வேறு வடிவங்களில் இருந்து கொண்டேதான் இருக்கிறது என்பது வேதனையின் உச்சக்கட்டம். நீள்கனவு பெரியாரின் சமதர்ம சமுதாயம் படைக்க முன்முயற்சிகள் மேற்கொள்கிறது என்பதனைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொடர்ச்சியாகப் பெரியார் நூலகம் சென்று அதன் செயல்பாடுகள் பற்றியும் தெரிந்து கொண்டோம்.

மேலும், நீள்கனவில் ரோஹித் வெமுலாவின் ஆவணப்படம் இட ஒதுக்கீடு பற்றிய என்னுடைய கருத்தை சுக்குனூறாக்கிவிட்டது. மேலும், தங்கப்பாவின் ஆவணப்படம், பவா செல்லதுரையுடன் ‘கதை மூலம் நிகழும் மாற்றங்கள்’ என்ற தலைப்பில் உரையாடல் ஆகியவையும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள். கதை மற்றும் அதன் தாக்கங்களைப் பற்றி ஆழமாக உரையாடியதன் பயனாக விக்ரமாதித்தன் கதைகள் தொகுப்புகளை ஆரம்பித்து, வாரம் ஒரு சிறுகதையாக பதிவு செய்து தொலைபேசியில் எங்கள் பள்ளி ஆசிரியர் குழுவிற்கு அனுப்பினேன். இதற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. மாணவர்கள் தாங்களாகவே என்னைப் போல் கதையைப் பதிவு செய்தும் நேரில் சொல்லியும் காட்டினர். மேலும், ஒரு நாள் விட்டுப்போனாலும் என்னை அழைத்துக் கேட்க ஆரம்பித்தனர். கதைகளைக் கேட்பதே ஒரு கற்றல் அனுபவம் என்பதும் மாணவர்களைக் கதைகளின் மூலம் கற்றலில் ஈடுபடுத்த முடியும் என்ற கருத்து இதன் மூலம் வலுப்பெற்றது.

## நீள்கனவு ஒரு தொடர்ச்சி

நிறைய நேரங்களில் நீள்கனவு விவாதங்கள் கட்டுக்கடங்காமல் போனதுண்டு. தூக்கத்தை மறந்து எங்கள் whatsapp குழுவில் நடுநிசி தாண்டியும் நாங்கள் விவாதித்ததுண்டு. இந்த விவாதங்கள் எங்களைப் பக்குவப்படுத்தி பலப்படுத்தியது என்பதனை ஆணித்தரமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். சீரிய சமுதாயம் படைக்க ஒரு ஆசிரியராக மேற்கொண்டு நாங்கள் செய்ய வேண்டியவை என்ன என்பதை நீள்கனவு எங்களுக்குள் விதைக்கத் தொடங்கியது. விதை நிச்சியம் ஒரு நாள் விருட்சமாகும். நீள்கனவு நிகழ்வுகளில் மேம்பட்ட நாங்கள் சிற்பிகள் குழிவாக மாறி சிற்சில வேளைகளில் ஈடுபட்டோம். மேலும் நாடகக்கலைஞராக களப்பணியாளராக...... என மாறியுள்ளோம். விருட்சம் வனமாகும். இந்தப் பசுமை மாறாக்காடுகள் நிச்சியம் ஒரு நாள் பூமித்தாயின் காவலன் ஆகும்.

“உலகம் உய்ய நீள் கனவு நிச்சயம் தொடரும்... “



**பச்சையம்மாள்,**
ப.ப.ஆ, அரசு பெண்கள்
மேல்நிலைப்பள்ளி, காலாப்பட்டு

# நீள்கனவுடன் களப்பயணம்

## நீள்கனவுடன் நான்:

நீள்கனவு என்பது கனவு என்பதைத் தாண்டி அத்தகைய கனவை நினைவாக்க உருவாக்கப்பட்ட ஒரு அடித்தளம் ஆகும். மாணவர்கள் சமூகத்தில் தன்னுடைய நிலைமை என்ன என்பதைப் பற்றியும், அச்சமூக மாற்றத்திற்குத் தேவையானவை என்ன என்பதைப் பற்றியும் தன்னால் சமூக மாற்றத்திற்கு என்ன செய்ய இயலும் என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள நீள்கனவில் பயிற்சி பட்டறைகள் நடக்கின்றன. ஆசிரியராக என்னுடைய மாணவர்களுக்கு எடுத்துச் செல்ல ஊன்றுகோலாய் நீள்கனவு இருந்து வருகிறது.

ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடத்தைத் திணிப்பவராக இல்லாமல், அவர்கள் கற்றுக்கொள்ள ஏதுவானவராக இருக்கவும் ஏட்டுக் கல்வியைத் தாண்டி அனுபவக் கல்வியை அளிப்பவராகத் திகழவும் நீள்கனவு பயன்பட்டது. நீள்கனவு பயிற்சிப்பட்டறையில் நிகழப் பெற்ற திரைப்படங்கள் மற்றும் புத்தகங்கள் குறித்த உரையாடல்கள் ஒவ்வொன்றும் ஆசிரியராக சமூகத்தில் என்னுடைய பணியை எடுத்துரைத்தது.

மேரி கோம், ஹிட்ச்கி, வொண்டர், தீவரைவு.... போன்ற திரைப்படங்கள் சமூக மாற்றத்திற்கு மாணவர்களை இட்டுச்செல்லுதல் குறித்து விவாதித்தோம். அவர்களின் மனதில் நற்கருத்துகளையும் நற்பண்புகளையும் விதைப்பதற்கும், மாணவர்கள் மூலம் நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கும் பெரியார், வள்ளலார் போன்றோர் ஆசைப்பட்ட மாணவர்களை உருவாக்குவதற்கும் கருவறையாய் நீள்கனவு பயிற்சிப்பட்டறைகள் நிகழ்ந்தன. கற்பித்தல் மூலம் சமூக மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்ற தன்னம்பிக்கையை ஆசிரியராகிய என்னுள் விதைத்தது நீள்கனவு. நீள்கனவு சேர்வதற்கு முன் நான் இருந்ததைவிட நீள்கனவில் சேர்ந்தபின் நான் என் கற்பித்தலில் மாற்றத்தை நிகழ்த்தினேன். பாடங்களை வாழ்க்கையுடனும், சமூகத்துடனும் தொடர்புப்படுத்தி எவ்வாறு கற்பிப்பது என்பதைக் கற்றுக்கொண்டேன்.

தமிழ்ப்பாடத்தைக் கற்பிக்கும் போது அதற்குத் தொடர்புடைய கதைகளை இணைத்துக் கற்பிப்பது என்றும் அதில் மாணவர்களின் பங்கேற்பைப் பயன்படுத்துவது குறித்தும் அறிந்து செயல்படுத்தினேன். இதற்கு இவ்வளமையத்தில் கொடுக்கப்படும் பல பயிற்சிகள் பயனுள்ளவையாக இருக்கின்றன.

நீள்கனவின் மூலம் நாங்கள் பார்த்த திரைப்படங்கள் நடத்திய விவாதங்கள், வாசித்த புத்தகங்கள், கலந்தாய்வுக்கூட்டங்கள் வாயிலாக எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள் ஏராளம். அக்கருத்துகளை மாணவர்களுக்கு எடுத்துச் செல்ல, 'களப்பயணம் செல்வோம்', 'காடு எம் வீடு', 'போரைத் தடுத்த புலவர்' போன்ற பாடங்கள் உதவியாக அமைந்தது.

புத்தகத்தில் இருப்பவற்றை அப்படியே படித்துக்



கற்பிப்பவராக இல்லாமல் புத்தகத்தைத் தாண்டி கற்றுக்கொள்வதற்கு ஏணியாக இருக்க வேண்டியது ஆசிரியரின் வேலை.

## "களப்பயணம் செல்வோம்" திட்டம்:

திருவள்ளுவர் மாவட்டம், திருவள்ளுவர் அரசுத் தொடக்கப் பள்ளியில் 5 - ம் வகுப்பு மாணவர்கள் தம் ஆசிரியருடன் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்குக் களப்பயணம் சென்றோம். அங்கு அதிக விளைச்சல் தரும் புதிய நெல்வகைகளை உருவாக்குதல், பழமரக்கன்றுகள், காய்கறிகள் விதைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் அகியவற்றைப் பற்றி அறிந்து கொண்டோம்.

மேலும், நெல் ஆராய்ச்சி நிலையங்கள் குறித்தும், புதிய ரக நெல்விதைகள் குறித்தும் அறிந்து கொள்ளுதல் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய நெல்வகைகள் குறித்தும், பசுந்தாள் உரங்களின் செய்முறை குறித்தும் அறிந்து கொண்டோம்.

## கற்றல் திறன்கள் :

- மாணவர்களுக்கு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அறிந்து கொள்ளுதல்.
- மாணவர்களுக்கு அனுபவக் கல்வியைப் பெறச்செய்தல்.
- சமூகத்தில் மாணவர்களுடைய தேவையை அறியச் செய்தல்.

## களப்பயணமும் அதன் பயனும்:

நான் என் வகுப்பு மாணவர்களை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள விவசாய நிலத்திற்குச் சென்றேன். அங்கு நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகளிடம் பயிரிடும் முறை குறித்தும் பயிர்களின் பெயர்கள், மண்ணின் தன்மை, கால அளவு போன்றவற்றை கேட்டு அறிந்து கொண்டோம். விவசாயிகளிடம் வகுப்பு மாணவர்கள் பல கேள்விகளைக்கேட்டார்கள். நெல்லை விவசாயிகள் தங்கத்தை விட உயர்வானதாக எண்ணுகிறார்கள் அவர்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆளுக்கொரு வேலையைப் பகிர்ந்து செய்கிறார்கள் என்பதை மாணவர்களிடத்தில் விளக்கமாகக் கூறினர்.

உரங்கள் குறித்து மாணவர்கள் கேட்கும்போது அவர்கள் செயற்கை உரங்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் அதன் மூலம் மூன்று மாதத்தில் அறுவடை நடைபெறும் என்றும் கூறினார்கள். "இயற்கை உரம் பயன்படுத்துவதால் ஆறு மாதகாலம் ஆகின்றன" எனவும் கஷ்டப்பட்டு உருவாக்கி அதற்குரிய தொகை கிடைக்கப்பெறாததால் செயற்கை உரத்தைப் பயன்படுத்துகின்றோம் என்று கூறினர். "இது தீங்கு என்று தெரிந்தே பயன்படுத்துகிறோம்" என்று விவசாயிகள் கூறும் போது அவர்களின் நிலைமையை உணர முடிந்தது.

மேலும் அவர்கள் மாணவர்களிடம் "இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து நாங்கள் விளைவிக்கும் நெல்மணிகளை நீங்கள் வீணாக்கும் போது எங்களுக்கு வேதனைத் தருகிறது. ஆதலால் உணவை வீணாக்காமல் உண்ண வேண்டும்" என்று கூறினார்கள். அதன்பிறகு எம்மாணவர்கள் பள்ளி மதிய உணவை சிந்தாமல் வீணாக்காமல் உண்டனர். இதன் மூலம் உணவின் அவசியத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள் மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறினார்கள். காலைப் பேரவையில் மாணவர்கள் சார்பாக ஒரு வகுப்பு மாணவர் ஏதேனும் ஒரு நற்கருத்தைக் கூறவேண்டும் அதன்படி என் வகுப்பு மாணவர் ஜீவானந்தம் என்பவன் உணவின் அவசியத்தையும் விவசாயிகள் படும் துன்பத்தையும் எடுத்துக்கூறினான். எம் பள்ளியில் மீதமுள்ள உணவை மாணவர்கள் குப்பைத்தொட்டியில் கொட்டுவார்கள். அத்தொட்டி நிரம்பி வழியும். என் மாணவன் உணவின் அவசியத்தைப் பற்றிக் கூறிய பின் அத்தொட்டி அளவு குறைந்தது.

இக்களப்பயணத்தின் மூலம் மாணவர்கள் நல்ல அனுபவத்தைப் பெற்றனர். அவர்கள் வாழும் கிராமத்தில் நடைபெறும் விவசாயத்தையும் பற்றி அறிந்து கொள்ளாமல் இருந்தவர்கள் இதன் மூலம் விவசாயப் படிநிலைகளை அறிந்து கொண்டனர். அவர்கள் வளர்ந்த பிறகு விவசாயம் சார்ந்த படிப்புகளைப் படிக்க ஆசைப்படுவதாகக் கூறினார்கள். சமூகத்தில் உள்ள சூழலை மக்களின் தொழிலை நேரடியாகக் காண, அது பற்றி உரையாட, வாழ்வியலில் பயன்படுத்த இப்பயணம் பயன்பட்டது.



**ராஜேஷ்**
தொ.ப.ஆ
அ.உ.ப கொடாத்தூர்

# ஆசிரியச் சிற்பிகளும் படைப்புச்செயல்பாடுகளும்

சிற்பிகளாகிய நாங்கள் சசிகுமார், பச்சையம்மாள், கேஷவர்தினி, நாதன், ஜேம்ஸ், பத்மினி, சுபாஷினி, சங்கரதேவி, சண்முகப்ரியா, பவானி, ராஜேஷ், ராஜேந்திரன், ஆகியோர் சேர்ந்து பல குழந்தைகளின் கற்றல் மேம்படும் விதமாகவும், ஆசிரியரான எங்களையும் ஊக்குவிக்கும் முறையிலும் செயல்பாடுகளைச் செய்து வருகிறோம்.

## அ)சாவித்ரி பாய் பூலே படம் தயாரித்தல்

சாவித்ரிபாய் பூலே படமான "The first female teacher" STOP MOTION ANIMATION APP மூலம் உருவாக்கினோம். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கொண்டு செல்வது போல் இப்படத்தை இயக்கியுள்ளோம். NCERT நடத்தும் STOP MOTION ANIMATION போட்டியை முதன்மைப்படுத்தி நாங்கள் இதை செய்தோம். புது வேலை என்பதால் நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிக உழைப்புத் தேவைப்பட்டது. எங்கள் அனைத்து வேலைகளுக்கும் ஆசிரியர் வளமையத்தில் ஒரு இடம் அளிக்கப்பட்டதோடு, அனைத்து பொருள்களும் தந்து உதவியதை இங்கு குறிப்பிட வேண்டும். NCERT விருது மற்றும் உலக திரைப்பட விழா திரையிட்டப் பள்ளிகளில் இடம்பிடித்தது என வரவேற்பைப் பெற்ற படம்.

*https://youtu.be/_1bi7o85QUY*

## ஆ) சாவித்ரி பாய் பூலே விழா

கடந்த ஆண்டுகளில் சாவித்ரிபாய் விழாவை பெண் ஆசிரியர்கள் தினமாகக் கொண்டாடினோம். இவ்விழாவினைச் சிற்பிகள் மற்றும் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் இணைந்து நடத்தினோம். ஜீவானந்தம் பள்ளியில் இயக்குனரின் அனுமதியோடு இவ்விழா நடந்தது.

## இ) கதை ஆடியோ

எப்பொழுதும் கதை வாசித்து எங்களுக்கு ஒலி வடிவில் அனுப்பி வைப்பார்கள் ஆசிரியை பச்சையம்மாள். சிற்பிகள் சார்பாக அவர்கள் வாசித்த விக்ரமாதித்தன் கதைக்கு ரசிகர்களாக குழந்தைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றனர்.

*https://youtu.be/SK8jmjKINGU*

ஈ) **Giving Tree**

**Giving** tree பாடத்தை மாணவர்கள் முப்பரிமாணக் காட்சிப்படுத்துதலாக sand tray வடிவில் செய்து இருந்தனர். இக்காட்சிகளுக்கு அசைவு கொடுத்தால் என்னவாகும் என்பதன் பிரதிபலிப்பே இப்படம். இப்படத்தை நாங்கள் இருவரும் (சுபாஷினி,







நாதன்) சேர்ந்து இயக்கினோம். அப்பாடத்தை நடத்தும்பொழுது மாணவர்களுக்குப் போட்டுக் காட்டியதோடு மற்ற ஆசிரியர்களுக்கும் பகிர்ந்து கொண்டோம். அப்பாடத்தை/கதையை இன்னும் கொஞ்சம் மாற்றி எடுத்திருக்கலாம் என பின் யோசித்தோம்.

*https://youtu.be/m0qE7_zkYsQ*

## உ) மணப்பேட்பள்ளி மாணவர்களுக்கானப் பயிற்சி

சிற்பிகள் மூலமாக கேஷவர்தினி, பவானி, ஜேம்ஸ், சண்முகபிரியா, சசிகுமார் ஆகியோர் இணைந்து, அருகில் உள்ள 6 பள்ளிகளிலிருந்து மாணவர்களை ஒருங்கிணைத்து கைவினைப்பொருட்கள் செய்தல், செய்த பொருட்களை மையமாகக் கொண்டு மாணவர்கள் சொந்தமாக எழுதுதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினர்.

## ஊ) புத்தகம் பேசுது

'புத்தகம் பேசுது' பாடலை நீள்கனவு நிகழ்வுகளில் நாங்கள் பாடக் கற்றுக்கொண்டதோடு பள்ளிகளில் குழந்தைகளைப் பாடவைத்தோம். அதற்குக் காட்சி வடிவம் கொடுக்கும்படி ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறிய ஆலோசனையை நடைமுறைப்படுத்தினோம். அதுவும் இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

## முடிவு

சிற்பிகள் இன்னும் என்ன செய்ய இருக்கிறது என்ற ஆசிரியர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ப எங்களது செயல்பாடும் முயற்சியும் தொடரும் என நம்புகிறோம்.



**சுபாஷினி**
தொ.ப.ஆ
அ.உ.ப. நோணாங்குப்பம்



**நாதன்**
தொ.ப.ஆ
அ.தொ.ப. சின்னகரையாம்புத்தூர்

# யார் குடும்பம்?

என் பெயர் அன்த்துவான் ஜோசப். நான் அரசுப்பள்ளி ஆசிரியராக 20 வருடகாலமாகப் பணியாற்றி வருகிறேன். தற்போது நான் அ.தொ.ப., பெரியார் நகரில் பணியாற்றிவருகிறேன். நான் வகுப்பறையில் பாடங்களை என் மாணவர்களின் வாழ்க்கைக்குப் பொருந்தும் வண்ணம் எடுத்துக்கூறுவேன். என்னைப் பொறுத்தமட்டிலும், வகுப்பறை என்பது ஆசிரியரும் மாணவர்களும் அவர்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான இடமாகும்.

## நீள்கனவு

சமுதாயம் பற்றிய புரிதலை மாணவர்களிடம் ஏற்படுத்த உருவாக்கப்பட்ட திட்ட வரைவே ‘நீள்கனவு’. சமுதாய மாற்றத்திற்கான முயற்சியில், ஆசிரியர்கள் ஒரு முக்கிய பொறுப்பு வகிக்கிறோம். நம் குழந்தைகளுக்குச் சமத்துவம், சமதர்மம், பாலின சமத்துவம் ஆகியவற்றைக் கற்பிப்பது இன்றைய நிலையில் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். நீள்கனவு மூலம் நாம் பிரிவினை (சாதி, வர்க்கம்,மதம், பாலினம்) மற்றும் ஆதிக்கம் (சாதி, மதம்,வர்க்கம், பாலினம்) ஊடுருவிய ஒரு சமூகத்தில் வாழ்கிறோம் என்று உணர்ந்தேன். ஒரு கல்லை, ஒரு சிற்பி சிலையாக மாற்றுகிறான். அது வரை அந்த சிலையைச் சிற்பமாக செதுக்கிய அம்மனிதன், அச்சிலை மூலஸ்தானத்திற்கு கடவுள் என்று அங்கீகரிக்கப்படும் போது, சிலையைத் தொடவோ அருகில் நின்று பார்க்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. நம் சமூகத்தில், ஒரு விசயத்தின் ஆக்கப் பொறுப்பில் இடம்பிடிக்கும் பலர், அதை அனுபவிக்கும் சிலருடைய பட்டியலில் இடம் வகிப்பதில்லை.

வர்க்கம், சாதி போன்ற காரணங்களால் என் குழந்தைகள் துன்புறக் கூடாது என்ற எண்ணத்தில், என் வகுப்பறையில் நான் பிரிவுகள் உண்டாகும் ரீதியில் அவர்களது சாதியைச் சொல்ல சொல்வதில்லை. அவர்களது நுட்பமான உணர்வுகளை மதித்தல், வாழ்வியலை உற்று நோக்குதல் என செயல்படுகிறேன். இவர்கள் நலிவுறுவதற்குக் கல்வியின்மை ஒரு காரணமேயானாலும், நம்மிடமிருந்து கல்வி அறிவு பெற்ற பின்பு, இந்தக் குழந்தைகள், சாதிப் பிரிவினைக்கு ஆளாகும்போது எப்படி நேர்கொள்வார்கள் என்ற கேள்வி எனக்கு இல்லாமல் இல்லை.

## மாணவர் வாழ்வில் குடும்பத்தின் பங்கு

ஒருமுறை, என் வகுப்பில் ஒரு குழந்தை மிகவும் அமைதியாக, வகுப்பறை நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் காணப்பட்டாள். நான் அவளிடம் உரையாடிய போது, அவள் வீட்டு நிலைமை சரியில்லை



என்றும், அவள் அப்பா தினமும் அவளுடைய அம்மாவை உடல் ரீதியாக துன்புறுத்துவார் என்றும் எனக்கு தெரியவந்தது. அதுவரை, நான் அந்த குழந்தை எல்லா வளங்களும் நிறைந்த ஒரு குழந்தை என்று நினைத்தேன். அன்று நடந்த உரையாடலின் முன்னே, நான் இந்த குழந்தைக்கு இப்படி ஒரு வீட்டு சூழ்நிலை இருக்கலாம் என்றோ, அது அவளை மனதளவில் பாதிக்கும் என்றோ நான் நினைத்துப் பார்த்ததில்லை. அன்று முதல், என் மாணவர்களின் "குடும்பம்" அவர்களுடைய ஆளுமையைச் செதுக்கும் முக்கியமான ஒன்றாக நான் பார்க்க ஆரம்பித்தேன்.

பொதுவாக அரசு பள்ளியில் பயில வரும் மாணவர்களுள் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்கள் மட்டுமல்லாமல், நிரந்தரமானக் குடியிருப்பு இல்லாமல் வாடகை வீடுகளில் தங்கிப்படிக்கும் மாணவர்களே அதிகம். இதுவே ஒரு சில நேரங்களில் அவர்கள் தொடர்ந்து ஒரே பள்ளியில் கல்வியைத் தொடர்வதற்கு முடியாமலும் போகிறது. மேலும் குடும்ப உறவுகளில் பிரிவு, சண்டை ஆகிய காரணங்களால் பிள்ளைகள் அலைக்கழிக்கப்பட்டு தங்கள் கல்வியில் ஆர்வம் காட்டாமலும் காட்ட முடியாத நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

ஒரு குழந்தை ஆரோக்கியமான உடலையும் உள்ளத்தையும், ஞானத்தையும் பெற வேண்டுமானால் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க உறைவிடம் மட்டும் போதாது. அது தவிர அவர்களிடம் பரிவுகாட்ட வேண்டும். அவர்களைச் சரியான முறையில் வழி நடத்த, அவர்கள் தவறு செய்யும் பட்சத்தில் அவர்களைத் திருத்த, நேர்மையான வழியில் ஈடுபடுத்த, தன்னுடைய அன்றாட கடமைகளையும் பணிகளையும் அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு நிலையிலும் தந்தையாக, தாயாக, சகோதரனாக உற்ற நண்பனாகவும் இருந்து தம்மை வழி நடத்திட ஒரு நல் இதயம் இக்குழந்தைகளுக்குத் தேவைப்படுகிறது. மேற்கூறிய இச்சூழலைத்தான் ஆசிரிய மக்களாகிய நாம் அப்பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். பாடங்களை அவர்களிடத்தில் திணித்தல் ஆகாது. வகுப்பறையில், நாம் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க விரும்புவதை, ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் அவர்கள் உள்ளார்களா என்பதையும் அவர்களை ஏதாவது மனதளவில் தொந்தரவு செய்கிறதா என்றும் நாம் கவனிக்க வேண்டும். எனவே வகுப்பறையில் நாம் அதிகாரம் செய்வதைத் தவிர்த்து உரையாட வேண்டும்.

## யார் குடும்பம்? – ஒரு நீள்கனவு செயல்பாடு

EVS-ல், வெவ்வேறு குடும்பங்கள் குறித்த ஒரு பாடத்தில், "யார் குடும்பம்?" என்ற தலைப்பில் நாங்கள் ஒரு செயல்பாட்டைச் செய்தோம். பாடம் துவங்குவதற்கு முன், மாணவர்களிடம், அவர்களைப் பொறுத்தவரை குடும்ப உறுப்பினர் பற்றிய வரைபடம் ஒன்று வரையச் சொன்னோம். செல்வகுமார், வரைந்த ஒரு ஓவியம் முக்கியமானதாக இருந்தது. காரணம், அவன் வரைந்த ஓவியத்தில் இடம் பெற்றது இரு மனித உருவங்கள்தான். அதில் ஒன்று அச்சிறுவனாகவும் மற்றொன்றைத் தன் நண்பனாகவும் வரைந்தது தான். செல்வகுமாரைத் தொடர்ந்து, என் வகுப்பறையில்



பல மாணவர்கள், தங்கள் நண்பர்களைத் தங்கள் குடும்பத்தில் ஒரு அங்கமாய் கண்டார்கள். பின்பு, சில புகைப்படங்களைக் காட்டினோம், அவற்றுள் எதெல்லாம் குடும்பமாக இருக்கும் என்று மாணவர்களிடம் யூகித்து பதில் சொல்ல சொன்னோம். அப்பொழுது, அவர்கள் கூறிய பதில்களுள், "குடும்பம் தான் "என்ற பதிலுக்கான

பெரும்பாலுமான புகைப்படங்களில், ஒரு சிறுவரோ ,பெரியவரோ இருந்தால் அது குடும்பம் என்று கருதினார்கள். பின்பு, பாடம் தொடர்புடைய "**Madeline**" என்ற புத்தக தொகுப்பிலிருந்து, விடுதியில் தங்கும் மாணவர்கள் குறித்து ஒரு கதை படித்தோம்.

அந்த கதையைப் படித்து முடித்த பிறகு, "இந்த கதையில் வரும் கதாபாத்திரங்கள் ஒரு குடும்பமா இல்லையா?" என்று கேட்டபோது, அவர்கள் முதலில் தயங்கினர். பின்பு, முந்தைய செயல்பாட்டில் காட்டிய ஒரு புகைப்படத்தைக் காட்டி "இந்த படத்தில் வரும் கதாபாத்திரங்கள் தான் நாம் கதையில் பார்த்தோம். அப்போது, இவர்கள் குடும்பமா? "என்று கேட்டதற்கு "ஆம்" என்றார்கள். ஏன் என்று கேட்டதற்கு, எல்லா நண்பர்களும் ஒரு குழந்தைக்கு உடல்நலக் குறைவு உண்டான போது ஒருசேர மருத்துவமனையில் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். அதனால் இவர்கள் ஒரு குடும்பம் தான் என்றும், நமக்கு பிடித்தவர்கள் நம் குடும்பம் தான் என்றும், கூடுதலாக வினவியபோது கூறினார்கள். இக்கதையைப் புதுவிதமாக என் மாணவர்கள் ரசித்தார்கள். வழக்கமாக அம்மா, அப்பா, தம்பி, தாத்தா, பாட்டி என்று இரத்தபந்தங்களால் மட்டும் குடும்பங்கள் இயங்குவதில்லை; நமக்கு வேண்டப்பட்டவர்கள், நண்பர்கள், நம்மீது பாசம் காட்டுபவர்கள் என்று, தன்னை மிகவும் கவர்ந்த, தன் வாழ்வில் முக்கிய இடம் பெற்ற, தம்மீது அக்கறையும், அன்பும் கொண்ட அனைவரும் தம் குடும்பத்தில் ஒருவர் தான் என்று என் பிள்ளைகள் புரிந்துகொண்டார்கள். குடும்ப அமைப்பு வெவ்வேறு வடிவில் செயல்பாடுகளில், புரிதலில், நிஜவாழ்வில், இருப்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவினேன்.



**அன்த்துவான் ஜோசப்**
தொ.ப.ஆ
அ.தொ.ப, பெரியார் நகர்

# மாணவர்களுக்கான நீள்கனவு

நீள்கனவு குழுவில் ஆசிரியர்களாக எங்கள் புரிதல், செயல்பாடுகள் கூடிவருவதை எதிரொலிக்கும் விதமாக வகுப்பறை இருந்தது. ஆரம்பப்பள்ளிகளில் பாடல்கள், நாடகங்கள் வாசிப்பு என எடுத்துச்சென்றார்கள். ஆனால், நடுநிலைப்பள்ளி என்பதால் நான் வாசிப்பு, உரையாடல் ஆகியவற்றைத் தொடர் செயல்பாடாக எடுத்துச்சென்றேன்.

பெண்கள் பள்ளி என்பதால் வாசிப்புப் புத்தகங்களாக பெண் சார்ந்த கதைகளைத் தேர்வு செய்தோம். மருமகள் வாக்கு, ஐந்து பெண்கள் பெற்ற ஆவுடையப்பப்பிள்ளை, அம்மாவுக்குக்கடிதம், தேர்தல் தந்திரம் போன்ற கதைகளைக் கொடுத்தேன். இங்கு 'ஏன் ஏன் சிறுமி', 'ஆண் பிள்ளையார்! பெண் பிள்ளையார்!', 'பெரியார் கட்டுரை' ஆகியவற்றை மாணவிகள் வாசித்து உரையாடியது பற்றிப் பகிர்ந்து கொள்கிறேன்.

**ஏன் ஏன் சிறுமி -** மாணவிகள் சத்தமாகவும் தனியாகவும் படித்தனர். படித்து முடித்ததும் அதைப்பற்றிப் பொதுவாக உரையாடி, பின் குறிப்பிட்ட கேள்விகளுடன் உரையாடினோம்.

"மொய்னாவைப் போல் கேள்வி கேட்கும் பழக்கம் உங்களில் யார் யாருக்கு உள்ளது?", ஏறக்குறைய எல்லா மாணவர்களும் கைத்தூக்கினர்.




"எந்த மாதிரி கேள்விகளை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்?"

•நான் மட்டும் ஏன் பாத்திரம் தேய்க்க வேண்டும்?

•நான் ஏன் விளையாட வெளியே செல்லக்கூடாது?

•என்னை மட்டும் எப்பொழுதும் ஏன் திட்டுகிறார்கள்?

•என்னை எப்பொழுதும் அடக்குகிறீர்கள்?

இது போல் ஒவ்வொரு மாணவியும் தனக்கு எழும் கேள்விகளைப் பற்றிப் பகிர்ந்து கொண்டனர். அடுத்து நாங்கள் கேட்ட கேள்வி "நீங்கள் இந்தக் கேள்விகளை வீட்டில் கேட்டீர்களா? என்ன பதில் வந்தது?" என்று கேட்ட பொழுது சலசலப்பு ஏற்பட்டது, மாணவிகள் அடிவாங்கியது பற்றியும் பகிர்ந்து கொண்டனர். மொய்னாவை மாதிரியாகக்கொண்டு உங்கள் கதையை எழுதுங்கள் என்ற வீட்டுப்பாடம் அளித்ததும் 7 மாணவிகள் எழுதி எடுத்துவந்தனர்.

**பெரியார் கட்டுரை:** பெண்கள் வேலைக்குச் செல்லலாமா? என்பது பற்றிய கட்டுரை வாசித்தோம். மாணவிகள் படித்தனர். அவர்களுக்குப் பெண்கள் படிக்க முடியாத நிலை, வேலைக்குப் போக முடியாத நிலை அவர்களுக்குப் புதிதாக இருந்ததோடு



அதைப்பற்றி பல விவரங்களைக் கேள்வி எழுப்பி தெரிந்து கொண்டனர். பெரியார் பற்றி அடுத்தடுத்த கட்டுரைகளைப் படிக்க ஆர்வம் காட்டினர். மூன்று கட்டுரைக்கு மேல் என்னால் கொண்டு செல்ல முடியவில்லை. 'ஒடுக்கப்பட்ட பெண் இனம்' கட்டுரை படித்த பின் மாணவிகள் சில கேள்விகளுக்கு எழுதியிருந்த பதில்கள் மூலமாக அவர்களின் புரிதல்கள் மற்றும் தலைப்பைப் பற்றி அவர்கள் சிந்திக்கத் துவங்கியதை அரிய முடிந்தது.

**ஆண்பிள்ளை யார்! பெண்பிள்ளை யார்:** இப்புத்தகத்தை ஒவ்வொரு பக்கமாகப் படித்து உரையாடினோம். கமலா பாசின் அவர்கள் சமூகப்பாலியலைப் புரிந்துகொள்ளுவதற்காக எழுதியுள்ள புத்தகம் இது. ஆண்களும் பெண்களும் ஒரே வேலையைச் செய்கிறோம். ஆனால் ஒரே மாதிரி பார்க்கப்படாததற்குக் காரணம் பற்றி உணரும் புத்தகம்.




வகுப்பறையில் வாசிப்பும் மகிழ்ச்சியாக நடந்தது. மேற்கண்ட புத்தகங்கள் எட்டாம் வகுப்பு மாணவிகளுடன் நான் தொடர் உரையாடலுக்கு எடுத்துச் சென்றேன். இதே புத்தகங்களை மற்ற மாணவிகளுக்கும் வாசிக்கக் கொடுத்து அனுப்புவேன். புத்தக வாசிப்பு ஒரு குறிப்பிட்ட சதவிகிதக் குழந்தைகளுக்குத் தினப் பழக்கத்திற்கானதாக மாறியுள்ளது. குழந்தைகள் எடுத்துச் செல்லும் புத்தகத்தைப் பெற்றொர்களும் படிக்கத்துவங்கியுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட கதைகள் பெண் ஆளுமை, பெண்கள் தொடர்பான கேள்வி என்று இருப்பதால் மாணவிகளின் ஆளுமை மற்றும் சமூகச் சிக்கல்களுக்கு வழிகாட்டுவதாக அமையும்.

---



**பச்சையம்மாள்,** ப.ப.ஆ
அரசு பெண்கள்
மேல்நிலைப்பள்ளி,
காலாப்பட்டு

# அந்த எச். எம். ரெட்டியாராமே!

மூன்றாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வு, எங்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பு முடிக்க இருந்த ஒரு மாணவனின் தந்தை வந்தார். அப்போது கணினி அறையில் அமர்ந்து, செய்தித்தாளில் வந்திருந்த கல்வி தொடர்பான குறிப்பு ஒன்றை எழுதிக்கொண்டிருந்தேன்.

"வணக்கம் சார்!"

வாங்க அண்ணாச்சி உக்காருங்க.

எதிரேயிருந்த பெஞ்ச்சில் அமர்ந்தவர், வழக்கமான நலம் விசாரித்தலுக்குப் பின் பையனைப் பற்றிப் பேசினார்.

"அப்புறம் சார், முத்து எட்டு முடிக்கப்போறான். அடுத்து



எந்த ஸ்கூல்ல சேக்கலாம்? நீங்க ஒரு ஐடியா குடுங்க?"

"சங்கரன் கோவில் அரசு பள்ளி இருக்கே!"

"என்ன இப்பிடிச் சொல்லுதிய? லேசாகச் சிரித்துக்கொண்டே கேட்டார்."

"நான் ஒரு அரசுப்பள்ளி ஆசிரியர். அதான் அரசுப்பள்ளிய ரெகமண்ட் பண்றேன்!" நானும் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

"இல்ல... இன்னும் சில பேர்ட்ட கேட்டேன். அவங்க எல்லாருமே தனியார் ஸ்கூல்ல சேக்கச்சொல்லுதாங்க."

"எதுக்காம்?"

"கவர்மென்ட் ஸ்கூல்ல சேத்தா கெட்டுப் போயிருவானாம்?"

"ஏன்?"

"அங்க அடிக்கடி சண்ட வருமாம்?"

"சண்டையா? எப்பிடிஞ் பையங்க படிக்கத்தான போறாங்க?"

"நம்ம பையக படிக்கத்தான் போறானுக. மத்தவங்க?"

"அவர் குறிப்பிடும் மத்தவங்க யார் என்பது அனைவருக்கும் தெரிந்து தான்."

"அண்ணாச்சி... மத்தவங்களைப் பத்தி ஏன் பேசணும்? நாம எப்பிடி இருக்கோம்ணு பாப்போமே!"

சில விநாடிகள் அமைதியாயிருந்த நான், "இப்பல்லாம் கையில கயிறு கட்டிக்கிட்டு அலையிறது ஒரு வழக்கமாவே ஆயிருச்சுஞ் கவனிச்சீங்களா? என்றேன்."

"ஆமா சார். சிறுசுலருந்து பெரிசு வரைக்கும் கெட்டிக்கிட்டு அலையிது! என்று சிரித்தார்."

"இங்க உள்ளவங்களுந்தான் கெட்டுறாங்க!"

"அவர் சிறிது கூச்சத்துடன் உண்ம தான் சார் என்றார்."

"அண்ணாச்சி.... சமுதாயத்தில் சாதி இருக்கிற வரை பள்ளிக்கூடத்திலயும் சாதி இருக்கத்தான் செய்யும். அது இருக்கனும்னு சொல்ல, அத வச்சு சண்ட போடணும்ணு சொல்லல. மனுசன சாதியா பாக்காம, மனுசனாப் பாக்கத்தான் கற்றுக் கொடுக்குறோம். ஆனா வீடு தான் முதல் பள்ளி. நல்ல சூழல் அங்கிருந்து தான் தொடங்கணும். உள்ளதச் சொல்லுங்க, அப்பிடிச்சூழல் எத்தன வீடுகள்ள இருக்கு?"

"அவர் சற்றே சங்கடத்துடன் நெளிந்தார். இந்த ஆள்ட்ட ஏன்டா வந்தோம்? என்று கூட எண்ணியிருக்கலாம்!"

"சரி சார்... அது இருக்கட்டும். நாம ஊரத் திருத்த முடியாது. பிரச்சனையிலிருந்து ஒதுங்கிக்கிடலாம்ல? அதான் தனியார் ஸ்கூல்ல சேக்கலாம்ணு யோசிக்கேன் என்றார். நகரில் சிறந்த பள்ளி எனப் பெயர் வாங்கியிருக்கும் ஒரு மேல்நிலைப் பள்ளியைக் குறிப்பிட்டு அங்க சேக்கலாமா? என்றார்."

"அது உங்க விருப்பம். இடம் கிடைச்சா சேருங்க. ஆனா எங்கிட்ட கேட்டா அரசாங்கப் பள்ளியத்தான் சொல்லுவேன்! என்றேன் சிரித்துக்கொண்டே."

"சில விநாடிகள் டெஸ்க்கில் மெதுவாகத் தாளம் போட்டவர், திடீரென்று கேட்டார். சார் அந்த ஸ்கூல் எச்.எம் ரெட்டியாராமே!"

அதிசயமாக அப்போது என் மூளை சட்டென்று வேலை செய்து விட்டது.

இல்லையே அவர் பேரு மாடசாமின்னுல்ல கேள்விப்பட்டுருக்கோம்! என்றேன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

முதலில் புரியாமல் விழித்த பின் பலமாகச் சிரித்தார். ஓஹோ "நீங்க அப்பிடிச் சொலுதியளோ!"

"அரசுப் பள்ளியில சேத்தா பையங்க கெட்டுப் போயிரவாங்கண்ணீங்களே. எப்படிக் கெட்டு போறாங்கண்ணு புரியிதா? புன்னைகத்தேன்."

சார் நீங்க சொன்னதெல்லாம் உண்மை. சொல்லுறதுக்கு உங்களுக்கு உரிமையிருக்கு ஆனாலும் வேண்டாம். தப்பா எடுத்துக்கிடாதியா வரட்டுமா? விடைபெற்றார்.

முத்துவோடு சேர்த்து, மூன்று மாணவர்கள் சாதிப்பெயர் தாங்கிய வேறொரு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார்கள். அங்கே, மேல்நிலை வகுப்பில் கணக்குப்பிரிவு மட்டுமே உண்டு. இவர்கள் மூவரும் அதற்குத்தகுந்த மதிப்பெண்களைப் பத்தாம் வகுப்பில் பெறாததால், பதினொன்றாம் வகுப்பில் வேறு பிரிவுகளில் சேர்க்கப்பட்டார்கள். அரசாங்கப் பள்ளியில் தான்!

---

**இளங்கோ கண்ணன்**

ப. ப. ஆ

ஊ.ஒ.ந.நி.ப., இருமன்குளம்,

திருநெல்வேலி.

# நீள்கனவு - நான் கற்றுக் கொண்டதும் கற்றுக் கொடுத்ததும்

நீள்கனவு என்னும் வகுப்பறையோடு நான் ஆறுமாத காலங்களாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். இங்குப் பாரதியார், அம்பேத்கார் மற்றும் பெரியார் போன்ற ஆளுமைகளின் புத்தகங்களைப் பற்றிய வாசிப்பும் உரையாடலும் நடைபெறும். பாரதியார் இல்லத்திற்கு அவருடைய பிறந்தநாளன்று சென்றோம். நான் இதுவரை புதுச்சேரியிலுள்ள பாரதி வாழ்ந்த அவருடைய இல்லத்திற்குச் சென்றதே இல்லை. நீள்கனவின் மூலம் நானும் சென்று வரவாய்ப்புக் கிடைத்தது.

பெரியார் சமூக சீர்திருத்தத்திற்காகவும் சாதி வேற்றுமையினை அகற்றுவதற்காகவும் மூடநம்பிக்கைகளை மக்களிடமிருந்து களைவதற்காகவும் பெண் விடுதலைக்காகவும் போராடியவர். சாதிக்கொடுமை, தீண்டாமை, பெண்களைத் தாழ்வாகக் கருதும் மனநிலையை எதிர்த்துக் குரல்கொடுத்தவர். இவருடைய படைப்புகள் குறித்தும் கொள்கைகள் குறித்தும் வாசித்துக் கலந்துரையாடினோம். மேலும், அரியாங்குப்பத்தில் உள்ள பெரியார் படிப்பகத்திற்குச் சென்று பெரியார் கருத்துகளைச் சுமந்து, அவருடன் வாழ்ந்து, அவருடைய குறிக்கோளோடு வாழ்பவர்களுடன் உரையாடல் நிகழ்த்தினோம். பெரியாரின் கொள்கையுடன் வாழ்வதால் வீட்டிலும் சமூகத்திலும் பல இன்னல்களைச் சந்தித்ததாக அவர்கள் கூறினார்கள். மேலும் J.K குழந்தைகள் கல்வி இல்லத்தில் மாணவர்-பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு மற்றும் உரையாடல் நிகழ்ந்தது. பெற்றோர் கூறும் குறைகளுக்கும் மாணவர்களுக்கு எழும் ஐயங்களுக்கும் ஆசிரியர்கள் பதிலளித்தனர். இவை மூன்றும் முப்பெரும் விழாவாக அன்றைய நாளில் அமைந்தது.

குழந்தைகள் பாதுகாப்புக் குறித்து வ. கீதா அவர்களுடன் நடந்த உரையாடல் மிகவும் அருமையாக இருந்தது. ஆசிரியர்களுக்குப் பாடத்தெரியாவிட்டால் அல்லது பாடும் பழக்கம் இல்லாவிட்டால் வகுப்பறை என்பது இசையில்லா உலகமாகிவிடுகிறது. குழந்தைகள் பாடல்களை முதலில் ஆசிரியர்கள் கற்றுக்கொண்டு வகுப்பறைக்குக் கொண்டு சென்றால் கற்பித்தல் எளிமையாகிறது. எடுத்துக்காட்டாக 'புத்தகம் பேசுது புத்தகம் பேசுது' பாடலைக் குறிப்பிடலாம்.

பல ஆவணப்படங்களைப் பார்த்தும் சில இயக்குநருடன் கலந்துரையாடலும் செய்தோம். குறிப்பாக 'மேற்குத்தொடர்ச்சிமலை' திரைப்படத்தின் இயக்குநர் லெனின் பாரதியுடன் கலந்துரையாடினோம். இந்தப்படம் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் எதார்த்தத்தையும் உலகமயமாக்கலின் தாக்கத்தையும் அரசியலையும் அப்பட்டமாகக் கூறிய படம். இயக்குநர் மனதில் நிகழ்ந்த தாக்கத்தைப் படமாக எடுத்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

'We Are Not Come Here to Die' - என்ற ஆவணப்படத்தினை இயக்குநர் தீபா தன்ராஜ் இயக்கியுள்ளார். ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட ஆராய்ச்சி மாணவர் ரோஹித் வெமூலாவைப் பற்றியது இவரின் படம். சாதியம் பெரிய பல்கலைக்கழகங்களிலும் எவ்வாறு வலுப்பெற்று நிற்கின்றது என்பது குறித்து ஆழமாகப் பேசுகின்றது இந்தப்படம். இப்படம் குறித்துக் கலந்துரையாடி கல்வியில் சமத்துவம் பெறுவது குறித்து விவாதித்தோம். ரோஹித்தின் அம்மா என் மனதளவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார்.

'கதைசொல்லி' பவா செல்லதுரையுடன் கலந்து உரையாடினோம். அவர் திருவண்ணாமலை அடுத்துள்ள கிராமத்தில் வசிப்பவர். கதை என்றால் பெரியவர் முதல் குழந்தை வரை அனைவருக்கும் பிடித்தமானவை. கதை கூறுவதன் மூலம் அவருக்கு ஏற்பட்ட சம்பவங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். கதை கூறுதல் என்னும் நிகழ்வால் மாணவர்கள் கற்றல் அடைவுகளை எளிதாக அடைய முடியும் என்று அவர் கூறியது எனக்குப் புதியதாக அமைந்தது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

மேலும், 'தீ வரைவு' பூங்குழலி அவர்கள் இயக்கிய

ஆவணப்படம் சாதிக்குள் நடைபெறும் திருமண முறையில் ஏற்படும் விளைவுகளை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து உளவியல் பாதிப்புக்கான காரணத்தை மரபணு மற்றும் மானிடவியல் மூலம் தெளிவாக விளக்கிய படம். இப்படம் குறித்த கலந்துரையாடல் மிகச் சிறப்பானதாக அமைந்தது. ஆண்பால், பெண்பால் பாலுணர்வை எப்படி வழிநடத்துவது மற்றும் மாணவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது ஆகியவைக் குறித்துக் கலந்துரையாடினோம். நான் பல செய்திகளைக் கற்றுக்கொண்டேன். வகுப்பறையில் சில செய்திகளைக் கொண்டு சென்றேன். நான் பறை அடிப்பதற்குக் கற்றுக்கொண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தெரியாத பல விசயங்களைக் கற்றுக்கொண்டு பல்வேறு விதமாக மாணவர்களிடம் கொண்டு சேர்க்கிறேன்.

## நீள்கனவும் மலர்மன்னன் பாடமும்:

நான்காம் வகுப்பில் மலர்மன்னன் என்னும் பாடத்தைக் களப்பயணம் மூலமாகவும் துப்புரவாளர்களோடு கலந்துரையாடல் மூலமாகவும் கொண்டு செல்ல முடிவு செய்தேன்.

## திட்டமிடல்:

மாணவர்கள் துப்புரவாளருடன் எப்படி நடந்து கொள்வது என்பது பற்றி முதலில் வகுப்பறையில் கலந்துரையாடுதல் அவர்களிடம் எப்படி மரியாதையுடன் நடந்து கொள்வது என்பது குறித்தும் பேசுதல், அவர்களிடம் என்ன மாதரியான வினாக்கள் கேட்பது குறித்தும் கலந்துரையாடுதல்.

உதாரணமாக,

- இந்தப்பணியை விரும்பி செய்கிறீர்களா? இல்லையா?
- நீங்க படித்துள்ளீர்களா? படித்தீர்கள் என்றால் எதுவரை படித்துள்ளீர்? படிக்கவில்லையென்றால் ஏன்?
- உங்கள் குழந்தைகள் படிக்கிறார்களா?
- சமூகத்தில் உங்களைச் சமமாக மதிக்கின்றார்களா?
- குடும்பத்தொழிலாக அல்லது பரம்பரை பரம்பரையாகச் செய்கிறீர்களா?
- குப்பைகள் சேராமல் இருப்பதற்கு உங்கள் ஆலோசனைகள் என்ன?
- இந்த வேலையினால் ஏற்படுகிற ஆபத்துகள் என்ன?

## மலர்மன்னன் - களப்பயணம்:

தமிழ்மொழி பற்றிய கற்றல் நிகழ்வில் மாணவர்கள் மிகவும் ஆர்வமுடன் செயல்படுவதற்குப் பல்வேறு செயல்பாடுகள் இருந்தாலும் களப்பயணம்



சென்று அவர்களே நேரடியாக உற்று நோக்கி கலந்துரையாடல் செய்யும் போது மிகவும் மகிழ்வுடன் நிகழும் என்பது என்னுடைய நம்பிக்கையாக இருந்தது. அவர்களிடம் பாடம், சமூகம் குறித்த புரிதலை எளிமை ஆக்குகிறது. வகுப்பறையில் கற்பித்தலை விட நேரடி கலந்துரையாடல் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது.

சமூகத்தோடு தொடர்புபடுத்திக் கற்பித்தால் கற்றல் சிறப்பாக அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு பெற்றோர்களையும் அழைத்துக்கொண்டு துப்புரவாளர்களிடம் கலந்துரையாட களப்பயணம் மேற்கொண்டோம்.

## அனுபவப்பகிர்வு:

வகுப்பறையைத் தூய்மையாக வைத்திருப்பது மிகவும் பெரிய சவாலாக இருந்தது. களப்பயணம் சென்று துப்புரவாளருடன் நேரடி உரையாடல் முடிந்தவுடன் வகுப்பறையே தலைகீழாக மாறியது. மாணவர்கள் கற்றலோடு அவர்களைச் சுற்றி பணிபுரியும் மற்ற தொழிலாளர்களையும் நேரடியாக உற்று நோக்குவதன் மூலம் அவர்களிடையே குறிப்பிடத் தகுந்த மாற்றத்தைக் காண முடிந்தது. தொழில்களில் உள்ள கடினத்தன்மை மற்றும் ஆபத்துக்களை யார் எடுத்துக் கூறினாலும் அது மாணவர்களிடம் சென்றடையவில்லை. அவற்றை நேரடியாக அவர்களே கண்டறிந்தும் கேட்டறிந்தும் மனப்பூர்வமாக உணரும் பொழுது அவர்களால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. ஒரு வகுப்பு மட்டுமில்லாமல் இதைப்பார்த்து அனைத்து வகுப்பறைகளும் இப்பொழுது தூய்மையாக வைத்துக்கொள்கிறார்கள்

இந்தப்பணி இவர்களுக்கென்றது என்றில்லாமல் எல்லா வேலைகளையும் நாம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மாணவர்களுக்கு வந்தது. வகுப்பறை மற்றும் நம்ம வீடு என்று தம்முடைய சிறு சிறு வேலைகளைத் தாமே செய்யக் கற்றுக்கொள்கிறார்கள்.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சமூகத்தோடு ஒரு இணைப்பை இந்தக் களப்பயணம் ஏற்படுத்தியது.

## செயல்பாடுகளில் இடர்பாடுகள்:

மாணவர்கள், பெற்றோர்கள், துப்புரவாளர்கள் மூவரையும் ஒன்றிணைக்கும் பணி மிகவும் கடினமாக இருந்தது. மூவரையும் ஒருங்கிணைத்த பிறகு உரையாடலின் மூலம் சுத்தத்தின் தேவையை மாணவர்களுக்குக் கொண்டு செல்வது மிகவும் எளிமையாக இருந்தது. பெற்றோர்களும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.

## கற்றல் விளைவுகள்:

களப்பயணத்திற்குப் பிறகு என் மாணவர்கள் மற்றவர்களுடைய பணி என்று பாராமல் எல்லா வேலைகளும் நமக்குரியவை என்று எண்ணி தங்களால் முடிந்த உதவிகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

அதோடு நின்றுவிடாமல் மற்ற வகுப்புகளுக்கும் எடுத்துக்கூற ஆரம்பித்தார்கள். அவர்கள் வகுப்பறையை மட்டும் தூய்மை செய்வதோடு மட்டுமல்லாமல் மற்ற வகுப்புகளுக்கும் தூய்மைப்படுத்த மாணவர்களுக்கு உதவியாக இருந்தார்கள்.

மாணவர்கள் பள்ளியை மட்டுமில்லாமல் தன் வீட்டையும் தூய்மையாக வைத்திருக்கப் பழகினார்கள்.

தன்னுடைய பெற்றோருடன் சேர்ந்து தன் தெருக்களையும் தூய்மையாக வைத்திருக்கப் பழகினார்கள்.

இவ்வாறு வாழ்க்கையோடு தொடர்புப்படுத்தி கற்றல் அமைந்தால் உடனடியாகக் கற்றுக்கொள்கிறார்கள். இக்கற்றல் சமூகத்தில் ஆக்கப்பூர்வமான விளைவுகளை உண்டாக்கியது. கல்வி என்பது படிப்பு மட்டுமின்றி அன்றாட வாழ்க்கையோடு தொடர்பு கொண்டது என்பதற்கு இவைகளும் உதாரணம் எனலாம். சமூகத்துடன் இணைந்து கற்றல் மிகவும் முக்கியமானது என்று நான் பார்க்கிறேன். சமூகத்துடன் தொடர்புப்படுத்தி கற்கும் கற்றல் மாணவர்களிடையே பெரிய அளவில் மாற்றங்களைக் கொண்டு வரும்.



**நித்யா,**
PSBB Millennium School,
கடலூர்.



# பள்ளிக்கூடமும் பாலின சமத்துவமும்

மாற்றங்கள் மட்டுமே மனித சமுதாயத்தை மேம்படுத்தும். பாலின சமத்துவம் தொடர்பான மனப்பான்மையும், மாற்றங்களும் மட்டும் தான் நம்மை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும்.

## நீள் கனவு :

சமுதாயம் பற்றிய புரிதலை மாணவர்களிடம் ஏற்படுத்த உருவாக்கப்பட்ட திட்ட வரைவே 'நீள்கனவு'. பாலின சமத்துவம், மத ஒற்றுமை, சமய நல்லிணக்கம் பற்றிய புரிதலை ஏற்படுத்தவும், மாணவர்களைப் பகுத்தறிவுடன் சிந்திக்க வைக்கவும் நீள்கனவு மூலம் செயல்பாடுகளைக் கொண்டு சென்றேன்.

குழந்தைகளிடம் சமத்துவத்தை எவ்வாறு புரிய வைப்பது? சாதி, பாலின பேதம், பாலியல் வன்முறை, குடும்ப அமைப்புகள் பற்றி நம் பாட புத்தகத்தில் என்ன தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன? இது குறித்த உரையாடலும், புரிதலும் தொடக்க வகுப்பு மாணவர்களுக்குத் தேவையா? என்ற கேள்விகளோடு நீள்கனவு செயல்பாடுகளை மாணவர்களிடம் கொண்டு சென்றேன்.

## பாலினம் தொடர்பான பாடல் மற்றும் உரையாடல்

எப்பொழுதும் குழந்தைகளுக்கு நெருக்கமான பாடல்களோடு வகுப்பைத் துவங்குவது எங்களுக்கு ஒரு வழக்கம். ஐந்தாம் வகுப்பு பாரதிதாசனின் பெண்கல்வி பாடல், பாரதியாரின் கும்மியடி பாடல்கள், ஆடல் பாடல்களுடன் கற்றல் இனிமையாகப் பயணப்பட்டது. ஆனால் ஆடல், பாடலுடன் இப்பாடம் நிறைவடையவில்லை. இப்பாடல்கள் தொடக்க வகுப்பில் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? பாலின

சமத்துவம், பெண்கல்வி தேவை, எதுவரை? ஆம். வகுப்பு மாணவிகள், “நாங்கள் அனைவரும் படித்துக்கொண்டுதானே இருக்கிறோம். மிஸ், Boys விட நல்லா படிக்கிறோம்” என்றார்கள் . ஆம். கண்டிப்பாக. ஆனால் இது எதுவரை தொடர்கிறது?. பள்ளிக்கல்வி முடித்த பின்னரும் நீங்கள் விரும்பிய profession தேர்ந்தெடுக்க சுதந்திரம் அளிக்கப்படுகிறதா? எல்லா துறைகளிலும் பாலின சமத்துவம் உள்ளதா? எடுத்துகாட்டாக. மேஸ்திரிக்கும், சிற்றாளுக்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறதா? என்று பல கேள்விகள் என் மனதில் ஓடின. நாங்கள் அவர்களுக்கு ஒரு செயல்பாடு கொடுத்தோம். ஏன் பல ஆண்டுகளாக சிற்றாள்களாக பணிபுரியும் பெண்கள் மேஸ்திரியாகப் பணி உயர்வு பெறுவதில்லை? Marine engineering படிக்க ஆசைப்படும் பெண்ணுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படுகிறதா? ஏன் சில துறைகள் பெண்களுக்கானதாக இன்று வரை இல்லை. ஏன் தொடக்க வகுப்புகளில் அதிக பெண் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். ஆண்களால் இந்த பணியை அர்பணிப்புடன் செய்ய முடியாதா? போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கானக் காலமாக உரையாடலை எடுத்துச் செல்லும் இடமாக வகுப்பறை அமைந்தது. உரையாடலுக்குப் பின் பாடல்கள் அதன் அர்த்தத்துடன் அல்லது பாடநோக்குடன் பாடப்பட்டதை உணர்ந்தேன். “நீள்கனவு” என்பது கல்வித்திட்டமாக இருந்த எனக்கு அது தான் கல்விச் செயல்பாடு என்பதை உணரவைத்தது.

**Who is the head of our family?**

இது EVS பாடத்தில் கேட்கப்பட்ட கேள்வி.

இந்த கேள்விக்கு மாணவர்களிடம் பல விதமான பதில்கள். சில மாணவர்கள் அப்பா என்றனர். சிலர் தாத்தா என்றனர். சிலர் அம்மா என்றனர். “அது எப்படி அம்மா குடும்ப தலைவர் ஆக முடியும்?” என்று சிலர் எதிர்கேள்வி கேட்டனர். ஆனால் அம்மா என்று கூறியவர்களோ தங்கள் பதிலில் பின் வாங்குவதாய் இல்லை. “எங்கள் வீட்டில் அம்மாதான் வேலைக்குச் செல்கிறார், சமைக்கிறாள், எங்களுக்குத் தேவையானதை வாங்கி தருகிறாள். அப்போது அம்மாதானே குடும்பதலைவர்” என்று தங்கள் கருத்தில் பிடிவாதமாக இருந்தனர். ஒரு குடும்பத்தில் குடும்ப தலைவரை எந்த காரணிகள் தீர்மானிக்கின்றன? பெண் ஏன் குடும்ப தலைவராக இருக்க கூடாது? என பல கேள்விகள் கேட்டனர். கேள்வி விவாதத்திற்கு உள்ளானது. சில மாணவர் “எங்க அப்பா வேலைக்குப் போறார். வீட்டு சாமான்லாம் வாங்கி தருவார். எங்களுக்குத் தின்பண்டம் வாங்கி தருவார் . எங்க அம்மா சமையல் செய்வாங்க, வீட்டு வேலைகள் செய்வாங்க. “

“உங்க அப்பா வீட்டு வேலைகள் எதாவது செய்வாரா?” இது என் கேள்வி.” சில சமயம் சமைப்பார். கடைக்குப் போவார், சின்ன சின்ன வேலைகள் செய்வார் மிஸ்.”

“உங்க அம்மா பணம் சம்மாதிப்பாங்களா ?”

“ஆமாம் மிஸ்.. தையல் தைப்பாங்க. என் டிரஸ்லாம் அவங்கதான் தைச்சாங்க..” என்று பதில் .

சில அம்மாக்கள் ஹோட்டல் வேலை, கம்பனி வேலை, என எல்லா அம்மாக்களும் எதாவது ஒரு வேலைக்குச் செல்கின்றனர். பணம் ஈட்டுகின்றனர். அப்போ யார் குடும்பத் தலைவர். குடும்பத் தலைவரை எந்த காரணிகள் (காரணங்கள்) தீர்மானிக்கின்றன? என்றேன்.

“யார் அதிகமாக குடும்பத்திற்காக வேலை செய்கிறார்களோ அவங்க தான் குடும்பத் தலைவர் மிஸ்.” “இல்ல எப்பவும் தாத்தா இல்லனா அப்பாதான் குடும்பத் தலைவரா இருப்பாங்க மிஸ்.,” என பலவாறான பதில்கள். “எங்க அப்பா எங்க கூட இல்ல மிஸ். அம்மாதான் வேலைக்குப் போறாங்க, சமைக்கிறாங்க, வீட்டு வேலைகள் செய்றாங்க. அப்போ அம்மாதான் குடும்பத் தலைவர் மிஸ்.” “எங்க அப்பா குடிப்பாரு! எப்பாவது வேலைக்குப் போவாரு! ஆனா அந்த காசுல குடிப்பாரு! வீட்டு செலவுக்குளாம் காசு தர மாட்டாரு!. அம்மா வேலைக்குப் போனாதான் எல்லாம். அதனால எங்க அம்மாதான் குடும்பத் தலைவர் மிஸ்.” உங்களுக்குச் சரி என்று தோன்றுகிற விடையை எழுதுங்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் யார் அதிக உழைப்பைத் தருகிறார்களோ அவர்களே குடும்பத் தலைவர். சில குடும்பங்களில் அம்மா, சில குடும்பங்களில் அப்பா என்று விவாதத்தை



முடித்தேன். ஆனால் அந்த கேள்வியின் தாக்கம் என்னுள் ஓயவில்லை. சமுதாயம் யாரைக் குடும்பத் தலைவராக அங்கீகரிக்கிறது? எவ்வளவு அதிகமாக உழைத்தாலும், ஒரு பெண்ணை குடும்பத் தலைவராக எத்தனை குடும்பங்கள் ஏற்றுக் கொள்கின்றன? ஒரு முடிவுக்கு இந்த விவாதம் வரவில்லை என்றாலும், என் குழந்தைகள் சிந்திக்கத் தொடங்கினர்.

## சமூக மாற்றத்திற்கானக் கதை புத்தகங்கள்

சமூக நோக்குடைய பல்வேறு கதை புத்தகங்களை மாணவர்களுக்கு எடுத்துச் சென்றேன். ”ஏன் என்று கேள்வி கேட்ட சிறுவன்”, “கஸ்தூரிபாய்” “ஏன் ஏன் சிறுமி” “ஆண்பிள்ளை யார்? பெண்பிள்ளை யார்?” போன்றவை இவற்றுள் சில.

“டீக்கடை” என்ற புத்தகத்தைக் குழு வாசித்தலுக்கு உட்படுத்தியபோது, தீண்டாமை பற்றிய கலந்துரையாடல் நிகழ்ந்தது. பிறப்பு மற்றும் தொழில் அடிப்படையில் வேற்றுமை கற்பிப்பது தவறு என்று உரையாடினர். ஒவ்வொரு கதை வாசிப்பும், மாணவர்களுக்குப் புதுவிதமான உணர்தலுக்கும், புரிதலுக்கும் வழி வகுக்கிறது.

## என் உணர்தல்

“நீள்கனவு” நாங்கள் கற்க உதவுவதுபோல் மாணவர்களுக்கு அவற்றை எடுத்துச்செல்ல ஏதுவானதாகவும் இருக்கிறது. இதனால் என் மாணவர்களிடம், குறிப்பாக, அரசுப்பள்ளி மாணவர்களிடம், ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக் கானக்கல்வி என்னவோ அதை எடுத்துச் செல்ல முடிந்த உணர்வைப் பெறுகிறேன். சமீபத்தில் நான் நடத்தும் எல்லா பாடங்களிலும் சமூகம், பொருளாதாரம், பாலினம், சாதி ஆகியவற்றை மனதில் கொண்டு செயல்படுவதாக மாறியிருப்பதைப் பெருமையுடன் சொல்கிறேன். அரசுப்பள்ளி இன்று குறிப்பிட்ட மாணவர்களுக்கானதாக ஆகியுள்ளது. அவர்களுக்கான ஆசிரியராக நான் மாறுவதை என் வளர்ச்சியாக நான் உணர்கிறேன்.



**சங்கரதேவி** தொ.ப.ஆ
அ.தொ.ப, அபிஷேகப்பாக்கம்

# பாடல்கள் வழிப்பாடம்

ஆனந்தரங்கப்பிள்ளை அரசு சிறப்புப்பள்ளியில் நான் செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு ஆசிரியராகப் பணிபுரிகின்றேன். நான் சென்ற ஆண்டு என்னுடைய இளமுனைவர்பட்ட ஆய்வுக்காகச் சிறுவர் இலக்கியங்கள் சிலவற்றை படித்தேன். அவற்றில் புதுவைக் கவிஞர் துரை. மாலிறையன் இயற்றிய சிறுவர் இலக்கியங்கள் பற்றி நான் ஆய்வு மேற்கொண்ட போது அவருடைய சிறுவர் நூல்களில் அமைந்துள்ள பெரும்பாலான பாடல்கள் மாணவர்களின் பாடப்புத்தகக்தோடு தொடர்புடையதாக அமைந்துள்ளதை உணர்ந்தேன். இந்தப்பாடல்கள் அனைத்தும் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், அறிவை வளர்ப்பதாகவும் அமைகின்றன. அதனால் இத்தகைய பாடல்களை என்னுடைய மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று எண்ணினேன். வகுப்பறையில் நாம் படங்கள் வரைபடங்கள், உண்மைப்பொருட்கள் எனப் பல விதமான கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம் நேரத்தையும் உழைப்பையும் செலவழித்து உருவாக்கும் இது போன்ற உபகரணங்கள் பல சமயங்களில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டு வதாக மட்டுமே அமைகின்றன. மேலும், இவை மாணவர்களுக்குக் குறிப்பிட்ட பாடப்பொருளை மட்டும் விளக்குவதாக அமைகின்றன. ஆனால், சிறுவர் பாடல்கள் பாடப்பொருளை நன்றாகப் புரிந்து கொள்வதற்கும் ஏற்ற சிறந்த கருவியாகப் பயன்படுகின்றன. நான் என்னுடைய வகுப்பறையில் பாடத்தோடு தொடர்புடைய நிறங்கள், விலங்குகள், பறவைகள், எண்கள் பற்றிய பல பாடல்களைப் பயன்படுத்தியுள்ளேன். பின்வரும் பாடல்களைப் அதற்கு உதாரணமாக அமைகின்றன.

### நிறத் தொடர்கள்

பச்சை பசேல் என்று<br>
  பச்சைக்கிளி பறக்கும்<br>
செக்கச் செவேல் என்று<br>
  சேவல் கொண்டை இருக்கும்<br>
வெள்ளை வெளேர் என்று

### ஆலமரம்

தாடிவைத்த சாமியார் போல்<br>
  தனியே நிற்கும் ஆலமரம்<br>
ஓடிச்சென்று சிறுவரெலாம்<br>
  ஊஞ்சல் ஆடும் ஆலமரம்<br>
பாட்டி தையல் இலை தைக்கப். . .

செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்கு மொழி கற்பிக்க நாங்கள் பாடல்களை அதிகமாகப் பயன்படுத்துகின்றோம். மேலும், அவர்களின் பேச்சு வளர்ச்சிக்காகவும் குரல் வளத்தை இனிமையாக்கவும் பாடல்களைத் தாளத்துடனும் அபிநயத்துடனும் கற்பிக்கின்றோம்.

பின்வரும் பாடல்கள் படத்தோடு தொடர்புடைய பாடல்களுக்கு உதாரணமாக அமைகின்றன.

### பாடம் : தமிழ் வகுப்பு : 5 செய்யுள் பகுதி : திருக்குறள் வான் சிறப்பு

வானம் இன்றேல் வாழ்வில்லை

  வயிற்றுப் பசிக்குச் சோறில்லை

தானம் இல்லை தவமில்லை

  தாவரத்தின் வேரில்லை

இப்பாடல் திருக்குறளின் வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது.

### பாடம் : தமிழ் வகுப்பு : 5 தலைப்பு : இலக்கணம் - மயங்கொலிகள்

### வளையும் வலையும்

| | | |
|---|---|---|
| எலியும் | மண்ணில் | வளை தோண்டும் |
| எந்த | நண்டும் | வளை தோண்டும் |
| மீனைப் | பிடிக்க வலை | வேண்டும் |

### கூத்துக்கலை

| | | |
|---|---|---|
| கல்லால் | ஆனது | மலை |
| கடலில் | வருவது | அலை |
| கோவில் | உள்ளே | சிலை |

லகர, ளகர ஒலிகள் மயங்கொலிகளாக உள்ளன. அதனை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கும் வகையில் மேற்கண்ட பாடல்கள் அமைந்துள்ளன.

## பாடம்: கணிதம் வகுப்பு: 5 தலைப்பு: பின்னம்

## பின்னம்

ஒற்றை இரண்டாய்ப்

பிரிப்பதும் பின்னம்

ஒன்றை நூறாய்

உடைப்பதும் பின்னம்

இப்பாடல் பின்னம் என்றால் என்ன என்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இவை போன்று மேலும் பல, பாடப்புத்தகத்தோடு தொடர்புடைய பாடல்கள் துரை. மாலிறையனின் சிறுவர் இலக்கிய நூல்களில் உள்ளன. மேலும், கணிதம், அறிவியல் பற்றிய பாடல்களும், தேசத்தலைவர்கள் பற்றிய பாடல்களும் பல உள்ளன.

## முடிவுரை

1. பாடல்களாகக் கற்பிக்கும் பொழுது மாணவர்கள் ஆர்வமுடன் கற்றலில் ஈடுபடுகின்றனர் மற்றும் மாணவர்களின் நினைவாற்றல் வளர்கிறது.

2. மாணவர்களுக்கு மொழி கற்பிக்கப் பாடல்கள் சிறந்த கருவியாக அமைகின்றன. உதாரணமாக, சொற்களஞ்சியம் வளர்த்தல் மற்றும் அருஞ் சொற்பொருள், எதிர்ச்சொல், சேர்த்து எழுதுக, பிரித்து எழுதுக, ஒருமை, பன்மை, அடுக்குத்தொடர்,



இரட்டைக்கிளவி, உவமை, உருவகம், உள்ளிட்ட அனைத்தையும் எளிமையாகக் கற்பிக்கப் பாடல்கள் பயன்படுகின்றன.

4. ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பற்றி மாணவர்களுக்கு ஆர்வமூட்டவும், பாடக்கருத்தைத் தெளிவுபடுத்தவும் நாம் பாடல்களைப் பயன்படுத்தலாம்.

பாடல்கள் வழியாகக் கற்பித்தலில் பல நன்மைகள் உள்ளன. மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் தான் நன்றாகப் படிக்கும் குழந்தைகள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இத்தகைய பாடல்களை இசை கூட்டிப் பாடினால் பசை தடவிய அஞ்சல் தலைபோல் மாணவர்கள் இதயத்தில் ஒட்டிக்கொள்ளும்.



**ஸ்ரீ. ஜெயஸ்ரீ,**
சிறப்பாசிரியை
தொ.ப.ஆ
ஆ. அ. சி. ப. பிள்ளைச்சாவடி

# சமூகப்புரிதலை வழங்கிய பாடங்கள்

இளமையில் கல், கற்க வேண்டிய கல்வியை அளவுக்கே
கற்றால் கடைசி நாள்வரை துணையாக இருக்கும்
சமூகத்தை நோக்கி நகர்ந்த தமிழர்கள்:

மாணவர்கள் பாடத்தைக் கற்றுக்கொள்ளும் பொழுது வெறும் ஏட்டளவில் என்றல்லாமல் வாழ்வோடு இணைய வேண்டும். வாழ்வு என்பது சமூகத்தோடு இணைந்ததாக மாறவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்ளும் போது, அது அவர்கள் வாழ்நாள் முழுவதுமாக பசுமரத்தாணி போல பதிந்து விடுகிறது. இதனால் மாணவர்கள் தன்னை சமூக மாற்றத்திற்கானவராகப் பார்க்க முடிகிறது என்பதை சில பாடங்களின் வாயிலாக உணர முடிந்தது. அதற்கு உதாரணமாக சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

“தமிழன் இதயம்” தமிழர்களின் வாழ்க்கை பற்றிய பாடல். இப்பாடலை முன்வைத்து மாணவர்களுக்குத் தமிழர்களின் வெவ்வேறு வாழ்க்கை முறையைப் பற்றி அறியும்படி செய்தோம். அதற்கான உரையாடலை ஏற்படுத்தினோம். மாணவர்களுக்கு எளிதாகப் புரியும் வகையில் எவ்வாறு எடுத்துரைக்கலாம் என்று எண்ணிய போது ராஜகுமாரி அக்காவை முடிவு செய்தோம். அக்கா எம் பள்ளியில் பால் காய்ச்சுபவர். அவரை அழைத்து அவரைப் பற்றியும் அவரது வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும் பகிர்ந்து கொள்ளும்படி நடத்தினோம். இந்த நேர்காணல் சிறப்பாக இருந்தது.

ராஷகுமாரி தன்னைப் பற்றிய முழுத்தகவல்களை மாணவர்களுக்குத் தெரிவித்தார். “நான் சின்னாத்தாள் பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை படித்தேன். பின் திருமணமானது. ஒரு பிள்ளையும் ஆணும் பெண்ணும் பிறந்தனர். பின் என் கணவர் இறந்தார். குழந்தைகளைக் காப்பாற்ற நெசவு வேலை, கொசுவத்தி கம்பனி வேலை எனப் பல இடங்களில் வேலைசெய்து பின் விதவை என்பதால் இவ்வேலை கிடைத்தது என விவரித்தார். தன் பிள்ளைகளைப் படிக்க வைத்தது” என அவர் உரை மாணவர்களுக்கு வாழ்க்கையை எடுத்துரைத்தது. பின்பு மாணவர்கள் பல கேள்விகளைக் கேட்டனர்.

அக்கா, உங்களுக்கு நண்பர்கள் உள்ளனரா?

உங்கள் பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள்?

நீங்கள் எந்த ஊருக்கெல்லாம் சென்றிருக்கிறீர்கள்?

உங்கள் அம்மா அப்பா பற்றிச் சொல்லுங்கள்?

எனப் பலப்பல கேள்விகளைக் கேட்டனர்.

உரையாடல் முடிந்த பிறகு கேட்டறிந்த தகவல்களைப் படமாக வரைந்து அதை ஒரு கதையாக உருவாக்கும் திட்டம் தீட்டப்பட்டது. நான்கு தலைப்புகளில் கதை எழுதினர். “ராஜகுமாரியின் கதை”, ராஜகுமாரியும் தோழிகளும், ராஜகுமாரி பால் காச்சும் அக்காதலைப்புகளில் ஒவ்வொருவரும்



கதை எழுதி படம் வரைந்திருந்தனர்.

சமூக நோக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்து கொள்ளும் அவர்களின் திறனை என்னவென்று எடுத்துரைப்பது வகுப்பிலுள்ள இதில் அனைவரது கற்பனைத்திறனும் வெளிப்பட்டது. இப்பொழுது தமிழன் இதயம் பாடலைச் சேர்ந்திசைக்கக் கற்றுக் கொடுத்த பொழுது அழகாகப் பாடினர்.

## இயற்கை:

இது போன்ற என் முயற்சிக்கு மற்றுமொரு உதாரணம் மரம் பற்றிய ஒரு தொகுப்பாய் மாணவர்கள் பல்வேறு மரங்களின் பெயர்களை அறிந்திருந்தாலும் அவற்றைப் பற்றிய தகவல்களை அறிய வழிவகுத்தனர். சமூகத்தில் நாம் அன்றாடம் பாதுகாப்பாக ஆனால் அறிமுகமில்லாமல் இருந்தன. ஆனால் அவர்களின் கற்பனைத்திறனைத் தூண்டியவுடன் ஒவ்வொரு வாரமும் ஒரு கதையாக மாறின. மரத்தில் மாங்காயும் தேங்காயும், பூத்துக் குலுங்கியது அவர்களின் விரல்கள் செய்த பாடங்கள் இதிலிருந்து அவர்கள் ஒவ்வொருவரும் வரைந்த விதத்தை ஒப்பிட்டுப் பார்த்து சமூக நோக்கோடு பார்க்க ஆரம்பித்தனர்.

## கடிதம்:

இவ்வாண்டு இது போல் இன்னொன்றையும் செய்தோம். மாணவர்கள் நண்பர்கள் என்ற புதிய ஒரு சமூகத்தோடு தொடர்புடைய நிலைகள் பார்த்தது போன்று அவர்கள் கடிதத்திலேயே உரையாட ஆரம்பித்தனர். கற்பனைத்திறனோடு, எழுத்தாளர் நடிகர்கள் என்று தன்னை உருவகித்துக் கொண்டனர். கடிதத்தில் ஓவியமெல்லாம் வரைந்திருந்தனர். நண்பர்களை அதிகப்படுத்துவதில் ஒவ்வொருவரும் நான் நீ என்று போட்டிப் போடுவதில் மும்பரமாகயிருந்தனர். அவர்கள் பேனா நண்பர்களைப் பற்றி மற்ற வகுப்பு நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர். அவர்கள் பெருமிதம் கொண்டனர். சிலர் அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களின் நடத்தையை மாற்றிக் கொண்டனர்.

## வில்லுப்பாட்டு

சமுதாயத்தைக் கலை மூலம் தொடர்பு கொள்ளலாம் என விவாதித்து முடிவு செய்தோம். வில்லுப்பாட்டு ஒன்றை உருவாக்கினர். அவர்களே மெட்டு, இசை என்று உருவாக்க முன்வந்தனர் வில்லுப்பாட்டில் பல்வேறு கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகக் கூறினர். யாருக்கு அடுத்தது யார், அந்தக் கதாப்பாத்திரம் யார், என்பதில் அவர்கள் சரியாகவும்! கவனமாகவும் இருந்தனர்.

அவர்கள் ஆர்வமாக எப்படி, எவ்வாறு ஒரு பாடத்தையே மனப்பாடம் செய்தனர் என்பது ஒரு புதியதாக உள்ளது. ஏனென்றால். கடினமான வார்த்தைகள் என்பது எங்கே எளிதாகிப் போனது கண்டு தான் மலைத்தே போனேன். வார்த்தை மாறாமல் வாக்கியம் மாறாமல் மனப்பாடம் செய்ய மெல்ல கற்போராலும் முடிந்தது.

வில்லுப்பாட்டிற்குத் தேவையான உபகரணங்களைச் சேகரித்து உருவாக்குவதில் அவர்கள் ஆர்வமாயிருந்தனர். மாணவர்களிடம் எந்த ஏற்றத்தாழ்வையும் நான் இங்கே காணவில்லை அவர்கள் ஒற்றுமையாக இருந்தது மிக்க மகிழ்ச்சியளித்தது.

## சமூகப் புரிதலால் மாணவர்களும் பாடங்களும்:

சமூகத்தோடு ஒட்டி வாழ இது போன்ற நிகழ்வுகள் வழி வகுக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனக்கு இது போன்ற அவர்களது பழக்கவழக்கங்களை நடை, உடை, பழக்கவழக்கங்களில் நிறைய மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. அவர்கள் கடிதத்தில் எழுதும் போது தங்களது எண்ண ஓட்டங்களை முழுவதுமாகச் சித்தரித்திருந்தனர். இதைத்தொடர்ந்து அவர்கள் பல்வேறு பாடங்களையும் நாடகமாக மாற்றி அவர்களே தங்கள் சொந்த நடையில் வசனங்களை எழுதி நாடகமாக்கினர். மன்னர் மன்னன், தோழிக்கு விருந்து ஆகிய பாடங்களை நடித்து நடிகர்களாக மாறினர். அவர்களே பல்வேறு கதைகளை உருவாக்கி நாடகமாக மாற்றினர். அவர்கள் சமூகத்தில் இருக்கும் சிக்கல்களையும் நாடகமாக மாற்றினர். ச மூ க நோக்கத்தோடு, சமூக மாற்றங்களையும் அவர்கள் நடிப்பிற்கு உட்படுத்தினர். மன்னர் மன்னன் என்ற பாடத்தில் உள்ள கருத்து அவர்கள் மனதில் ஆழப்பதிந்து மனமாற்றத்தை ஏற்படுத்தியது.



**ஷாலினி ஷ்யாமளா**
தொ.ப.ஆ
சவரிராயலு நாயக்கர்
தொடக்கப்பள்ளி.



Working together as a school community
Learning culture in the classroom
Education philosophy to practice
Teaching ideas, projects, TLMs, assessments














*Published by Chippi Rajan printed by S. Velmorougane on behalf of Azim Premji Foundation for Development . Printed at Mother's Grace Printers & Graphics, No.7, Sagayamatha Street, VOC Nagar, (Near akkasamy madam) Muthialpet, Puducherry - 605 003. Published from No.5, Nessa Illam, PSCB Nagar, Mudaliarpet P.O, Puducherry - 605004. Editor Gurpreet Kaur*

# Glimpses from Medaiyil Thisaimaani April 2019

